# தமிழும் பிற பண்பாடும்

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
*41–பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,*
*சென்னை—600 098.*

முதல் பதிப்பு: மே, 1973
இரண்டாம் பதிப்பு: ஆகஸ்டு, 1974
மூன்றாம் பதிப்பு: மே, 1980

© Dr. T. P. Meenakshisundaran

விலை: ரூ. 4-00

அச்சிட்டோர்:

நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ்,
சென்னை-600 098.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழர் பண்பாடு | 9 |
| 2. | எங்கும் தமிழர் | 17 |
| 3. | தமிழும் பிற பண்பாடும் | 20 |
| 4. | தமிழ்ச் செல்வாக்கு 1. இந்தியாவில் | 26 |
| 5. | தமிழ்ச் செல்வாக்கு 2. இந்தியாவுக்கு வெளியே | 69 |
| 6. | தமிழில் பிறமொழிச் சொற்கள் | 79 |
| 7. | அன்பும் என்பும் | 90 |
| 8. | அவிரோதம | 97 |
| 9. | தமிழர் திருநாள் | 103 |
| 10. | கோயில் | 106 |
| 11. | கோயிற்கலை | 110 |
| 12. | சமய வாழ்வு | 113 |
| 13. | அல்லியரசாணிக் காப்பியங்கள் | 115 |
| 14. | அம்மானைப் பாடல்கள் | 120 |

# முன்னுரை

நமது பாரத தேசம் பல மொழிகளைப் பேசுகிற பெரிய தோர் உபகண்டம். இந்தப் பெரிய நாட்டில் வாழ்கிற மக்கள் மொழி, நடையுடை பாவனை, பழக்க வழக்கம் முதலானவற்றில் வேறுபாடுள்ளவராகக் காணப்பட்டாலும் அடிப்படையில் இவர்களிடையே ஒரேவிதமான பண்பாடு ஊடுருவிக் காணப்படுகிறது. தமிழர்,தெலுங்கர், மலையாளம், கன்னடர், மராட்டியர், வங்காளர் முதலான பாரத தேசத்து மக்களிடையே ஒரே பண்பாட்டு உறவு தொன்று தொட்டு இருந்து வருகிறதென்றாலும், சுதந்திரம் பெற்ற தற்குப் பிறகு இந்தப் பண்பாடு மேலும் ஒன்றி இணைந்து நெருங்கிக் காணப்படுகிறது. பாரத நாட்டில் வாழும் எல்லா மொழியாரும் தம்மைச் சூழ்ந்துள்ள சகோதர மொழியாரோடு நட்புறவு கொண்டு ஒன்றுபட்டு இணைந்து வாழ முனைகின்றனர். ஒவ்வொரு மொழியாரும் தங்களுக்கு அருகில் வாழ்கிற மற்ற மொழியாளரின் பண்பாடுகளை அறிந்து ஒன்றுபட்டு வாழ முயல்கிறார்கள். ஒருவரை யொருவர் புரிந்துகொண்டு நெருங்கிப் பழகி நட்போடு வாழ விழைகிறார்கள். இந்த நிலையில் **''தமிழும் பிற பண்பாடும்''** என்னும் இந்நூல் வெளிவருகிறது. பன்மொழிப் புலவர் பேராசிரியர் டாக்டர் **தெ. பொ. மீ.** அவர்கள் தேவையான நேரத்தில், தேவையான இந்த நூலை எழுதியுதவி யுள்ளார்கள். தமிழர், தம்மையும் தமக்குப் பக்கத்தில் வாழ்கிற மற்ற மொழியாளரையும் புரிந்துகொண்டு அவர்களோடு ஒன்றுபட்டு இணைந்து வாழ இந்நூல் வழி காட்டுகிறது.

'தமிழும் பிற பண்பாடும்' என்னும் இந்த நூல், தமிழ் மொழியிலும் ஏனைய பாரத நாட்டு மொழிகளிலும் ஊடுருவிக் காணப்படுகிற கடவுள் வழிபாட்டு (பக்தி பண்பாட்டு) ஒற்றுமையை வெள்ளிடை மலைபோல் விளக்கு கிறது. தமிழிலும் ஏனைய பாரத நாட்டு மொழிகளிலும் காணப்படுகிற பக்திப் பண்பாட்டுத் தொடர்பை இந்நூல் செவ்வனே சுருக்கமாக விளக்குகிறது.

சிந்தனைக்குரிய பல உண்மைகள் இந்நூலில் ஆங்காங்கே சிறப்பாகக் காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக: ''தமிழ் தவிர்த்த பிற திராவிட மொழிகள் பிராகிருதமே என்றும், இந்தோ-ஆரிய வடமொழியின் சிதைந்த வடிவங் களே எனவும், மக்கள் தவறாக உணர்ந்து வாதிக்கத் தலைப் பட்டனர். எனவே ஊடாட்டமாகப் பரந்து விளங்கும் இப்பண்பாட்டுறவினைக் கண்டறிய முதலில் தமிழையே கொள்வது எளிதானது. அதிலும் திராவிடக் கூறுகளைக் கண்டறிந்து கொள்ளத் தமிழிலிருந்து தொடங்குவது எளிதாகிறது. ஆனால் அதேபோது தமிழ்ப் பண்பாட்டிலும் பிற கூறுகளின் பிணைப்பு உண்டு என்பதையும் நாம் மறக்கவில்லை. இன்னொன்றையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும். வடமொழியை நாட்டின் எல்லாப் பகுதியைச் சேர்ந்த மக்களும் கருத்துப் பரிமாற்ற மொழியாகப் பயன் படுத்தினர். இதனால் ஒரு நூல் வடமொழியில் எழுதப் பட்டிருக்கின்றது என்பதாலேயே அது முழுதும் ஆரியப் பண்பாட்டினையே விளக்கி நிற்கின்றது என்று கொள்ள வேண்டியதில்லை.'' இதுபோன்ற சிறந்த பேருண்மையைக் கூறுவது ஆழ்ந்த அனுபவமுள்ள பன்மொழிப் புலவருக்குத் தான் இயலும்.

இந் நூலுள் தமிழர் பண்பாடு, தமிழும் பிற பண்பாடு களும், தமிழ்ச் செல்வாக்கு, தமிழும் கேரளமும், தமிழில் கன்னடச் செல்வாக்கு, தெலுங்கும் தமிழும், தமிழ்ச் செல் வாக்கு, இலங்கையிலும் தொலைகிழக்கு நாடுகளிலும், தமிழில் பிறமொழிச் சொற்கள் முதலான தலைப்புகளில் பல

ஆராய்ச்சிக் கருத்துக்கள் உள்ளன. பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் தமிழ் மன்னர் ஆட்சி மறைந்து அயல் மொழிக்காரரர் ஆட்சிக் காலத்தில் தமிழ் போற்றுவாரற்று இருந்த காலத்தில் தோன்றிய அம்மானைப் பாடல்கள் முதலான எளிய இலக்கியங்கள் தோன்றின வரலாறு இந்நூலின் இறுதியில் காணப்படுகிறது. தமிழர் ஒவ்வொரு வரும் படித்துப் பயன் பெறத்தக்க இந்நூலை வெளியிட்டு உதவிய **நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கும்,** இந்நூலை எழுதியுதவிய பேராசிரியர் டாக்டர் தெ. பொ. மீ. அவர்களுக்கும் நன்றி கூறுகிறோம்.

*மயிலாப்பூர்*
*சென்னை-4*

**மயிலை சீனிவேங்கடசாமி**
*22-4-1973*

# 1. தமிழர் பண்பாடு

## 1

பண்பாடு என்று பேசுகிறோம்; ஆனால் அதன் பொருளை அறிவது அருமை. பண்படுத்திய நிலம் என்று சொல்லுவது போலப் பண்பட்ட மனம் என்றால் பண்பட்ட மனிதப்பாங்கு என்றும் பேசலாம். இங்கே உள்ளத்தில் சிறப்புநிலை தோன்றினாலும், அது தனிமனிதனின் சிறப்பாக இருந்தால் பண்பாடென நாம் பேசுவதில்லை. ஒரு நாட்டின் பண்பாடு ஓர் இனத்தின் பண்பாடு என்றே பேசி வருகிறோம்; இப்படி குறிப்பிட்ட மக்கட் கூட்டத்தின் பண்பாடென நாம் பேசுவது அக்கூட்டத்திலுள்ள ஒவ்வொருடைய பண்பாடாகவும்தான் அது வெளிப்பட வேண்டும். இதனாலேதான் மதக் கொள்கையிலும் வேறு பண்பாடு என்று வற்புறுத்த வேண்டும்.

நாகரிகம் உணவிலும் உடையிலும் இதுபோன்ற பிற வாழ்க்கையின் ஆரவாரங்களிலும் தோன்றுவது ஒன்றாகும். நகரத்தின் ஆரவாரந்தானே நாகரிகம்! பண்பாட்டையும் நாகரிகம் என்று சொல்லும் இடமும் உண்டு. "பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்" என்ற குறளில் பகைவர் மனமும் நோவாதபடி வாழும் கண்ணோட்டம் நிறைந்த பண்பாட்டையன்றோ வள்ளுவர் நாகரிகம் என்கிறார். ஆனால் பெரும்பாலும் சிறந்த வாழ்க் கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப் பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம். அந்த வெளிப் பாடு சுவையுணர்வாகவும், நடைஉடை பாவனைகளாகவும்

தோன்றும். அப்பண்பாடில்லாதவனைக் காட்டுமிராண்டி என்கின்றோம். வாழ்வின் பலபல போக்குகள் அமைந்த பலவேறு நிலைகளையும் இந்தப் பண்பாடென்பது குறிக்கும். உடலைப்பற்றிய நன்னிலை, மனத்தைப் பற்றிய தூய்மைநிலை, பேச்சின் இனிமை இவையெல்லாம் பண்பாட்டில் அடங்கும்.

''திரிகரணங்கள்'' என்று சமய சாத்திரங்கள் பேசும் மனமொழிமெய் என்பவற்றின் அமைதியே இங்கே சுட்டப் படுகின்றது. பிறரை முட்டி வருத்தாத நிலையில் இவற்றின் அமைதியைத் தமிழர்கள் மனத்தைப்பற்றிய உண்மை என்றும், உடலைப்பற்றிய மெய்ம்மை என்றும், பேச்சினைப் பற்றிய வாய்மை என்றும் பண்பாட்டு நோக்கத்தில் பேசிய தோடு இவை அடிப்படையில் ஒன்றாக விளங்குவதையும் தங்கள் பெருவழக்கில் சுட்டி வந்தார்கள். முன்னே கூறியது போல இவை மக்கட் கூட்டத்தின் சிறப்பியல்பாகவும், தனி மக்களின் சிறப்பியல்பாகவும் விளங்கும்போதே பண்பாடு எனப் பேசுகின்றோம்.

இவை ஓவியம் முதலிய கலைப் பொருள்களாக வடி வெடுத்து நிற்பதும் உண்டு. ஓவியங்களும் சிற்பங்களும் பழைய பண்பாட்டின் நுட்பத்தை நமக்கு விளக்குகின்றன. ஒவ்வொரு மக்கட் கூட்டமும் வாழ்க்கையில் புருஷார்த் தங்களாகப் பலபலவற்றைக்கொண்டு வாழக் காண்கிறோம். எனவே இவற்றின் வேறுபாட்டாலும் பண்பாட்டின் வேறு பாட்டை நாம் அதில் அறிய முடிகிறது. ஒரு வகையில் பண்பாடு நம் மனநிலையைக் குறிப்பதென்றாலும் அங்கேயும் நம் மனப்பாங்கு பலநிலையில் அமையக் காண்கிறோம். கலை முதலியன போன்றவை அகத்து மனத்தே எழுந்து புறத்தே வெளிப்படுவன. ஆதலினால் அவற்றை 'அகப்புறநிலை' எனலாம். இனி அகநிலையாகவே இருக்கின்ற புருஷார்த்தக் கொள்கை முதலியவையும் இங்கே ஆராயத்தக்கவை. எல்லா வற்றிற்கும் அடிப்படையான அகத்துக்கும் அகமான ஆன்மீக வாழ்வு என்ற நிலையும் உண்டு. இதனை 'அகத்திலே அகம்' என்று கூறலாம். இந்தப் பண்பாட்டின் கூறுகளில் உண்மை பேசுவது என்பது போன்றவை எல்லாப் பண்பாடுகளிலும்

விளங்கும் பொதுநிலை ஆகலாம்; வேறுசில கூறுகள் ஒவ்வொரு கூட்டத்திற்கோ, நாட்டிற்கோ, சிறப்பாக அமையலாம். ஆன்மீகத்தை வற்புறுத்துவது இந்தியப் பண்பாட்டின் சிறப்பு நிலையாகும்.

## 2

நம்முடைய இந்தியப் பண்பாடு புறக்கோலத்தின் அழகையும் அமைதியையும் காணும்போதும் அதனோடு அமைந்துவிடாது அந்தப் புறநிலைக்கும் அடிப்படையாகத் தோன்றுகிற ஓர் அகநிலை அமைதியை அகக் கண்ணால் காண முயல்கிறது. நம்முடைய கலைகளையெல்லாம் இந்தக் கண் கொண்டுதான் பார்க்க முயல்கிறோம். கூத்தப் பெருமானின் புறக்கோலம் பல கோடுகளின் அமைதியாக விளங்கினாலும், புன்முறுவலும், அழகும், மிடுக்கும் உள்ள வடிவம் அழகாகத் தோன்றினாலும், அவற்றை மட்டும் காண்பதோடு நாம் நிற்பதில்லை. அவற்றை எல்லோரும் காணக்கூடும். ஆதலின் அவற்றைப்பற்றி நாம் பேசுவதும் இல்லை. அவற்றிற்கு அப்பாற்பட்ட ஒரு கடவுள்நிலை, அவன் ஆட எல்லாம் ஆடும் என்ற உண்மையின் விளக்கம் என்ற இவற்றையெல்லாமே நாம் கண்டு மகிழ்கிறோம். அப்படிக் காணும்போது அவ்வடிவத்தின் ஒவ்வொரு கூறும் ஒவ்வோர் ஆழ்ந்த கருத்தின் அடையாளமாக விளங்கக் காண்கிறோம். உடுக்கை படைப்பினைக் குறிக்கிறது. எரியழல் அழிவைக் காட்டுகிறது என்றெல்லாம் பேசுகிறோம்.

இப்படித்தான் சிற்பங்களும், கோயில்களைக் காணும் போதும், பலபல நிலைகளால் படிப்படியாக உயர்ந்து சென்று கடவுள் நிலையில் ஒன்றுபட்டு முடிகின்ற அண்டத்தின் நுட்பத்தையே அங்கே விளக்கமாகக் காண்கிறோம்.

நம்முடைய இலக்கியங்களிலும் இந்த உண்மையே விளங்குகிறது. பல்வகைச் செய்யுளுறுப்புக்களும் முடிவாக ஒன்றை நோக்கி நிற்கின்றன. நம்முடைய உள்ளம் காப்பியப் பேரின்பச் சுவையாக மாறி நிற்பதற்கு இதில்

வரும் ஒவ்வொன்றும் துணை செய்கின்றன. 'த்வனியே பாட்டின் உயிர்நிலை' என்று கூறுவதும் இதனாலேயே ஆம்.

வேதப் பாடங்களில் சூரியன் தோன்றலாம்; அவனுடைய அழகும் ஆற்றலும் விளங்கலாம், ஆனால் அந்தப் புறக் கோலத்தின் அழகோடு ஒன்றித்து விளங்கும் கடவுள் நிலையும் அங்கே பாவலர் கண்ணுக்குப்படுகிறது. அதனால் சூரியனையே எல்லாமாகப் பாடும் போக்கும் அங்குண்டு.

சங்கப் பாடல்களிலும் இந்த நிலையைக் காண்கிறோம். அகப்பாடல்கள் என்று அனைத்திலும் உயிர்நிலையாக விளங்குகின்ற அன்பு நெறியை வளர்க்கும் பாடல்களில் வருபவர்கள் ஓர் ஆணும் பெண்ணுமாய் இருக்கலாம். அங்கே அவர்களின் நடையைப் பார்க்கலாம்; உடையைப் பார்க்கலாம். ஆனால் புலவன் நமக்கு அங்கே விளக்க முந்துவது மனிதத் தன்மைக்கே உயிர்நிலையாக விளங்குகின்ற அன்பின் விளக்கத்தையே ஆம். அந்த அன்பின் விளக்கத்தைப் பலவேறு கோணங்களிலிருந்து காண்கின்ற காட்சியே அவற்றின் சிறப்பு.

இந்த உண்மையைப் பக்திவெள்ளம் பெருகின காலத்தில் தொண்டர்கள் நன்கு உணர்ந்து கொண்டார்கள். 'அன்பே சிவம்' என்பது திருமூலர் துணிவு. இந்தத் துணிவோடு அகப்பாட்டு என்கின்ற பெயர்ப்பொருத்தத்தை நாம் அணுக வேண்டும். அதனை ஆராய்ந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் தாம் அனுபவித்த கடவுள் இன்பத்தை நமக்கு விளக்க வரும்போது, இத்தகைய அகப்பாடல்களாகவே பாடிக் காட்டுகிறார்கள். ஆண்டவனே காதலனாகத் தொண்டர்கள் காதலியராகப் பாடுகின்ற பாட்டையெல் வெறுங் காதற் கதைகள் என்று கொள்வதற்கில்லை. காதற் கதையையும் தாண்டி விளங்கும் கடவுள் இன்ப அன்பின் காட்சியே அங்கெல்லாம் காண்கின்றோம்.

இப்படிக் கடவுள் விளக்கமாக எல்லாம் முடியும்போது, நம்முயிர் மட்டுமன்றி நம் உள்ளமும் உடலும் ஆண்டவன் கோயில்களாகச் சிறந்து தோன்றுகின்றன. அப்போது உடலை வெறுக்கின்ற பேச்சோ, இழக்கின்ற பேச்சோ இல்லை.

# 3

இங்கே 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு' என்ற குறள் நினைவிற்கு வருகின்றது. நம்முடைய கல்வி உள்ளிருக்கும் சில ஆற்றல் களை வெளிப்படுத்தும் வகையாக அமைகிறது. எழுபிறவி யிலும் தொடர்ந்து வளர்ந்து வரும் ஆற்றல்கள் ஒவ்வொரு வரின் சிறப்பியல்புகளாக வெளியாகின்றன. நம்முடைய விஞ்ஞானப் போக்குள்ள அறிவு இவ்வாறு கல்வியால் வளர் கின்றது. இவையெல்லாம் அளர்ந்தறிந்து அறிய முயலும் முயற்சியே ஆம். இந்த அளவைக்கெல்லாம் அடிப்படை எண்கள்தாம். எனவே இத்தகைய அறிவின் பெருக்கத்தைத் தான் 'எண்' என்கிறார் வள்ளுவர் என்று கொள்ளுதல் கூடும். இந்த விஞ்ஞான அடிப்படையின் மேலே எழுப்பப் படுகிற நாகரிகக் கோட்டைகள் எல்லாம் இந்த எண்ணின் விளக்கமேயெனலாம்.

ஆனால் இப்படி அளந்தறிய முடியாது நிற்கின்ற ஓர் உளப்பாங்கும் உண்டு. அது முன்னைய கல்விபோல உள்ளே யிருந்து வெளியே ஈர்க்கப்படுவதல்ல. பலபல கல்வி களாலும், அந்தக் கல்விகளால் உயர ஓங்கும் நாகரிகத் தாலும், உள்ளம் பண்படுகிறது. கல்வி சூழ்நிலை முதலிய வற்றின் பயனாக மாறி நிற்கும் மக்கட் கூட்டத்தின் நிலையில் ஒவ்வொருவனும் அப்போது நிலையை ஒப்பப்பெறும் உள்ளுணர்வு நிலையும் அதன் விளக்கமுமே பண்பாடு.

அந்தப் பண்பட்ட நிலையே கலையின் உயிர்நிலை; கலைக்கு இரண்டு நிலைகள் உண்டு. கலையைக் கலைஞன் முதலில் தன் உள்ளக்காட்சியாகக் காண்கிறான், அங்கே அது அவனுக்கே உரிய தற்கிழமைப் பொருளாக விளங்குகிறது. பின்னே ஓவியமாகவும், சிற்பமாகவும், இசையாகவும், பாவாகவும், பிறர் எல்லாரும் அனுபவிக்கக்கூடிய நிலையை அடைகிறது. அப்போது அது பிறிதின் கிழமையாய்ப் பிறர்க்கும் உரியதா கிறது. அவனுடைமை என்பது நீங்கிப் பொதுவுடைமை யாகிறது. இந்த இரண்டு நிலையும் கவிஞன் செய்து அமைக் கும் செய்யுளாம் கலைக்கே உண்டு. அதனாலேயே அதற்குச்

'செய்யுட்கிழமை' என்று பழைய இலக்கணத்தில் பெய ருண்டு. இந்தக் கலைப் போக்கைத்தான் எழுத்தென்கிறார் வள்ளுவர் என்று கூற இடம் உண்டு.

'கட்புலனாகாக் கடவுளைக் காட்டும் சட்டம்' போன்றது எழுத்தென்று பழைய இலக்கண நூல்கள் கூறுகின்றன. எண்ணால் காணமுடியாத கடவுளைக் காட்டும் அடையாள மாக விக்கிரங்கள் இருக்கின்றன. அதுபோலக் கண்ணாலே பார்க்க முடியாத ஒலியின் அடையாளமாகக் கண்ணால் பார்க்கும் வரியெழுத்துக்கள் விளங்குகின்றன. இப்படி அடையாளமாக வேறொன்றைக் குறித்து நிற்பவற்றையே எழுத்து என வழங்குவது மரபு. ஓவியம் முதலிய கலைகளும் மேலே விளக்கியபடி வேறொன்றைக் குறிக்கும் அடையாளங் களாக விளங்குவதால் எழுத்தென்றும் கூறத் தக்கவையே. எழுத்தென்பதற்கு ஓவியம் என்ற பொருளும் உண்டு. இங்கே நாம் விளக்கியபடி பார்த்தால் எண்ணோ நாகரிகத்தில் முடிவதையும் எழுத்தோ பண்பாட்டில் முடிவதையும் காணலாம்.

## 4

இதுவரையிலும் கலை முதலியன பண்பாட்டின் விளக்க மாக அகப்புற நிலையில் அமைவதைக் கண்டோம். சமூக நிறுவனங்களின் ஒழுக்க நெறியும் பண்பாட்டின் விளக்கமே ஆகும். தமிழ்நாட்டில் ஒழுக்கத்தை வற்புறுத்தும் நூல்கள் இலக்கியமாகவும் சிறந்து விளங்குகின்றன. வள்ளுவர் காலத்திலிருந்து புதிய ஆத்திச்சூடி பாடிய பாரதி காலம், பாரதிதாசன் காலம் வரையிலும் நீதி நூல்களுக்கு ஓர் ஏற்றம் உண்டு. நம்முடைய குழந்தைகள் முதலில் படிக்கும் செய்யுள் நூல்கள் ஆத்திச்சூடியும், கொன்றை வேந்தனும், வெற்றி வேற்கையும், நல்வழியும், நீதி வெண்பாவும், நீதி நெறி விளக்கமுமே ஆம். பழைய இலக்கியங்களைப் படிக்கும் போது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களைப் படித்து இன்புறு கிறார்கள்.

திருக்குறள் தமிழரது வேதமாக விளங்குகிறது. இது ஒரு தலைசிறந்த அறநூல். நாலும், இரண்டும் சொல்லுக்குறுதி என்ற பழமொழி நாலடியாரையும் திருக்குறளையும் சுட்டிக் காட்டுகிறது. காப்பியம் எழுத வருகின்றவர்கள் எல்லாம் திருக்குறளை இலக்கணமாக வைத்துக்கொண்டு இலக்கியம் எழுதுகிறார்கள்.

கடவுள் வேதத்தைப் பாடினான் என்று சொல்லும் போதெல்லாம், நால்வர்க்கு அறம் உரைத்தான் என்றே பாடுகின்றார்கள். அருளை வற்புறுத்த வந்த அப்பர் பெருமான் கடவுளைத் 'தயாமூலதன்மமே' என்று அறவடிவ மாகவே கண்டு புகழ்கின்றார். இதனால் தமிழ்ப் பண்பாட்டில் அறத்திற்கு இருக்கும் ஏற்றம் நன்கு விளங்கும். அறத்தையே கடவுளாகக் காண்கின்ற காட்சியில் திளைத்துத்தான் திருவள்ளுவர் தம் அறநூலைச் செய்தாரோ என்று நாம் வியக்க வேண்டியிருக்கிறது.

## 5

புருஷார்த்தங்களும் பண்பாட்டின் விளக்கம் என்று கண்டோம். அறம் பொருள் இன்பம் வீடு எனப் புருஷார்த் தங்கள் நான்கு. ஆனால் தொல்காப்பியரோ இன்பமும் பொருளும் அறமும் என்று மூன்று புருஷார்த்தங்களையே கூறுகிறார். வள்ளுவரும் இந்த மூன்றையே விளக்குகிறார். இவர்கள் மோட்சத்தைப் புறக்கணிப்பவர்கள் அல்லர்; மோட்சதர்மத்தையும் அறத்திலேயே அடக்கிக்கூறுபவர்கள். 'யான்', 'எனது' என்கின்ற தன்னலத்தைத் துறந்து நின்று குடும்பத்தோடும், சமுதாயத்தோடும் பின்னர் உல கோடும், முடிவாக எல்லாம் ஆகிய கடவுளோடும் ஒன்றித்து நிற்கின்ற பெருவாழ்வை வற்புறுத்துகின்றார்கள். ஆகையால் இவர்கள் நோக்கத்தில் மோட்சத்துக்கும் மற்றைய மூன்றுக் கும் முரண்பாடு இல்லை. அறமும் இத்தகைய முழுவாழ்வையே வளர்க்கின்றது; பொருளும் குறைவிலா நிறைவான மக்களையே வளர்க்கின்றது; அகப்பாட்டின் நுட்பத்தை ஆழ் வார்கள் வழியில்-நாயன்மார்கள் வழியில் காணும்போது

இன்ப வாழ்வே பேரின்ப வாழ்வாக விளங்குகின்ற உண்மை வெளியாகின்றது; எல்லாம் முடிவில் அறம் ஒன்றின் கூறு களாகவே தமிழர்கள் கண்டார்கள். இந்த உண்மை அவர்கள் கூறும் அறநூல்களை விரிவாக ஆராய்ந்தால் நன்கு புலனாகும்.

## 6

இங்குக் கூறியது தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பியல்பு என்று கொள்ளலாம். ஆனால் தமிழர்கள் உலகத்திலிருந்து தம்மை வேறுபடுத்திக்கொள்ளும் நோக்கத்தில் திரியவில்லை; 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நம்பிக்கையில் மக்கள் எங்கிருந்தாலும் அவர்கள் கூறிய உண்மையில் எல்லாம் தாம் வாழ்ந்த வாழ்வின் தமிழ் நுட்பத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள். இதனாலே இந்திய ஒருமைப் பாட்டிலும் 'யாதானும் நாடாமல் ஊராமால்' என்னும் உலக ஒருமைப் பாட்டிலும் எளிதில் நம்பி வாழ்ந்தும், 'திரைகடல் ஓடி'த்தம் பண்பாட்டை உலகப் பண்பாடாக வளர்த்து வந்தார்கள். இந்த உலக நோக்கினால் அல்லவா சேக்கிழார், 'உலகெலாம்' என்று முதலிலும் இடையிலும் முடிவிலும் பாடி மகிழ்கின்றார்; சம்பந்தரும் 'ஞாலம் நின்புகழே மிக வேண்டும்' என்று பாடுகின்றார்; 'அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்' என்று தம் காலத்திற்கும் தம் நாட்டிற்கும் அப்பாற்பட்டவர்கள் கால்களிலும் விழுகின்றார் சுந்தரர்; 'உலகெங்கும் மேவிய தேவாலயந்தொறும் மேவிய பெருமாளே' என்று பாடுகின்றார் அருணகிரிநாதர்; ஆன்ம நேய ஒருமைப்பாட்டினால் விளையும் சமரச சன்மார்க்கத் தினைப் பாடுகின்றார் இராமலிங்கர்.

தமிழர் இலக்கியத்தையும், தமிழர் கலைகளையும் தமிழர் வரலாற்றையும் ஆராயும்போது இங்கே நாம் சுருக்கமாக விளக்கிய தமிழர் பண்பாடு விரிந்து பரந்து விளங்குவதைக் காணலாம்.

## 2. ''எங்கும் தமிழர்''

''திரைகடல் ஓடியும் திரவியம் தேடு'' என்பது தமிழ்ப் பாட்டியின் கட்டளை. தமிழன் பழங்காலத்தில் இருந்தே இப்படி நடந்து வந்ததால்தான் ஔவையாரும் இப்படிப் பாடி முடித்தார். இன்றுதான் தமிழர்கள் பிலாயீலும், ரூர்க்கியிலும், டில்லியிலும், பம்பாயிலும், கல்கத்தாவிலும் வாழ்ந்து உழைத்து அங்கங்கே செல்வத்தைப் பெருக்கி வருகிறார்கள் என்பதில்லை. நம்முடைய நாட்டில் மட்டுமல்லாமல் பிறநாடுகளிலும் சென்று தம்முடைய பண்பாட்டையும் பிறநாட்டுச் செல்வத்தையும் வளர்த்து வருவதே அவரது சிறப்பு. இலங்கையில் அரசனாக முன்வந்த விஜயன் காலத்திலிருந்து இன்றுவரை தமிழர்கள் அந்நாடு வளம் பெறவும் பண்பாட்டில் சிறக்கவும் உழைத்து வருகிறார்கள்; கீழைத் தீவுகளில் பல அரசை நிலைநாட்டியுள்ளார்கள், வாணிகம் செய்துள்ளார்கள். அவர்கள் வெட்டிய குளம் முதலிய அறநிலையங்கள் இன்றும் விளங்குகின்றன. அவர்கள் மிக விரும்பிப் பாடிவந்த திருப்பாவையும் திருவெம்பாவையும் அந்நாடுகளில் மந்திரங்களாக மாறிவிட்டன. அங்கிருந்தும் கரும்பு, வால்மிளகு முதலியவற்றைக் கொண்டு வந்து தமிழ்நாட்டையும் செல்வம் கொழிக்கச் செய்தார்கள். ரோமாபுரிக்கும் தமிழ் நாட்டு முத்தையும் பிற செல்வங்களையும் கொண்டு சென்று ரோமாபுரி மங்கையரைப் பட்டிலும் முத்திலும் மினுக்கச் செய்தார்கள். அங்கிருந்து பொன்னும் கலைப்பொருள்களும் அந்நாட்டுக் கள்ளோடு இங்கு வந்தன. மேலைக்கடலிலும் கப்பலோட்டியவர்கள் தமிழர்கள். அரபியரோடு தோளோடு தோள் சேர்ந்து இந்தக் கப்பல் தொழிலில்

பல ஆண்டுகள் ஈடுபட்டு வந்தார்கள். போர்த்துக்கீசியர் பீரங்கியும் வெடிமருந்தும்கொண்டுவந்தபின்தான் இருவரும் தோல்விகண்டனர்: சீனரோடும் தமிழர் தொடர்பு கொண்டு நின்றதால் கிறித்து பிறப்பதற்கு முன்பெழுந்த சீனநூலில் காஞ்சீபுரத்தைப் பற்றிய குறிப்பு உண்டு.

இந்தியாவிற்குள்ளேயும் தமிழர்கள் நடமாடி வந்தார்கள். சந்திரகுப்தனை நிலைநாட்டிய சாணக்கியன் தென்னாட்டுச் சோழியன் என்பது செவி வழிச் செய்தி. "சோழியன் குடுமி சும்மா ஆடுமா?' என்பது அவனைப் பற்றிய பழமொழியே என்று சிலர் கருதுகிறார்கள். அவன் காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து பட்டு முதலிய பொருள்கள் வடநாட்டுக்குச் சென்றன. சந்திரகுப்தன் அரண்மனையிலிருந்த மெகஸ்தனீஸ் என்ற கிரேக்கர் பாண்டியர் முதலியோரைப்பற்றிக் கட்டுக்கதைகள் பல கூறுகிறார். பாணினிக்குப் பின்வந்த வரருசி என்ற இலக்கணப் புலவர் பாண்டியர், சோழர் என்ற தமிழ்ச் சொற்களுக்கெல்லாம் வடசொல் போல இலக்கணம் கூறுகின்றார். வடமொழிச் சொல்லே என்று நினைத்துவிடக் கூடிய அளவிற்கு அவை அங்கே பழைய சொற்கள் ஆகிவிட்டன. அசோகன் தன்னுடைய கல்வெட்டில் சேர சோழ பாண்டியரையும் சத்திய புத்திரர் என்ற அதிகமான்களையும் தன்னுடைய நண்பர்களாக குறிப்பிடுகிறான். பாரதத்தில்வரும் நச்சுப்பொய்கைக் கதையில் ''நகரேஷு காஞ்சி'' என்று காஞ்சி மாநகரம் பாராட்டப்படுகிறது. இலக்கணப் பேராசிரியரான பதஞ்சலியாரும் காஞ்சி மாநகரத்தைக் குறிப்பிடுகிறார்கள். காஞ்சி மாநகரம் அந்தக் காலத்தில் ஒரு பெரிய பல்கலைக் கழகம். இங்கிருந்துதான் திக்நாகரும், தர்மபாலரும் நாளந்தப் பல்கலைக் கழகத்தின் தலைவராகச் சென்றார்கள், சைனர்களும், பௌத்தர்களும், தமிழ் நாட்டில் வந்து தங்கினார்கள். சந்திரகுப்தன் பத்திரபாகு என்ற முனிவரோடு சிரவணபெல்கோலாவில் துறவு பூண்டான் என்ற கதையும் உண்டு. தமிழ் நாட்டில் இருந்தும் பல

தமிழ்ப் பௌத்தர்களும் சைனர்களும் வடநாடு சென்று அவற்றை வளர்த்ததுண்டு.

சங்க காலத்து மக்களுக்கு வாரணாசி என்ற காசி அன்றுடைய பேச்சு. நந்தர்களை அவர்கள் அறிந்திருந்தார்கள். பாடலிபுத்திரம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பின்னர்ப் பல்லவர் காலத்தில் தேவாரம் பாடியவர்களும், நாலாயிரம் பாடியவர்களும் வடநாட்டையும் அறிந்திருந்தார்கள். வட நாட்டுக் கோயில்களையும் பாடினார்கள். அப்பர் கைலை காணச்சென்ற கதையும் உண்டு. திருமங்கையாழ்வார் நைமிசாரண்யத்தையும், பத்ரிநாத்தையும் கண்டு வந்து பாடியுள்ளார். இன்றும் அங்கே தமிழ்ப்பாடல்கள் பாடப் பெறுகின்றன. சுந்தரமூர்த்திநாயனார் திருக்கேதாரத்தைப் பாடியுள்ளார். சேக்கிழார், இவர் தமிழ்நாட்டிலிருந்தே பாடினார் என்று கூறினாலும், திருமங்கை மன்னர் சென்ற அந்த இடத்திற்கு அருகில் இவரும் போய்ப் பார்த்தே பாடியிருப்பார் என்றுதான் அந்தப் பாடலைப் படிக்கும்போது நமக்குத் தோன்றுகிறது. இடைக்காலத்திலெல்லாம் காசியும் இராமேசுவரமும் இந்திய நாட்டை ஒன்றுபடுத்தி நின்றன.

இந்தப் பழைய முறையை ஒட்டித்தான் தமிழர்கள் இந்திய நாட்டில் எங்கும் சென்று, உழைத்து, நம்நாட்டின் செல்வத்தையும், பண்பாட்டையும் வளர்த்து வருகிறார்கள். இத்தகைய தமிழர் வாழும் நகரங்களில் பிலாய் நகரமும் ஒன்றாகும். பிலாய்த் தமிழ் மன்றம் தமிழ்ப் பண்பாட்டை நிலைநிறுத்தி வருவதைக் கேட்டுப் பெருமகிழ்ச்சி. இந்திய நாட்டாரோடு மட்டுமல்லாமல் பிலாய் உருக்காலையினைச் சிறக்கச் செய்வதற்கு ஒத்துழைக்கும் பிறநாட்டாரோடும் நம் தமிழர்கள் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற தமிழ் மரபிற்கு ஏற்ப ஒன்றுகூடி உறவாடி உலகம் உயர உழைத்து வாழ்வார்களாக.

# 3. தமிழும் பிற பண்பாடும்

## முன்னுரை

### 1. பண்பாட்டு வரலாறும் அதன் இன்றியமையாமையும்

**வ**ரலாறு என்பது வெறும் போர்களைப்பற்றியும் வெற்றிகளைப்பற்றியும் விளக்கும் கதைத் தொகுப்பு என்று இன்று யாரும் கருதுவதில்லை. அது சமுதாயம், பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியைப்பற்றி விளக்குகின்றபோது, பெரிதும் சுவையுடையதாயும் தனிச் சிறப்பு மிக்கதாயும் அமைகின்றது.

இருவேறு பண்பாடுகள் தொடர்புகொண்ட காலத்தே ஒரு பண்பாட்டின் கூறுகள் மற்றொன்றிலே சென்று காலப் போக்கிலே ஒரு பண்பாட்டுப் பிணையலை உருவாக்கின. இவ்வகையாக ஏற்பட்ட பண்பாட்டுக் கூறுகளைக் கடன் வாங்கப்பட்டக் கூறுகள் எனக் கூறுவதுண்டு. இது குறுகிய மனப்பான்மையினுல் வந்த ஒரு பழமையான கொள்கையே யாம். இன்று இவ்வாமுன பண்பாட்டுக் கூறுகள் விரவிய பண்பாட்டுப் பிணையலே அனைத்துலக ஒருமைப்பாட்டினை வலியுறுத்தி நிற்கின்றது. இது வேறு பண்பாடு அது வேறு பண்பாடு என்ற தன்முனைப்பான நிலைமை மாறுகின்ற போது பண்பாடுகளிடையே கொடுக்கல் வாங்கல்கள் நிகழத்தான் செய்யும். பெருமழை பெய்கின்ற போதெல்லாம் வெள்ளம் பெருகி அனைத்தையும் கூடவே வாரிச் சுருட்டிச் செல்வது தவிர்க்க முடியாததேயாம். ஆனுல் விரைவில் எல்லாம் அமைதி பெற்று அவையவை அமைய

வேண்டிய இடத்தில் அமைந்து நிலைத்த தன்மையுடையன மட்டுமே எஞ்சி நிற்கின்றன. இதுபோன்றே செல்வாக்குமிக்க ஒரு பண்பாடு பின்னடைந்து நிற்கின்ற ஒரு பண்பாட்டினை அடக்கிவெற்றிகொள்ளும்போதும் நிகழ்கின்றது. இத்தகைய தொரு பண்பாட்டுப் பிணையலில் நிலைத்து விட்டவையே நடுவு நிலைமையோடு அறிவாராய்ச்சி நிலையில் நின்று ஆராயத் தக்கன.

## 2. மொழிகளிடையே ஊடாட்டம்

பன்னெடுங்காலமாகப் பிற மொழி பேசும் மக்களோடு ஏற்பட்ட தொடர்பினாலே பலபல சொற்கள் தமிழிலே புகுந்து இன்றைய வழக்கிலும் நிலைபெற்று விட்டன. இது போலவே தமிழ்ச் சொற்களும் பிற மொழிகளில் புகுந்தன. இவ்வகையான ஊடாட்டத்தைப் பற்றித் ''தமிழ் மொழி வரலாறு'' என்னும் நூலிலே ''தமிழ்மொழியின் புறநிலை வரலாறு'' (The External history of Tamil language) என்ற தலைப்பிலே ஓரளவு விளக்கியுள்ளேன். தற்போது உசுமானி யாப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் என்னுடைய மாணவர்களுள் ஒருவரான திரு. டி. எஸ். மாணிக்கம் என்பார் தமிழில் காணப்பெறும் பிறமொழிச் சொற்கள் பற்றி ஆராய்ந்து அவை எவ்வாறு கிரேக்கர்,உரோமானியர், பாரசீகத்தார், அரபியர், யூதர், போர்த்துக்கீசியர், டச்சுக்காரரர், பிரெஞ்சுக்காரரர், ஆங்கிலேயர், சிங்களவர், மலேயர், சீனர் ஆகிய பிற நாட்டினரின் தொடர்பினைப் புலப்படுத்தி நிற்கின்றன என்பதைக் கண்டு விளக்கி யுள்ளார். பிறநாட்டினர் தொடர்பினைப்பற்றிக் கூறும் போது, நம்நாட்டிலே வாழும் மலையாளத்தார், கன்னடர், தெலுங்கர், மராத்தியர், உருது பேசுவோர், மற்றும் வடவிந்தியாவிலேயே வாழ்வோர் ஆகியோர் தொடர்பு பற்றிச் சொல்ல வேண்டுவதில்லை. ஆந்திரப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் சுப்பாராவ் அவர்கள் ஆங்கி லத்திற் காணப்பெறும் இந்திய மொழிச் சொற்கள் பற்றி ஆராய்ந்திருக்கிறார். இவ்வொன்றினைத் தவிரப் பிறமொழி

களில் காணப்பெறும் தமிழ்ச் சொற்கள் பற்றிய விரிவான ஆராய்ச்சியை இனித்தான் மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் இவ்வகை ஆராய்ச்சிக்குப் பிறமொழியாளரிடையே தமிழ்ப் பயிற்சியும் தமிழரிடையே பிறமொழிகளது அறிவும் வேண்டும்.

## 3. தமிழும் திராவிடமும்

இம்மாதிரி ஆராய்ச்சிகளின்போது பிறமொழியாளரோடு நாம் கொண்ட தொடர்பினைப்பற்றி மட்டும் கண்டறிவது என்பது நமது நோக்கமன்று. உலகப் பெருமொழிகளோடுள்ள தொடர்பினை விளக்க இப்போது செய்யப் பெற்றுள்ள ஆராய்ச்சிகளே போதுமானவை. தமிழ் உலகில் தனியுரிமைப் பெற்றுத் திகழும் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஃபிஜி, தென்னுப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா போன்ற பல நாடுகளில் வாழ்கின்ற பல்லாயிரக் கணக்கான மக்களின் தாய்மொழி என்பதைக் கருத்தில் கொள்வோமானுல் அதனை ஓர் உலக மொழி என்றே சொல்லலாம். இது தவிர மேற்படிப்புக்காக ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் சென்றுள்ள தமிழர்களும் உள்ளனர்.

## 4. பின்னும் ஆழமான நிலை

ஆனுல் நாம் பெரிதும் போற்றி உணர வேண்டுவன இவற்றிடையே பின்னும் ஆழமான நிலையில் நிலைத்துவிட்ட பண்பாட்டுறவும், இலக்கியம், சமயம், தத்துவம் ஆகியவற்றின் பாதிப்புக்களுமேயாம்.

## 5. மற்ற இந்தியப் பண்பாடுகளின் பங்கு

தமிழ்மொழி திராவிட மொழிக் குடும்பத்தினைச் சேர்ந்தது. மொகஞ்சோதாரோ, ஹரப்பா கல்வெட்டுகளில் காணப்பெறும் மொழி மூலத்திராவிட மொழியே என்று இன்று பலரும் கருதுகின்றனர். திராவிடர்கள் தனி இனத்தார் என்ற நிலையிலன்றி, திராவிட மொழிகளைப் பேசு

வோர் என்ற நிலையிலே இந்தியப் பெரு நாட்டின் ஏனைய மக்களிடையேயும் பிற பண்பாடுகளிடையேயும் தம் பண்பாட்டுக் கூறுகளைப் பரப்பியிருந்திருக்க வேண்டும். அதே போன்று இவர்கள் பண்பாட்டிலும் பிறபண்பாட்டுக்கூறுகள் பரவியிருந்திருக்க வேண்டும். தமிழில் வடமொழியின் செல்வாக்குப்பற்றிய கதையை திரு. ஃபிலியோசா எடுத்துரைக்கும் இந்த நேரத்திலே திராவிடமொழிகளின் செல்வாக்கினுல் இந்திய மொழிகளில் ஒலியியலின் ஓரியல்பாக நாவளையொலிகள் பரவிய தன்மையையும் இவ்விந்திய மொழிகளின் தொடரியல் அமைப்பில் ஏறத்தாழ ஓர் ஒருமுகமான போக்கு வளர்ந்த தன்மையையும் குறிப்பிட்டே ஆகவேண்டும். வாக்கியத்தின் இறுதியில் பயனிலைகள் அமைந்து விளங்குவதே இவ்வொருமுகமான போக்காகும்.

## 6. தோன்றுமிடத்தின் இன்றியமையாமை

திராவிட மொழிகட்குள்ளே கிறித்துவ சகாப்தத்தின் துவக்கத்திலிருந்தே சிறப்பு மிக்க இலக்கியங்களைக் கொண்டு சிறந்த மொழி தமிழேயாம். இதனுடைய நெடுங்கணக்கு எழுத்து முறை ஏனைய திராவிட மொழிகள் எழுத்து முறை போல முழுதும் வடமொழியைப் பின்பற்றிய அமைப்பிலன்றித் தனித் தன்மைகொண்ட திராவிடக் கூறுகளை இன்னும் உள்ளடக்கி விளங்கக் காண்கிறோம். இதன் விளைவாகத் தமிழ் தவிர்த்த பிறதிராவிட மொழிகள் பிராகிருதமேயென்றும் இந்தோ-ஆரிய வடமொழியின் சிதைந்த வடிவங்களே எனவும் மக்கள் தவருக உணர்ந்து வாதிக்கத் தலைப்பட்டனர். எனவே ஊடாட்டமாகப் பரந்து விளங்கும் இப் பண்பாட்டுறவினைக் கண்டறிய முதலில் தமிழையே கொள்வது எளிதானது. அதிலும் திராவிடக் கூறுகளைக் கண்டறிந்துகொள்ளத் தமிழிலிருந்து தொடங்குவது எளிதாகிறது. ஆனுல் அதே போது தமிழ்ப் பண்பாட்டிலும் பிற கூறுகளின் பிணைப்பு உண்டு என்பதையும் நாம் மறக்கவில்லை. இன்னென்றையும் நாம் நினைவிற் கொள்ளவேண்டும். வடமொழியை நாட்டின்

எல்லாப் பகுதியைச் சேர்ந்த மக்களும் கருத்து பரிமாற்ற மொழியாகப் பயன்படுத்தினர். இதனால் ஒரு நூல் வட மொழியில் எழுதப்பட்டிருக்கின்றது என்பதாலேயே அது முழுதும் ஆரியப் பண்பாட்டினையே விளக்கி நிற்கின்றது என்று கொள்ள வேண்டியதில்லை. தமிழன் ஒருவனால் எழுதப் படுகின்ற ஓர் ஆங்கில நூல் ஓரளவுக்காவது தமிழ் நாட்டின் பண்பாட்டுக் கூறுகளைப் பெற்றே விளங்கும் என அறிதல் வேண்டும். சங்கரர் தாம் எழுதிய சௌந்தரிய லகரி என்ற நூலில் தேவாரம் அருளியவருள் ஒருவரான திருஞான சம்பந்தரின் தீவியபண்கள்பற்றிக் குறிப்பிடுகின்றார். ஆனால் அவரோ ஒரு காலத்தே ஒன்றாயிருந்த தமிழ் மண்டத்தில் கேரளப் பகுதியைச் சேர்ந்தவர். சென்னைக்கு அருகிலுள்ள திருபெரும்புதூரில் பிறந்த இராமானுஜர் தாம் அருளிய வட மொழி நூல்களுள் தமிழ்ப் பெரும் புலவர்களும், வைணவ அருளாளர்களும் கண்ட பேருண்மைகளை விளக்கியுள்ளார் என்பது மரபு. மணவாள மாமுனிகளும் பிறரும் கண்ட ஸ்ரீ வைணவம் என்பது தென்கலையாம் தமிழ்த் தன்மையை வற்புறுத்திப் போராடக் காண்கிறோம். இதுபோன்றே மெய்கண்ட தேவ நாயனாராலும் அவர் தம் சந்தான குரவ ராலும் சிறப்புடன் குறிப்பிடத்தக்க நெறியில் விளக்கப் பெற்றுள்ள சைவசித்தாந்தம் வடபுலத்தைச் சேர்ந்த சைவ சித்தாந்த ஆசிரியர்களின் கருத்துக்களை ஊடாடிய நிலையிலும் தமிழ்ச் சமய குரவர்களின் பண்பாட்டினையும் அவர்கள் கண்ட பேருண்மைகளையும் பெற்றிலங்குகிறது. பாகவத புராணம் போல எல்லாமே சுகமுனிவரால் இயற்றப்பெற் றவை என்று காட்டிக் கொள்கின்ற நூல்களையும் நாம் காண்கிறோம். எனவே குறிப்பிட்ட நூல் நாட்டின் எப்பகுதி யில் தோன்றியது என்பதனையும் நாம் காணவேண்டும். இவ் வகையில், பல பேரறிஞர்களின் கருத்துப்படி பாகவத புராணம் தென்னிந்தியாவைச் சேர்ந்தது என்பது அறிந்து கொள்ளத்தக்க பெரிய சுவையான செய்தி. இவ்வாறே மகா பாரதத்தில் பெரும் பகுதிப் பாடல் மரபு தென்னாட்டினதே யாகலின் கூடுதலாக அங்குக் காணப்பெறும் பாடல்கள் தென்னகப் பண்பாட்டின் தொடர்பினால் ஆக்கப்பெற்ற

வையே எனக் கருதலாம். இத்தகைய பொதுவான நிலைமை யினை விளக்குவதே இங்கே நோக்கமன்றி இக்குறிப்பிட்ட வற்றின் செல்வாக்கைத் தொகுத்துக் கூறவோ, அது பற்றிய வன்மை மென்மைகளை ஆய்வதோ இங்கு நோக்கமன்று.

# தமிழ்ச் செல்வாக்கு

## 1. இந்தியாவில் (அ)

## 1.1. அனைத்து இந்தியாவிலும் தமிழ்ச் செல்வாக்கு

### *(i)* தமிழ் நாட்டிலிருந்து பக்திநெறி பரவியது

### 1. பொதுவான சில போக்குகள்

பிரம்மாண்டம், பவிஷ்யத் என்னும் புராண நூல்கள் பக்தி என்பதனை ஒரு பெண் குழந்தையாக உருவகப்படுத்தி இக்குழந்தை திராவிடம் அல்லது தமிழ் நாட்டில் பிறந்து (இப்புராணங்களின் சில பாடமுறைகள் குறிப்பாகக் காவிரியிலும் தாம்பிரபரணியிலும் இக்குழந்தை பிறந்ததாகக் கூறும்.) தென்னகம் எங்கும் சென்று வளர்ந்து குஜராத்தினை அடையும்போது முதியவளாக மாறுகிறாள் என விவரிக்கின்றன. தமிழ்நாட்டு ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் உலகுக்களிக்கப்பெற்ற பக்தி நெறியினையே இவ்வுருவகம் உறுதியாகச் சுட்டி நிற்கிறது எனலாம். தமிழகத்தின் இப்பக்தி இயக்கத்தில் பலவேறு போக்குகளைக் காண்கிறோம். இந்நெறி அனைத்திந்தியாவிலும் சென்று பரவி அவ்வப் பகுதிகளில் பிரிக்க முடியாத ஓரியல்பாக அமைந்து விட்டது எனலாம். இவ்வாறு நாம் கூறும்போது நாட்டின் பல பகுதிகளிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்பெறும் இவ்வியக்கத்தின் சில தன்மைகளையே நாம் சுட்ட முடிகிறது. எனவே தமிழகத்தில் இவற்றிற்கான தோற்றுவாய்களைக் கண்டறிகின்ற நிலையிலே ஒரு பொதுவான தொகுப்பு உருவமே இங்குக்காட்டப்பெறுகிறது. அப்போதும்

இவை அனைத்துமே ஓராசிரியரிடம் விளங்குகின்றன என்று கொள்ளக் கூடாது.

(அ) **தொண்டு :** தமிழகத்தில் பக்திநெறி துவக்க நிலைகளிலே வெறும் உணர்ச்சிக் கூப்பாடாக அமைய வில்லை. உணர்ச்சி வெளியீடாக மட்டுமே அமையவில்லை; அறிவாராய்ச்சி நிலை மறக்கப்படவும் இல்லை. பொதுவாக மனிதனில் கடவுளைக் காணல் என்ற கருத்தே வலியுறுத்தப் பெற்றது எனலாம். மக்களின் சேவை இறைவனின் சேவையாயிற்று. இவ்வகைச் சேவையில் 'கைத்தொண்டு' புரிவது தெய்வீகமாகவே கருதப்பெற்றது.

(ஆ) **உலக மறுப்பின்மை :** உலகின் மீது பற்று இல்லாம லிருத்தல் என்ற கொள்கை வலியுறுத்தப் பெற்றாலும் எந்த அடியாரும் உலக வாழ்வை மறுத்துப் புறக்கணிக்க வேண்டும் என்று கூறவில்லை. சில அடியார்கள் திருமணம் ஆனவர்கள். அவர்கள் மனைவியரும் அவர்களைப் போலவே புகழும் பெற்றார்கள். சைவ சமயத்தில் பெண் அடியார்க ளான காரைக்கால் அம்மையாரும் வைணவத்தில் ஆண்டாளும் விளங்குகிறார்கள். இவர்கள் எல்லோரும் பழுத்த அடியார்கள்; ஞானிகள்; சமயவழி நின்று இறைவனைக் காணத்துடித்த சித்தர்கள். இவர்களது பாடல்கள் அவர்கள் கண்ட கடவுள் அனுபவத்தை நமக்குக் காட்டி நிற்பன. இறைவனது திருவிளையாடலாகவும், அவனது அருளின் பருவடிவாகவும், நாம் உய்திப்பெற அமைக்கப்பெற்ற சிறந்ததொரு பள்ளியாகவும் விளங்குகிற இவ்வுலகம் கடவுளின் ஒரு பெரிய அவதாரவடிவமாக முழு அழகுடன் மிளிர்கின்றது.

''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்''

எனப் பாடுகின்றார் ஞானசம்பந்தர். இந்நோக்கிலேயே அவர் இறைவனின் கோயில்களைச் சுற்றியுள்ள இயற்கை யழகின் சிறப்பையெல்லாம் உணர்ந்து நயந்து போற்றிப் பாடுகின்றார். குழந்தைகளைத் தெய்வச் சின்னங்கள் என்றும் மலைநிலத்திலே ஓர் இளம் பாமரத்தாய் தன் குழந்தைக்

காகப் பாடும் தாலாட்டால் மனம் கவரப்பட்டுத் திருவீழி மிழலை என்றவாறு கற்கோயிலே உலகிற்கு வந்தது என்றும் திருஞானசம்பந்தர் கவிதையுணர்வோடு பாடுகின்றார்.

(இ) **இசை:** பொதுவாக இப்பக்தர்களின் பாடல்கள் இசைப்பாடல்களாக அமைந்தன. திருஞானசம்பந்தர் இசையினால் மனமாசுகள் எல்லாம் நீக்கப்பட்ட நிலையில் இதயம் தூய்மையில் மலர்ந்து இறைவனின் தூய ஒளியினை வெளிக்காட்டி நிற்கிறது என்பர்.

(ஈ) **ஓரினம்:** கடவுள் தொண்டர்கள் அன்பும் தொண்டும் நிறைந்த ஓரினத்தவர் ஆவர். அவர்கள் சாதிப் பிரிவினைகளையும் அவற்றின் உயர்வு தாழ்வுகளையும் நம்புவதில்லை. நந்தனார் போன்ற அரிஜனங்கள் இறைவனால் விரும்பப்பட்டவர். திருப்பாணாழ்வாரைக் கோயில் கருவறை வரை கொண்டு சென்றதுபோலத் திருநீலகண்ட யாழ்ப் பாணர் போன்றோரைச் சம்பந்தர் போன்ற ஞானிகள் தூய வேள்வியறைக்குக் கொண்டு சென்றார்கள். திருமூலர் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என அறைகூவி நிற்பர். வைணவர்கள் ஆண்டவனின் அடியவர்களைத் "தொண்டர் குலம்" என்பர். மைசூர் மாநிலத்தில் உள்ள மேல்கோட்டை என்ற இடத்தில் உள்ள கோயிற் கதவுகளை அரிஜனங்கள் உட்பட எல்லோருக்கும் திறந்துவிட்டார் இராமானுஜர் என்பர். இன்றும் இக்கோயில் அரிஜனங்களுக்காகத் திறந்து விடப்படுகிறது. ஆனால் இராமானுஜருக்குப் பின் மீண்டும் தீண்டாமைக் கொள்கையும் சாதிக் கட்டுப்பாடுகளும் மக்களிடையே தலை தூக்கியதன் விளைவாக ஆண்டுக்கு ஒரு மாதம் மட்டுமே அவர்களுக்காகத் திறந்துவிடப் பட்டிருந்தது.

(உ) **அன்பும் அனுபூதியும்:** பக்தர்கள் திருமணத்திற்கு முன்னும் பின்னும் காதல் வாழ்வில் மக்கள் பயன்படுத்தும் மொழியினையும் பயன்படுத்தினர். ஆனால் சிற்றின்பம் என்கிற அளவுக்கு அவர்கள் இறங்கிவிடவில்லை. இறையனுபவம் என்பது ஏதோ சில குறியீட்டு மொழிகளாலன்றி வேறு எவற்றாலும் விளக்கமுடியாத நிலையிலே இறைவன் மீது

காதல் என்ற நிலையில் அதனை விளக்குவது எளிதாக அமைந்தது. திருமூலர் துணிவாக இறைவனைக் காதல் அல்லது அன்பு என்பதனோடு ஒப்பிடுகிறார். சங்கத்து அகப்பாட்டுக்கள் அன்பு என்பதனையே அடிப்படையாகவும், உலகத்திற்கெல்லாம் பொதுவாகி நின்று உள்நின்று ஒளிரும் உண்மையாகவும் கொண்டன. இந்த அன்பினது பல்வேறு கூறுபாடுகளையே தலைவன் தலைவி வாயிலாக அவை பாடுகின்றன. குறுகிய கால எல்லைக்குள் அடங்கிப்போகிற ஒரு குறிப்பிட்ட ஒன்றனைக் கூறுது உலகத்தை உள்ளடக்கிய பொதுவான பரந்த நோக்கமே அங்கு வலியுறுத்தப்பெற்றது. ஆழ்வார்களாலும் இறைவனையும் அன்பையும் ஒருசேரக்கூறிய திருமூலரைப் பின்பற்றிய அடியார்களாலும் போற்றப்பட்டது. இந்த குறிக்கோள் வடிவமான அன்பே நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவன் மாட்டுத் தங்களுக்குள்ள அன்பினையே பாடினார்கள். இவ்வாறாகச் சங்க காலம் தொடங்கி பாரதியார் வரை இவ்வன்பு நெறிப் பாடல்களில் ஒரு தொடர்ச்சியினைக் காண்கிறோம்.

(ஊ) **பொருளில்லாச் சடங்குகள்:** பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கலாம் எனக் கருதத்தக்க சித்தர்களுள் குறிப்பாகச் சிவவாக்கியர் சடங்குகளை அவற்றின் குறியீட்டுப் பொருள் புரியாது கண்மூடித்தனமாகத் தொடர்ந்து பின்பற்றப்படுவதனைக் கண்டித்துள்ளார். சிலையை ஒரு குறியீடாகக் கருதாது, உண்மையாகக் கடவுளே என்று மயங்குகின்ற போது அது அறிவாராய்ச்சிக்கொவ்வாத மூடபக்தி ஆகிறது. சிவவாக்கியர் கூற்றுப்படி உள்நிறைந்து இயங்கும் இறைவனையுணராது வெறும் சிலையை வணங்குதல் பயனற்றதேயாம். எங்கும் நிறைந்து இலங்கும் இறைவனையுணராதாருக்குப் புண்ணிய ஆறுகளில் நீராடுதல் போன்ற குருட்டுத்தனமான நம்பிக்கைகளின் அடிப்படையில் செய்யும் சடங்குகள் எல்லாம் பயனற்றவையே என்கின்றார் அப்பர் பெருமானும். ஆனால் நிர்க்குணவழிபாட்டு முறையும் சகுண வழிபாட்டுமுறையும் வேறு பிரித்துக்காட்ட முடியாதபடி அவர்கள் பாடல்களில் பின்னிப் பிணைந்துள்ளன. இப்புலவர் பெருமக்களும்

ஞானிகளும் ஒரு முறையிலிருந்து மற்றொரு முறைக்கு எளிதில் மாறிச் செல்கின்றனர். சகுண வழிபாட்டு முறையை இறுதி முடிவாகக் கொள்ளாத அத்வைதிகள்கூட இம்முறையைச் சாடவில்லை. சகள, நிஷ்கள வழிபாட்டு முறைகளும் கூடச் சிலபோது பேசப்படுகின்றன. இராமானுஜர் கருத்துப்படி எங்கும் இறைவனை ஒருவன் உணர்கின்றபோது உலகில் காணும் அழகு வடிவங்கள் எல்லாம் இறைவனின் இயல்புக் கூறுகளில் ஒன்றான அழகு அல்லது சௌந்தர்யத்தின் அவதார வடிவங்களேயாம். அழகு பற்றி இக்கருத்தைக் கூறும்போது இதனாலேயே குருட்டு வழிபாட்டு முறையினைச் சரியானதென்று கருதுவதாகக் கொள்ளக்கூடாது.

(எ) **அரசியலும் மதமும்:** எப்போதுமே அரசியலுக்கும் மதத்துக்கும் பூசல் இருந்ததில்லை. ஆனால் தெய்வீகம் போற்றும் புலவர் ஆளும் அரசனிடத்தே தெய்வத்தைக் காண்கிறார். எனவேஅரசனை விஷ்ணுவின் பிரதிநிதியாகவே கண்டார்கள். அரசர்களின் ஈமச் சடங்குகள் முடிந்தவுடனே எஞ்சி நிற்பனவற்றின் மீது கோயில்கள் எழுப்பப்படுகின்ற வழக்கத்தினையும் காண்கிறோம். இவ்வகைக் கோயில் பள்ளிப்படைக் கோயில் எனப்பெறும். ஆனால் இவ்வழக்கம் கீழைக்கடல் நாடுகளில் காணப்பெறும் தேவராஜநெறி அளவுக்கு வளர்ச்சியடையவில்லை. அரசியலுக்கும் மதத்துக்கும் பூசலில்லை என்று கண்டோம். ஆனால் புத்த மதத்தவரும் சைனரும் கொண்ட உலக மறுப்புக் கொள்கையைப் பின்னர்ச் சைவர்களும், வைணவர்களும் எதிர்க்க வந்தபோது இப்புத்த மதத்தினரும் சைனரும் அப்போது ஆண்டுவந்த அரசர்களோடு தமக்கிருந்த செல்வாக்கினைச் சைவ வைணவரின் பேரெதிர்ப்பினுக்கு எதிராகப் பயன்படுத்தினர் எனக் கருத இடமிருக்கின்றது. பல்லவ அரசன் மகேந்திரவர்மனும் பாண்டிய மன்னன் நெடுமாறனும் சைன மதத்தை மிகுந்த ஈடுபாட்டோடு பின்பற்றியோர். இப்பாண்டிய அரசனைச் சைவ சமயத்திற்கு மாற்றும் முயற்சியில் வெற்றி கண்டார் திருஞான சம்பந்தர். மகேந்திரவர்மனால் போற்றப்பெற்ற சைனர்கள் கொண்டிருந்த பகைமையின் காரணமாகப் பின்

பெருந் தொல்லைகளுக்கு ஆளானூர் அப்பரடிகள் என்பது மரபு. அப்பரே பாடுகின்றூர்: "யாமார்க்கும் குடியல்லோம்." இந்த மனப்பான்மை இருபதாம் நுற்றூண்டைச் சேர்ந்த தேசிய கவி பாரதியாரின் பாடல்களில் ஒளி சிறந்து நிற்பதனைக் காணலாம். இவையன்றி இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில செய்திகளையும் காண்கிறேம். எடுத்துக் காட்டாகப் 'பக்தர்களைப் போற்ருவிடில் நாடு அழிவுறும்' என்று திருமூலர் திருமந்திரத்தில் பாடுவதனைக் காட்டலாம். இப்பாடற் கருத்து பாபரையும் அன்றைய அரசர்கள் பின் பற்றிய போர்க் கொலையினையும் எதிர்த்த குருநானக்கின் முழக்கத்தை நமக்கு நினைவூட்டுகிறது.

## 2. பிற இடங்களின் பக்திநெறியில் கூறுகள் (Aspects of Bhaktiwit)

இந்தியா முழுவதும் பரவிய பக்திநெறியின் துவக்கநிலை தென்னிந்தியாவே என்பதனைக் காட்டுவதற்காகவே மேற் கூறிய பக்திநெறியின் சில போக்குகள்—அவை சிறுவரவிற்றே யாயினும்—இங்குச் சுட்டப்படுகின்றன. பிற்பட்ட வகுப்பாரிடையே தோன்றிய ஞானிகள் புகழ் பரப்புவதற்காகச் சாதி முதலான வேற்றுமைகளை வெறுத்தல், மகாராட்டிரம், ஆந்திரா, கருநாடகம், வடஇந்தியா ஆகிய இடங்களில் காணப்பெறும் அறன் வலியுறுத்தல், அறிவின் உறுதியான தெளிவு, மக்களின் தொண்டே ஆண்டவன் தொண்டு என்று கொள்ளும் தூய ஞானத்தின் உணர்ச்சி ஒளி ஆகியனவற்றைத் தமிழ் நாட்டிலும் தமிழ்ப் பண்பாட்டிலும் நாம் கணாலாம்.

## 3. தொடர்பு

ஆந்திராவோடும், கருநாடகத்தோடும் தமிழரின் தொடர்புகள் இருந்தன. தமிழ்ச் செல்வாக்கு சாளுக்கியர் வழியேயும், இராட்டிரகூடர் வழியேயும் மகாராட்டிரத் திற்குச் சென்றிருக்கலாம். பின்னே மராட்டிய ஆட்சியின் ஒரு பகுதி தஞ்சையில் இருந்தபோது இச்செல்வாக்கு நேரடி

யாகவே நிகழ்ந்தது. இதன் விளைவாகத் தென்னிந்திய சைவ வைணவக் கதைகள் தஞ்சையில் தோன்றிய மராத்திய இலக்கியத்துள்ளும் புகுந்தன.

## 4. உலகப் பொது நோக்கு

பிற்காலத்தே வெளிநாட்டுச் சமயப் புகுத்தல்களை எதிர்க்கும் முகமாகச் சிலபோது பொறுத்துப்போகும்தன்மை யின்மையும் குறுகிய நாட்டுப் பற்றும் காணப் பெற்றாலும், பொதுவாக ஓர் உலகப் பொதுநோக்கும் இருந்து ஒருலகம் என்ற கருத்து வலியுறுத்தவும் பெற்றது. பிறரும் இந்திய ஒருமைப்பாட்டினை வலியுறுத்தியுள்ளனர். தமிழ் நாட்டில் இவ்விந்திய ஒருமைப்பாடு என்ற கருத்திற்கு மேலாக உலகப் பொதுநோக்கு என்ற கருத்தும் நிலவியது. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று பாடுகிறார் சங்கப் புலவர் பூங் குன்றனார். திருவள்ளுவர் இவ்வுலகப் பொதுநோக்கினைக் கொள்வதே கல்வியின் பயன் என்கின்றார். ''யாதானு நாடாமா லூராமா லென்னொருவன் சாந்துணையுங் கல்லாத வாறு''—திருவள்ளுவர். ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பார் திருமூலர். ஔவையார் ''சாதியிரண்டொழிய வேறில்லை'' எனப்பாடுவார். சுந்தரர் தமிழகத்தில் சாதி, பிரிவு, பால், வயது வேறுபாடுகளின்றி ஏதாவது ஒரு வழியில் மக்களுக்குத் தொண்டு செய்வதே இறைவனுக்குச் செய்யும் தொண்டு எனக் கருதிக்கொண்டு இந்நெறிக்காகத் தங்கள் வாழ்வையும் உறவினர்களையும்கூட உதறிவிடத் துணிந்து நின்ற பெருமக்களின் பெயர்களையெல்லாம் பாடிச் செல்கின்றார். இவ்வாழ்த்தும் வணக்கமும் தம்காலத்தே தாழ்வுற்ற நிலையிலிருந்த தமிழகத்திற்கு இறையருள் நிறைய உண்டு என்று உறுதிகூறி நம்பிக்கையை உண்டாக்கவே ஆம். ''அப்பாலும் அடிசார்ந்தார்'' என்ற, இவ்வழகிய தொடருக்கு நாயன்மார்களைப்பற்றிக் காவியமாகப் பாடவந்த சேக்கிழார் இவ்வாறெல்லாம் பொருள் கொள் கின்றார். சேக்கிழார் தம்முடைய பெருங்காவியத்தின் முதலிலும் இடையிலும் முடிவிலும் ''உலகெலாம்'' என்ற

தொடரைப் பயன்படுத்தியுள்ளார். இறைவனே இத் தொடரைச் சேக்கிழாருக்கு உணர்த்தியருளினான் என்பது மரபு. இது இங்கு நாம் விளக்குகிறபடி தமிழகம் கூறிக் கொண்டிருக்கும் உலகப் பெருஞ் செய்தியை உள்ளடக்கியது போல உள்ளது. விஜயநகர ஆட்சிக் காலத்தே வாழ்ந்த அருணகிரிநாதர் இதனைப் பாடுகின்றார். சமரச சன்மார்க்கம் அருளிய இராமலிங்க அடிகள் திருமூலரைப் போலவே கடவுளைத் தந்தையாகவும், மக்களைக் குழந்தையாகவும் கூறி இவர்களை எல்லாம் ஒருங்கு இணைப்பது ஆன்மநேய ஒருமைப்பாடு எனப்பாடுவர்.

## 5. நாடோடி ஞானிகள்

இவ்வுலகப் பொதுநோக்கு என்னும் கொள்கையினை இந்திய ஞானிகள் இந்தியாவில் மட்டுமன்றிப் பிற நாடுகளிலும் சென்றுலவிப் பரப்பினர். விரைவாகப் போக்குவரவிற்குத் துணைபுரியத்தக்க வசதிகள் இல்லாத அந்தப் பழங்காலத்தே இக்கொள்கை இந்தியாவிலும் பிறநாடுகளிலும் இந்நாடோடி ஞானிகளால் பரவியது என்பதை எண்ணும்போது வியப்பாகவே உள்ளது. திருஞான சம்பந்தரும், சுந்தரரும் இலங்கைக்கும், இமாலயத்திற்கும், அங்குள்ள சேதாரத்திற்கும் சென்றிருக்க வேண்டும். திருமங்கையாழ்வாரும் வடபுலத்திலேயுள்ள பெரும் வைணவத் தலங்களான நைமிசாரண்யத்திற்கும் பத்ரி நாத்திற்கும் சென்றிருக்க வேண்டும். சங்கரரும் இந்தியா முழுவதும் சென்றிருந்தார். பின்னர் இராமானுஜரும் மணவாள மாமுனிகளும் பிற அறிஞர்களும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களை உலகெங்கணும் பரப்புவதில் பெரு வெற்றி கண்டனர். இதன் விளைவாக விசிஷ்டாத்வைதம் என்கின்ற தத்துவம் அத்வைதம் போல அனைத்திந்தியாவும் போற்றும் ஒரு தத்துவமாக ஓங்கியது. தமிழ்நாட்டிற்குப் புறம்பே இக் கொள்கையினைப் பின்பற்றி வாழ்ந்த பெருமக்கள் ஆழ்வார்களின் பாடல்களையெல்லாம் தெலுங்கர் தம் தெலுங்கு எழுத்துக்களிலும், கன்னடர் கன்னட

எழுத்துக்களிலும், இந்தி பேசுவோர் இந்தியிலும், குஜராத்தியர் குஜராத்திலும் பின்னர் வங்காளியர் வங்களாத்திலுமாக மாற்றி எழுதித் தொண்டு புரிந்தனர். இவ்வாறு இப்பக்தி நெறி தென்னிந்தியாவிலும் வடஇந்தியாவிலும் சென்று பரவக் காரணமாயிருந்தவர் இந்த நடமாடும் கடவுள் திருக்கூட்டத்தினரேயாம். புத்த மதம் உலக மதமாகப் பரவியதன் விளைவாக விளைந்த விளைவே இதுவும் எனலாம். இவ்வாறுகத் தென்னிந்தியச் செல்வாக்கு இந்தியாவில் மட்டுமன்றி இலங்கையிலும் கீழைக்கடல் நாடுகளிலும் விளங்கக் காண்கிறோம்.

## 6. இப்பரவலைப் பற்றிய மரபுகள்

இவ்வகைப் பரவலே பின்னர் இராமானுஜரின் தத்துவ மரபிற்கும் இராமானந்தரின் மரபிற்கும் இடையே தொடர்புள்ளது என்ற கதைக்கும் கம்பரின் இராமாயணத்திற்கும் துளசிதாசரின் இராமாயணத்துக்கும் தொடர்புள்ளது என்ற கதைக்கும் அடிப்படையாக அமைந்து வலுவேற்றி நிற்கிறது எனலாம். வட இந்தியாவிலிருந்தும் குருநானக், துளசிதாசர் போன்றோர் தென்னிந்தியாவிற்கு யாத்திரை வந்துள்ளனர். இன்றும் இவ்வுலகப் பொதுமை நோக்கு யாத்திரையாக வரும் பக்கரிகளாலும், சித்தர்களாலும், பைராகிகளாலும், பிற ஆண்டவனின் அடியவர்களாலும் போற்றிப் பேணப்பட்டு வருகின்றது. இங்கு வலியுறுத்தப் பெறுவதெல்லாம் இவ்வகையான போக்கு தமிழ்நாட்டின் பக்தி இயக்கத்தில் குறிப்பிடத்தக்க அளவில் இருந்தது என்பதே.

## 7. சித்தர்

உண்மை என்பது மதங்களுக்கும் விவாதங்கட்கும் கோட்பாடுகளுக்கும் சாதி வேறுபாடுகட்கும் அப்பாற்பட்டது என்ற கருத்தினை ஐயந்திரிபற இத்தமிழ் ஞானிகள் தெளிவாக்கியுள்ளனர். கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர் இவர்களது கடவுள் பற்றிய விளக்கமுறை ''முசல்மான் இல்லை, இந்து இல்லை'' என்று கூறிய பழைய குருநானக்கின்

எதிர்மறை முறையிலல்லாது ''அவனே எல்லாம்; அவன் எங்கும் இருக்கிறான்; ஒவ்வொருவரும் அவனுடையவரே'' என்னும் உடன்பாட்டு முறையில் அமைந்ததாம். நம்மாழ்வார் 'நரமும் இறைவனே' என்பர். நாத பந்த், சூஃபிக்கள், பக்கிரிகள், தென்னிந்திய சமயங்களைப் பின்பற்றிய அடியார்கள் ஆகியோரது தொண்டினால், சகிப்புத் தன்மையில்லாத கற்றவர் சிலர் போலல்லாமல் பாமரர்களிடையே எல்லா மதங்களையும் மதிக்கும் தன்மை என்ற மனப்போக்கு வளர்ந்தது. இம்மக்கள் இன்றும் பெருங்கூட்டமாக மசூதிக்கும், கிறித்தவக் கோயில்கட்கும், இந்துக்களின் ஆலயங்களுக்கும் சென்று மனத்துக்கண் மாசில்லாப் பெருமக்களின் ஆசிபெறக் கூடுகின்றனர். சித்தர் பாடல்கள் என்ற தமிழ்த் தொகை நூலில் பீர் முகம்மது போன்ற சூஃபிக்களின் பாடல்களையும் நாதா பந்தைச் சேர்ந்த கோரக்கர், மச்சேந்திரர் போன்ற நாதர்களின் பெயர்களையும் காண்கிறோம்.

## 8. பொதுவான அறிவாராய்ச்சிச் சூழல்

உருவ வழிபாட்டினை எதிர்க்கும் தமிழ் நாட்டுச் சித்தர்களைப்பற்றி முன்னரே குறிப்பிட்டேன். கன்னட மொழில் **''வசனகளு''** எனப்பெறும் வீரசைவர்களின் பாடல்களும், தெலுங்கு நாட்டில் **''பத்யங்கள்''** எனப்பெறும் வேமனுவின் பாடல்களும் தமிழர்களுக்குச் சித்தர் பாடல்களையே நினைவூட்டும். இது பொதுவாக எங்கும் ஓர் அறிவாராய்ச்சிக் சூழலும் சிந்தனைப் போக்கும் பரவியிருந்தன என்பதற்குச் சான்றாகுமே தவிர ஒரு பகுதியிலிருந்து கருத்துக்களை இன்னொரு பகுதி கடன் வாங்கியது என்பதற்கான சான்றாகாது.

**(ii) கம்பரின் இராமாயணம்**

**(i) கம்பன்:** ஒவ்வொரு பகுதியினரும் ஒவ்வொரு விதமான கதை முறையைக் கொண்டிருந்தாலும் இராமாயணம் தங்கள் பகுதி இலக்கியமே என இந்தியாவின் பல பகுதியினர் தொடங்கித் தூரக்கிழக்கு நாட்டவர் வரை பலரும் உரிமை கொண்டாடுகின்றனர். இக்காப்பியத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு மிகப் பழங்காலத்தே உண்டு.

ஆனால் பெரும் புகழ் பெற்றதும் அனைவராலும் பாராட்டப் பெற்றதும் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை பல்வேறு வகையாகக் காலங்காட்டப் பெறுவதுமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு கம்பனுடையதேயாம். இதனைக் கடவுள் மனித அவதார மாக வந்ததனை விளக்கும் நாடகக் காப்பியம் என்றும் கூறுவர். இதனைப் போன்றதொரு இலக்கியப் படைப்பு தமிழில் வேறு இல்லை. சைவ வைணவர்கள் மட்டுமன்றிக் கிறித்தவரும், முகம்மதியரும்கூட இதனைத் தலைசிறந்த செய்யுளிலக்கியம் எனப் போற்றுகின்றனர். மக்கள் பெருமளவில் இக்காப்பியம் முழுவதனையும் மனப்பாட மாகவே செய்து வாய்மொழி இலக்கியமாகவே வழங்கி வந்தமையினாலே இந்நூலுள் அளவற்ற பாடவேறுபாடுகள் உள்ளன. இந்நூலின் புகழ் அது தோன்றிய காலத்தி லிருந்து இன்றுவரை தமிழ் வழங்குமிடமெல்லாம் ஓங்கிய வண்ணமாகவே உள்ளது.

**(அ) கன்னட நாட்டிலும் கேரளத்திலும்:** தமிழ்ப் பகுதி களிற்போன்றே கன்னட நாட்டிலும் கேளரத்திலும் இந்நூல் புகழ்பெற்று விளங்குவதுதான் இங்கு வியப்பு. கன்னட நாட் டைச்சேர்ந்த ஒருகோயிலில் கம்பராமாயணத்தை விளக்க வகை செய்தமைபற்றிய செய்தியைப் பதினான்காம் நூற் றாண்டைச் சேர்ந்த கன்னடக் கல்வெட்டொன்று தெரிவிக் கிறது. கேரளத்தார் கம்பனைக் கடவுள் நிலைக்கு உயர்த்தி யிருப்பது கம்பனிடத்தேயும் நூலிடத்திலும் அவர்களுக் குள்ள பற்றினைக் காட்டுகிறது. இலங்கையில் இராம—இரா வணப் போர் நிகழ்வதற்கு முன்னர் சிவபெருமான் இலங் கையைக் காவல் காத்து வந்த துர்க்கையிடம் இராமன் எளிதாக இலங்கைக்குள் நுழைவதற்கேற்ற வகையில் தன் இடத்தைவிட்டு நீங்கிச் செல்லுமாறு கட்டளையிட்டார் என்றும், அதுகேட்ட போர்க்கடவுளான துர்க்கை(ஒருவகை யில் சிவபெருமானின் பத்தினியாவார்) சிவபெருமானிடம் நிகழப்போகின்ற போர்களுக்கெல்லாம் முடிமணியாகக் கருதத்தக்க இராம-இராவணப் போரைத் தான் பார்க்கின்ற

வாய்ப்பினைப் பறித்துவிட வேண்டாம் என வாதாடினு ரென்றும், அதற்குச் சிவபெருமான் தான் எழுதப்போகும் செய்யுள் இலக்கியத்திலே (ஏனெனில் செய்யுள் இலக்கியம் என்பது உண்மை வாழ்க்கை எனும் நாடகத்தில் பங்கு பெறுவோர்க்கும் பார்ப்போர்க்கும் தெளிவாகாத பல உண் மைகளைக் காட்டிலும் மிகச் சுவையுடையதாயும் பேருண் மையையடக்கியதாயும் விளங்குதலின்) பெருஞ்சுவை பயக் கத்தக்க வகையில் அப்போரினை அவன் காணலாம் எனச் சொன்னுரென்றும், சிவபெருமான் தாம் உறுதியளித்தது போலவே கம்பனுக உலகில் பிறந்து இராமாயணத்தை எழுதினுர் என்றும் கூறுவது ஒரு மரபு. கேரளச் சிவன் கோயில்களில், குறிப்பாக வடகேரளத்தில், திருவிழாக் காலங்களில் இராமாயணக் கதையைத் தோற்பாவைக் கூத் தாக நடித்துக் காண்பிப்பதைக் காண்கிருேம். இவ்வாருகக் கம்பராமாயணம் முப்பத்திரண்டு தோற்பாவை அல்லது நிழற் கூத்துக்களாக ஆக்கப்பெற்றது. திரைக்குப் பின்னு லிருந்து ஆண்மக்கள் பாடல்களை நாடகப் பேச்சு வழக்கிற் கேற்ற வகையில் சிறிது மாற்றிப்பாட அப்பாடல்களுக்கான உரையை அழகாகவும் நகைசுவையோடும் மலையாள மொழியில் விரித்துக் கூறுவர். இந்த முப்பத்திரண்டு நாடகங் களும் சிவபெருமான் துர்க்கைக்குத் தந்த வாக்குறுதியை நிறைவேற்றுமுகத்தான் ஆக்கப் பெற்றன என்பது கருத்தாம். மறைந்த கவிமணி திரு தேசிய விநாயகம் பிள்ளையவர்கள் தென்கேரளக் கோவில்களில் காணப்படும் கல்வெட்டுக்கள் கம்பராமாயணத்தைப் படிக்கவும், விரிவுரை செய்யவும் நிவந்தங்கள் அளித்தமைக்கான சான்றுகள் கொண்டுள்ளன என்று என்னிடம் ஒரு சமயம் சொன்னுர்கள். ஆனுல் இது போன்று தெலுங்கு நாட்டில் கம்பராமாயணம் வழக்கின்றி இருந்தமை வியப்பிற்குரியதே.

**(ஆ) துளசிதாசரில் கம்பன்:** வட இந்தியாவில் துளசி தாசரின் ''ராமசரித்மானஸ்'' என்ற நூலில் கம்பராமா யணத்தின் செல்வாக்கு உள்ளது என்று கருதுவர். தஞ்சை மாவட்டத்தில் உள்ள தர்மபுரம், திருப்பனந்தாள் மடத்

தினர் இம்மடங்களைப் பின்பற்றும் குமரகுருபரர் காசிக்குச் சென்று கம்பராமாயணத்தை இந்திமொழியில் விளக்கிய தோடு மட்டுமன்றிக் கங்கைக் கரையில் ஒரு மடத்தினையும் தோற்றுவித்தார் என்பர். குமரகுருபரர் இவ்வாறு இந்தியில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் வாயிலாகத் தமிழ்மரபு இராமாயணத்தைத் துளசிதாசர் அறிந்திருக்கவேண்டும் எனச் சில தமிழறிஞர் கொள்வர். ஆனால் குமரகுருபரர் காசிக்கு வருவதற்கு முன்பேயே துளசிதாசர் தமது இராமயணத்தை எழுதிவிட்டார். இருந்தபோதிலும் துளசிதாசர் தென்னாட்டிற்கு இராமேசுவரம் வரை வந்தபோது கம்பர் கண்ட இராமாயணத்தைக் கேட்டிருப்பார் என்பது இயலாத ஒரு செயலல்ல. துளசிதாசரே பிற இடங்களில் வழங்கும் கதை மரபுகளையெல்லாம் பயன்படுத்தியிருப்பதாகப் பாடுகிறார். அடுத்த நாள் வில் வளைத்துச் சுயம்வரம் நிகழ்வதற்குமுன்பே கம்பன்கண்ட இராமனும் சீதையும் ஒருவரையொருவர் நோக்கி அப்போதிருந்தே ஒருவரையொருவர் காதலிக்கவும் தொடங்கிவிடுகின்றனர். இத்தகைய திருமணத்திற்கு முந்தியதான காதல் அல்லது களவொழுக்கம் பழைய சங்க இலக்கியங்களால் பெரிதும் போற்றிப் புகழப்படுவது. இத்தகையதொரு நெறியினைத் துளசிதாசரும் சீதை பூசைக்குச் செல்லுமுன் இராமனைப் பார்த்ததாகக் கூறும் பகுதியில் பின்பற்றிக் கூறியிருப்பதே இங்கு முக்கியமாகக் கருதத்தக்கது. சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த என்னுடைய நண்பர் திரு டாக்டர் சங்கரராஜ் அவர்கள் துளசிதாசரிடத்தே காணப்பெறும் கம்பனின் செல்வாக்கை மிகவிரிவாக ஆராய்ந்திருக்கின்றார். இனிக் கம்பராமாயணத்திலும் வால்மீகியின் செல்வாக்கு விளங்குவதை விரிவாக ஆய வேண்டுவதில்லை. எனினும் ஆழ்வார்கள் பாடல்களின் அடிப்படையிலும் நாடோடிக் கதைகளாகவும் நாடோடிப் பாடல்களாகவும் வழங்கி வந்தவற்றின் அடிப்படையிலும் கம்பன் தன் இராம கதையை மேலும் விரிவாக்கி மெருகூட்டியுள்ளான் என்பதை இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். வங்காளத்தினைச் சேர்ந்ததாகக் கருதப்பெறும் "மஹிராவண" கதையின் செல்வாக்கினையும் கவிஞர் கீர்த்தி

வாசரின் செல்வாக்கினையும் இங்குக் குறிப்பிட வேண்டும். பிற்காலத்தே தமிழ்நாட்டுப் பெண்களிடையே புகழ்பெற்ற வாய்மொழி இலக்கியம் **'மயில் ராவணன் கதை.'** சைதன்யரின் மரபுடையோர் இக்கதையினைத் தமிழ் நாட்டிற்கு கொண்டு வந்திருக்கலாம்.

## தமிழ்ச் செல்வாக்கு

### I. இந்தியாவில்: (ஆ) குறிப்பிட்ட பகுதிகளில்

### 1. தமிழும் கேரளமும்

**(அ) கேரளத் தமிழ்க் கவிஞர்கள்:** கேரளத்தவர் பழங் காலத்தே தமிழிலக்கியத்தையே தங்கள் இலக்கியமாக ஒப்புக்கொண்டனர். தமிழ்ப் பெருங்காப்பியமான சிலப்பதி காரம் கேரளத்தில் பிறந்தது என்பர். சைவ நாயன்மார்களுள் ஒருவரான சேரமான் பெருமாள் நாயனர் ஒரு கேரள மன்னர். இவரைப் போன்றே வைணவ ஆழ்வார்களுள் ஒருவரும் தமிழ்ப்பெரும் புலவருமான குலசேகரப் பெரு மாளும் வேணுட்டடிகள் என்ற சைவப் பெரும் புலவரும் கேரளத்தவரே. கி.பி. பத்தாம் நூற்றுண்டிற்குப் பின்னர் இராம சரிதத்தோடே மலையாள இலக்கியம் தோன்றுவ தாயிற்று; சிலர் இந்நூலையும் தமிழில் எழுதப்பெற்றது என்பர். ஆனல் பின்னர்த் தோன்றிய இலக்கியங்கள் குறிப்பாக நம்பூதிரிகளால் மணிப்பிரவாள நடையில் ஆக்கப் பெற்றவை-மலையாளம் அல்லது கேரளத் தமிழில் ஆனவை எனலாம்.

**(ஆ) மலையாளம் இலக்கிய மொழி ஆயிற்று:** இவ்வாறு கூறும்போது மலையாளம் அந்நாட்டிலே ஒரு மொழியாக மிகப் பழங்காலத்தே வழங்கி வந்தது என்பதை மறுக்க வில்லை. மலையாளம் மேனிலையெய்தி இலக்கியமொழி என்ற நிலைமைக்கு வந்தபோதும்கூடச் சோழ, பாண்டிய நாடு களில் வழங்கிய செந்தமிழினின்றும் வேருகக் கேரளத் தமிழ் என்றே கருதப்பெற்றது. வடமொழியில் எழுதப்

பெற்றுள்ள **லீலா திலகம்** என்ற இலக்கண நூலே துணிவாக முதன்முதலில் இவ்வகையில் மலையாள மொழியை ஆராய்ந்து பல மலையாள இலக்கிய மேற்கோள்களுடன் இலக்கணம் தருகின்றது. ஆனால் இவ்விலக்கண ஆய்வும் ''செந்தமிழ்'' பற்றிய ஆழ்ந்த அறிவையும் தொடர்பையும் விளக்கி நிற்கிறது.

*(இ)* **கண்ணசரும் தமிழ் இலக்கியமும்:** கண்ணசக் கவிஞர்கள் என்போர் மலையாள இலக்கிய வரலாற்றிலே தனியிடம் பெற்றுத் திகழ்பவர்கள். இவருள் ஒருவர் **பகவத் கீதையை** மொழி பெயர்த்துள்ளார். இம்மொழி பெயர்ப்பினைப் பற்றி நான் கீழைக்கலை மாநாட்டில் படித்த கட்டுரையொன்றில் இது சங்கர உரைவழி நின்று **பட்டர்** என்பார் தமிழில் செய்த பகவத்கீதை வடிவத்தின் மொழி பெயர்ப்பு அல்லது தழுவல் என்று சுட்டிக்காட்டியுள்ளேன். சென்னை மாநிலக் கல்லூரியில் முன்பு என்னோடு பணிபுரிந்தவரும் தற்போது சென்னை அரசினர் கலைக்கல்லூரியில் மலையாளப் பேராசிரியராக இருப்பவருமான திரு. உண்ணிகிடா இத் தமிழ் நூலையும் மலையாள நூலையும் ஒப்பிட்டு விரிவாக ஆராய்ந்து என்னுடைய கருத்துச் சரியானதே என்று நிறுவியுள்ளார்.

*(ஈ)* **பிற்காலம்:** பத்தொன்பதாம் நூற்றுண்டு வரை கூடத் திருவிதாங்கூர் அரசினைச் சேர்ந்த பதிவுக் குறிப்புக்கள் எல்லாம் தமிழிலேயே செய்யப் பெற்றன. சிவபெருமானின் அருள் திருவிளையாடல்களுள் ஒன்றுகிய (சிவபெருமான் ஒரு வலைஞனுக மீன்பிடிக்கவந்த கதையான) 'வலிவீசிய திருவிளையாடல் கதை' மக்களிடையே பெரிதும் புகழோடு வழக்கிலிருந்தமையான் இது மலையாளத்தில் மொழி பெயர்க்கப் பெற்றது. இந்நூல் இன்றும் கிடைக்கின்றது. கேரள சந்நியாசிகள் தென்னுட்டுக் **கைவல்ய நவநீதம்** என்னும் புகழ்பெற்ற வேதாந்த நூலைத் தமிழிலேயே பாடி ஓதிவந்தார்கள். இதன் மலையாள மொழிபெயர்ப்பொன்றும் உள்ளது. பத்தொன்பதாம் நூற்றுண்டில் **'மீனுட்சி பரிணயம்'** போன்ற தமிழ் நாடக நூல்கள்கூட மலையாள

எழுத்துக்களில் எழுதிப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. தமிழினது செல்வாக்கு சென்ற நூற்றூண்டு வரைகூட இருந்தது என்பதனையே இது காட்டுகிறது.

## 2. தமிழும் கன்னடமும்

## (1) பொது: அறுபத்துமூன்று நாயன்மார்கள்

### (ஆ) இன்றியமையாச் சிறப்பு

தமிழ் நாட்டின் பக்தி நெறியினைப்பற்றி விளக்குகின்ற போது 'மனிதனுக்குச் செய்யும் எச்சேவையும் இறைவனை வழிபடுகின்றதொரு முறையே' என்றவொரு கொள்கையை வாழ்க்கைக்கு வேண்டியதொரு குறிக்கோளாக வற்புறுத்திக் காட்டிய சைவ நாயன்மார்களின் இன்றியமையாப் பங்கினைச் சுட்டிக் காட்டியிருந்தேன். சுந்தரர் தமது புகழ் பெற்ற திருத் தொண்டத் தொகையுள் இப்பழைய நாயன்மார்களின் பெயர்களையெல்லாம் தருகின்றூர்' அவர் இவ்வடியார்களைத் தனியடியாராகவும் தொகையடியாராகவும் இருவகைப் பட்டியல் தருகின்றூர்.

## (2) கன்னடத்தில் குறிப்பாக

**(அ) ஒப்புமை ஆராய்ச்சி: பரவலான போக்குகள்:** ஞானிகளும் மாபெருங் கவிஞர்களும் பொதுமக்களிடையே பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த கவிஞர்களும் தமிழ் நாட்டைச் சேர்ந்த இவ்வடியார்களைப் பற்றிக் கன்னடத்தில் எழுதியுள்ளார்கள். தமிழ்ப் பண்பாடு மிக ஆழமாகப் பரவி யிருந்தமைக்கு இஃதொன்றே போதிய சான்றூகும். கன்ன டத்தில் பல திரிபுகளுடன் காணப் பெறும் இவ்வடியார் களின் பெயர்கள் பொதுமக்களிடமிருந்தே இவ்வழக்குகள் வந்தன என்பதைக் காட்டி நிற்கின்றன.

**(ஆ) ஆய்வுகள்:** இக்கட்டுரையுள் கன்னடம் பற்றிய இப்பகுதியை எழுதுதற்கு துணையாக இருந்த நூல் கருநாடகப் பல்கலைக் கழகக் கன்னடப் பேராசிரியர் திரு. ஹிரேமட் பதிப்பித்த கன்னடக் கவிஞர் சுரங்கமரின் **திரிசஷ்டி புராதன**

புருஷ சரித்திரம் என்பதாகும். பல ஆய்வுகளோடு கூடியது இவ்வாராய்ச்சிப் பதிப்பு. இந்நூலில் திரு. ஹிரேமட் எழுதியுள்ள முன்னுரையில் தமிழ்ப் பெரிய புராணத்தில் காணப் பெறும் வரலாறுகளோடு கன்னடத்தில் வழங்குகின்ற பல வழக்காறுகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்து எழுதியுள்ளார். புத்தகங்களின் அட்டவணையையும் அவற்றுள் சில நூல்களின் காலங்களையும் அந்நூலிற் கண்டவாறே இங்குக் குறிக்கின்றேன்.

(இ) அறுபத்துமூன்று நாயன்மார்களைப்பற்றி நேரடியாக விளக்கும் நூல்கள்:

| ஆசிரியர் | நூலின் பெயர் |
|---|---|
| ஹரிஹர | புராதன ரகளகளு (12 ஆம் நூற்றூண்டு) |
| சுரங்க | திரிஷ்டி புராதன சரித்திரம் (15-ம் நூற்றூண்டு) |
| வீரபத்ர | அறுவத்து மூவரு புராதன சரித்திர |
| சிவயோக சோமேஸ்வர | அறுவத்து மூவரு சாங்கத்ய |
| நிஜகுணயோகி | புராதன த்ரிவிதி |
| (பெயர் தெரியவில்லை) | புராதன தேவியர த்ரிவிதி |
| ( ,, ,, ) | அறுவத்து மூவரு புராதன சரித்ர |
| ( ,, ,, ) | பிராக்தந கண கதாவளி |
| ( ,, ,, ) | புராதன ப்ரகரணகளு |
| குமார சென்ன பசவ | புராதன சரிதெ |
| பத்ரவீத சுத | புராதன புராண சங்க்ஷேப விலாச |
| (பெயர் தெரியவில்லை) | சர்வ புராதனர புராண |
| லக்கண்ண தண்டேச | சிவதத்வ சிந்தாமணி (சில பகுதிகள்) |
| விரூபாக்ஷ பண்டித | சென்ன பஸவ புராண (சில பகுதிகள் 1584) |

(ஈ) அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றிக் குறிப்பிடும் நூல்கள்:

அடுத்தபக்கத்திலுள்ள கன்னட நூல்கள் பிற செய்திகளைப்பற்றி விளக்குகின்றபோது அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றன.

| ஆசிரியர் | நூலின் பெயர் |
|---|---|
| பொம்மரஸ.... ........ | சௌந்தர புராண (கி.பி. 1450) |
| அண்ணுஜி.................. | சௌந்தர விலாச (1600) |
| (பெயர் தெரியவில்லை).... | சௌந்தரேசன் அறுவத்து மூவரு லீலா |
| (,, ,,).................. | சௌந்தரேசன யக்ஷகான |
| சேரமாங்க..................... | சேரம காவ்ய (1562) |
| மஹாதேவ.......... | சிரியாள செட்டிய சாங்கத்ய (1650) |
| (பெயர் தெரிவில்லை).......... | சிரியாள செட்டிய ரகளெ |
| (,, ,,)............ | சிரியாள செட்டிய வார்திக |
| சாண்ட கவி............. | சிரியாள சத்வ வார்திக பரீகா |
| மஹாந்த தேசிக..................... | சிரியாளன சரித்ர |
| ஜெயராமாசார்ய........................ | சிரியாள ராஜ |
| லிங்க....... | சோள ராஜ சாங்கத்ய (ரகள் சோள 1530) |
| திரிபுவன தாத..................... | பகள் சோள ரகளெ |
| (பெயர் தெரியவில்லை)............... | கண்ணப்பரவ ரகளெ |
| (,, ,,)............... | நக்கநாயனுரு சுசீலயர சரித்ர |

(உ) **பெயர்களில் திரிபு முதலியன:** தமிழ்ப் பெயர்கள் தமிழகத்திலிருந்து வாய்மொழி வாயிலாகக் கன்னடம் சென்று கன்னடியர்களால் திரித்து வழங்கப் பெற்றமைக்கு மேற்கோள்களாகச் சில இங்கு தரப் பெறுகின்றன.

(1) **மெய்ப்பொருள் நாயனுர்:** மெய்ப்பொருள் நாயனுரைக் கன்னடத்தில் **சேதிராஜ** என்றழைப்பர். இஃது அவர் ஆண்ட நாட்டின் அடியாகப் பிறந்த பெயராம். தமிழகத்தில் தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கோவலூரைச் சுற்றிய பகுதிகள் சேதி நாடு எனப் பெறும்.

மூர்த்தி நாயன்மாரைக் கன்னடத்தில் **ஒலகாண்ட மூர்த்தி** என்பர். சுந்தரர் இவரை ''**மும்மையால் உலகாண்ட மூர்த்தி**'' எனக் குறிப்பர். இத்தொடருக்கு உருத்திராட்சம், விபூதி, சடை இம்மூன்ருல் உலகாண்டவர் என்பது பொருளாம். எனவே சுந்தரர் பாடல்களைக் கன்னட மரபு அறிந்திருத்தல் வேண்டும். தமிழில் இந்நாயனுர் கன்னடியரின் மதுரையாட்சிக்குப் பின்னர் அரசரானதாக உள்ளது.

ஆனல் கன்னடத்தில் இவரை அரசராகக் காட்டவில்லே. ''ஒலகாண்ட'' என்ற தொடர் அப்படியே—பொருள் விளங்காமல் கன்னடத்தில் றொடர்ந்து பயன்படுத்தப் பெற்றுள்ளது.

(2) திருநாவுக்கரசர் என்ற பெயர் கன்னடத்தில் அதற்கிணேயான வடமொழிப் பெயரான ''வாகீச'' என்ற பெயரால் வழங்கப் பெறுகிறது. இப்பெயர் தமிழ் நாட்டிலும் உண்டு.

(3) மூர்க்கநாயனுரை ''அச்யுத'' என்பர். அப்போதிருந்த சில மரபுகள் அவ்வாறு வழங்கி வந்தன போலும்.

(4) கேரளத்திலும் தமிழகத்திலும் வழக்கிலிருந்த சேரமான் பெருமாள் நாயனுர் என்று பெயர் கன்னடப் பேச்சு மொழி வடிவமான ''சேரம'' என்று வழங்குகின்றது.

(5) சக்தி நாயனுர் என்பது பாமரர் வழக்கினுல் ''காலசித்தையா'' என்று வழங்குகிறது.

(6) பாண்டியன் நெடுமாறனேச் ''சௌந்தர பாண்டிய'' என்பர். திருஞான சம்பந்தர் அருளினுல் கூன் நிமிர்ந்து அழகாகத் தோற்றமளித்ததனுற் போலும் இவ் வழக்கு.

(7) இடங்கழி நாயனுரை ''எட கெழவ'' என்பர் கன்னடப் பேச்சு மொழி வழக்கில்.

(8) மங்கையர்க்கரசியாரை மங்கயக்கரசி என்றும் காரைக்காலேக் கரிகால் என்றும் வழங்குவர்.

(9) தண்டி நாயனுரைக் கன்னடத்தில் நாட்யமிகு தண்டீச என வழங்குவர், இவர் பிறவிக் குருடர். பின்னர் இறைவனருளாலே கண்களேப் பெற்ருர். எனவே சுந்தரர் இவரை நாட்டமிகு தண்டி எனப் பாடுவர். நாட்டம் என்பது கண் எனப் பொருள்படும். எனவே கன்னடியர் சுந்தரர் பாடல்களே அறிந்திருந்தனர் என்பது தெளிவு. ஆனல் நாட்டம் என்னும் தமிழ்ச் சொல்லின் பொருளேயுணராது பாமரர் வழக்கு நிலேயில் நாட்ய மிகு (நாட்யம்= நடனம்) எனக் குறித்துள்ளனர்.

(10) இளையான்குடி மாறனைக் கன்னடத்தில் **எளயாண்ட** குடி மாறன் என்பர். இளையான்குடி என்னும் சிற்றூர் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது. மாற நாயனாரின் ஊராகும் அது. இளையான் என்பவனது குடியிருப்பு என்று பொருள்படுவது. செய்யுளோசை நோக்கி இதனைச் சுந்தரர் ''இளையான்றன்குடி'' (இளையானது குடி என்ற பொருளில்) என விரித்துக் கூறுவர். இன்று ஆடொலியாக (rrஎன்று ஒலிக்கப் பெறும் வல்லின ''றகரம்'' பழந்தமிழில் முன்னண்ணத் தடையொலியாக (t என்பது போல) ஒலிக் கப் பெற்றது என முன்னரே நான் வேறொரு நூலில் விளக்கி யுள்ளேன். இம்முன்னண்ணத் தடையொலி கன்னடத் தில் இல்லாத நிலையில் கன்னடத்தார் இதனைத் தங்கண் உள்ள நாவளையொலியாகிய ''ட''காரத்துடன் ஒன்றாகக் கருதிவிட்டனர். எனவேதான் ''**எளயாண்ட**'' என்ற வடிவம். இது கன்னடியர் சுந்தரர் பாடல்களை அறிந்திருந் தனர் என்பதை மீட்டும் வலியுறுத்தி நிற்கிறது.

(11) பிற: குலச்சிறை, கலிக்காமர், கழற்சிங்கன், கோச்செங்கணான் என்ற பெயர்களைத் தவறாக முறையே **கலசெவ, கலசெங்க, கலசெங்க பெருமாள்** என எழுதியுள்ள னர். இத்தலைப்புகளின் கீழ் விளக்கி எழுதப் பெற்றுள்ள கதைகளுள் இவற்றை நாம் காணலாம்.

கூற்றுவநாயனாரை ''**வேள் கோத**'' எனக் குறிப்பர். பெரிய புராணத்துள் விளக்கியுள்ளபடி இவர் இருங்கோ வேள் குடியினைச் சேர்ந்தவர். ''**கோத**'' எனப் பெறுவது **கூற்றுவ** அல்லது **கூற்ற** என்பதன் சிதைந்த வடிவமாம். **கூற்றுவ** என்பது **கூத்த** அல்லது கோத என்றாயிருக்கலாம்.

இயற்பகை என்ற பெயர் இஹப்பகை என வருகிறது. **பீமகவி** சடாட்சர தேவர் என்பாரும் **குப்பீமல்லணார்யர்** என்பா ரும் இப்பெயரைச் **சிந்து பல்லாள** எனக் குறிப்பார். ஆந்தி ரச் செல்வாக்கினைப் பற்றிப் பின்னர்க் கூறும் போது இதனைப் பற்றி விளக்குவோம்.

## (3) கதைகளில் காணப்பெறும் வழக்காறுகள்

இனிக் கதைகளில் காணப்பெறும் வழக்காறுகளைக் காண்போம். இவ்வழக்காறுகள் பெரியபுராணம் போன்ற பெருந்தமிழ் இலக்கியங்களினின்றன்றி நாட்டின் பல பகுதிகளில் பொதுமக்களிடையே பெரிதும் வழக்கிலிருந்து வந்தவை என்பதைச் சுட்டி நிற்கின்றன. கன்னடக் கவிஞர்கள் இலக்கிய வழக்குகளை நன்கறிந்தவரேயாயினும் தமிழ் நாட்டுப் பொதுமக்களிடமிருந்த வழக்குகளையே தங்களுக்கு ஊற்றுக் கண்களாகக் கொண்டனர். கதைகளில் காணப்பெறும் குழப்பம் இம்முடிவினையே கொள்ளச் செய்கின்றது.

**(அ) இளையான்குடியும் அப்பூதியும்:** கீழ்க்காணும் பகுதி முற்கூறிய கருத்தினை விளக்கும். இளையான்குடிமாற நாயனாரின் கதை முடிவில் அப்பூதி அடிகள் கதை முடிவும் (அப்பூதியாரின் மகன் வாழை இலை வெட்டச்சென்றதும், வெட்டும் போது பாம்பு கடித்து இறந்ததும்) பின் சிறுத்தொண்டர் கதை முடிவும் (அடியாரும் அவர்தம் மனைவியாரும் இறைவன் கட்டளையால் மகனைத் திரும்ப அழைக்க அவ்வாறே அழைப்பினைக் கேட்டுச் செத்த மகனும் உயிர் பெற்றுத் தெருக்கள் வழியே வந்தது) வருகின்றன.

**(ஆ) ஔவையும் சேரமானும் :** சில கதைகள் அன்று வழக்கிலிருந்திருக்க வேண்டும் அல்லது கன்னட நாட்டிலிருந்தே அவ்வழக்காற்றினையொட்டித் தமிழ்நாட்டிற்கு வந்து வழங்கியிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. சேரமான் பெருமாள் கதையில் கைலாசத்திற்குச் சேரமானும் சுந்தரரும் போய்ச் சேர்வதற்கு முன்பே ஔவையார் வந்த கதைய்யைச் சேர்த்துள்ளனர். காதம் என்னும் அளவு அரசனுக்கும் பாட்டிக்கும் ஒன்றே என்று ஔவை பாடியதாக ஒரு பாடல் தமிழ் நாட்டிலேயே கிடைக்கின்றது. கைலாசத்திற்குத் தன்னை அழைத்துச் செல்ல விநாயகர் மீது **''சீதக் களபச் செந்தாமரை''** எனத் துவங்கும் **அகவல்**

ஒன்றை அவர் பாடியதாகக் கூறுவர். ஆனால் அப்பாடலுள் அவ்வாறு வேண்டியதாக யாதொரு குறிப்புமில்லை.

## (4) தமிழில் கன்னடச் செல்வாக்கு

### (அ) அறுபத்து மூன்று நாயன்மார்கள் ;

(1) **திருநீலகண்டர்:** பெரியபுராணம் திருநீலகண்டர் புராணத்தே திருநீலகண்டர் மனம்போன போக்கிற்சென்ற தாகவும் அதனால் அவர் மனைவியார் அவரைத் தீண்ட மறுத்துவிட்டார் எனவும் கூறும். ஆனால் கன்னட வழக்கில் திருநீலகண்டர் அப்பழுக்கற்றவராகிக் காட்டப்பெற்றுள் ளார். ஆடற்கணிகையொருத்தி தற்செயலாகக் கழிநீரைத் தெருவில் வீசித்தெளிக்க அது அவ்வழியே சென்ற அடியார் மீது விழுகிறது. இது கண்ட கணிகை இதற்குக் கழுவா யாக அவ்வடியாரைத் தன் இல்லத்திற்கு அழைத்துவந்து திருமஞ்சனம் செய்வித்துப் பாராட்டி உணவளித்தாள். மரியாதை தெரிவித்தற் பொருட்டு நடந்த இவற்றையே அவர் மனைவியார் தவறாகக் கொண்டு அவரைத் தீண்ட மறுக்கின்றனர். இக்கதை வழக்கு கடந்த நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பெற்ற **சிதம்பர சாமிநாத புராணம்** என்ற நூலில் காணப் பெறுகிறது.

(2) **நந்தனார்:** பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருப தாம் நூற்றாண்டிலும் ஆந்திரத்திலும் தமிழ்நாட்டிலும் புக ழொடு விளங்கியது அரிசன அடியாரான திருநாளைப்போ வார்கதை பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் பெரும் இசைப் பாடலாசிரியர் கோபாலகிருஷ்ண பாரதியார் (இவர் பல வித இன்னிசைக் கருவிகளுடன் பாட்டோடு உரைநடையை யும் கலந்து கதை சொல்லுவார்; இதுவே பின் **'காலட்சேபம்'** என்ற பெயரோடு பத்தொன்பதாம் நூற்றாண்டில் வழக் கிற்கு வந்தது.) நந்தனார் சரித்திரக் கீர்த்தனையை இவரே இயற்றினார். இக்கீர்த்தனையில் காணப்பெறும் கதையே எங்கும் பெருவழக்காயிருந்தது. இக்கதையில் பிராம்மண நிலச்சுவான்தார் ஒருவரை ஆசிரியர் காட்டுகிறார். சாதிப் பற்றுமிக்க ஒரு தஞ்சாவூர்ப் பிராமண நிலச்சுவான்தாராக

நாடகப் பாங்கோடு அப்பாத்திரத்தைப் படைத்துள்ளார். இப்பிராமணரது கட்டளையை நிறைவேற்றும் வகையில் சிவபெருமானே ஒரே இரவில் ஆயிரம் வேலிக் கதிரையும் அறுவடை செய்து நந்தனுருக்கு உதவி செய்கிருர். இது போன்ற அரிசன மக்களைப்பற்றியும் அவர்களது சாதிக் கட்டுப்பாடு முறைகள் பற்றியும் உள்ளது உள்ளவாறே ஆசிரியர் விவரித்துள்ளார். சிதம்பரம் போகவேண்டு மென்ருல் நிலம் முழுவதும் அறுவடை செய்யவேண்டும் என்று நந்தனுருக்குக் கட்டளையிட்ட பிராம்மணரை முதன் முதலில் அறிமுகம் செய்தது கன்னட வழக்கிலேயாம். எனவே தமிழ் இலக்கியத்தே கன்னடச் செல்வாக்கு இருந்தமையைத் தெளிவாக அறியலாம்.

### (ஆ) அறுபத்து மூவர் தவிர:

**(1) அரிச்சந்திர சரித்திரம்:** கன்னடச் செல்வாக்கிற்கு இன்ஞென்றினையும் காணலாம். இந்தியா முழுவதும் பரவிய கதை அரிச்சந்திரன் கதை. உபநிடதங்களின் காலந் தொடங்கிப் பெருவளர்ச்சி பெற்ற கதை. வசிட்டருக்கும் விசுவாமித்திரருக்கும் பூசல். வசிட்டர் இந்திரனின் அரசவையில் அரிச்சந்திரனைப் போற்றிப் புகழ்கின்ருர். விசுவாமித்திரரோ வசிட்டர் புகழும் அத்துணை அளவிற்கு அவ்வரசன் இல்லை என்று தன் பெருமை, புகழ் எல்லாவற்றையுமே பணயமாக வைத்து வாதாடுகின்ருர். இதனுல் அரிச்சந்திரன் பல இன்னல்களையடைய நேர்கிறது. ஆனுல் அரிச்சந்திரன் இவ்வனைத்திலும் அப்பழுக்கற்றவனுகவே எஞ்சி நிற்கிருன். தன் மகனை எரிக்கச் சுடுகாட்டிற்கு வந்த தன் மனைவியையே வெட்ட முற்படுகின்ற போதும்கூட உண்மையே பேசும் நேர் வழியினின்றும் மாருக நடக்க அரிச்சந்திரன் மறுக்கின்ருன். இது கண்டு விசுவாமித்திரரே அவனை வாழ்த்துகின்ருர். விசுவாமித்திரரால் உருவாக்கப் பட்ட இச்சிக்கல்கள் இக்காலத் திரைப் படங்களிற் போலக் கதையை உயிர்த்துடிப்புள்ளதாக ஆக்கிவிடுகின்றன. இக் கதையமைப்பு முறை பதின்மூன்ரும் நூற்ருண்டைச் சேர்ந்த **''ராகவாங்க''** என்னும் பெருங் கன்னடப் பாவாணரையே

சாரும் என்பர். மகாபாரதத்துள் காணப்பெறும் கதை வழக்கு இவர் கதைக்குப் பெரிதும் ஒத்துள்ளமையால் தென்ஞட்டு மகாபாரதத்துள் இவர் கதையே இடைச்செருகலாகச் சேர்க்கப் பெற்றிருக்கலாம் என ஐயுறுகின்றனர். இந்நூலைப் பதிப்பித்த **திரு. என். பஸவராத்ய** என்பர் இம்முடிவிற்கே வருகின்ருர். இஃது இவ்வாருயின் பிற்காலத்தே தமிழில் வந்த அரிச்சந்திர புராணம் கன்னடக் கதை வழக்கினைப் பின்பற்றியதாதல் வேண்டும். இதற்கு முன்னர் அரிச்சந்திர வெண்பா என்ருெரு நூல் உண்டு. அரிச்சந்திர புராண ஆசிரியர் இவ்வெண்பாவினைக் குறிக்கின்ருரெனினும் தீயூழின் காரணமாக இந்நூல் முழுதும் இன்று கிடைத்திலது. தமிழக வரலாற்றில் ஹொய்சளர் வந்த காலத்தே முதன் முறையாக இந்நூலிலும் **ராகவாங்காவின்** செல்வாக்கு இருந்தது எனக் கொள்ளுதல் இயலும். இவ்வகையில் தமிழில் கன்னட இலக்கியச் செல்வாக்கைக் காணலாம்.

*(2)* **கன்னடத் தமிழ்க் கவிஞர்கள்:** இவர்களது செல்வாக்கைப் பற்றியும் இங்குச் சிறிது விளக்குவது மற்ருென்று விரித்தலாக ஆகாது. புலவர் சிவப்பிரகாசர் கன்னடியர்; வீரசைவர். இவர், முதல் நூல்களால் மட்டுமன்றி மொழி பெயர்ப்புக்களாலும் தமிழிலக்கியத்தைச் செழிக்கச் செய்தவர். இவர் **சாமரசர்** என்பார் இயற்றிய கன்னடப் **பிரபு லிங்கலீலை**யைத் தமிழில் மொழிபெயர்த்தார். படிப்பவர் யாருமே இதனை மொழிபெயர்ப்பு என்று ஐயுருத வகையில் அத்துணை அழகாக மொழிபெயர்த்துள்ளார். **நிஜகுணயோகி** என்பார் எழுதிய **தர்க்க பாஷா** என்ற நூலைத் தமிழ் உரை நடையிலும், (அந்த யோகியார் எழுதிய) **விவேக சிந்தாமணி** என்ற நூலைத் தமிழ்ச் செய்யுளிலும் மொழிபெயர்த்துள்ளார். அவரும் அவர் உடன் பிறந்தாரும் **காளஹஸ்தி மகாத்மியம்** என்னும் நூலைத் (தமிழ் மரபு, தமிழ் நூல்கள் ஆகியவற்றின் கருத்துக்களை வாங்கிக்கொண்டு எழுதினர் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.) **தமிழில் சீகாளத்திப் புராணம்** என்ற பெயரோடு தந்துள்ளார்கள். பின் வந்தோரால் **பசவ புராணம்** போன்ற வீரசைவ நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படலாயின.

*(3)* **வீரசைவ மடங்கள்:** தமிழ் நாட்டிற்கு வீரசைவர்கள் வந்தார்கள். பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு தமிழ்க் கையெழுத்துப் பிரதியில் காணப்பெறும் குறிப்பு ஒன்று தமிழ்நாட்டுச் சைவமடங்கள் பலவற்றிற்கு வீர சைவர்கள் தலைமை பூண்டார்கள் என முறையிடுகிறது. தமிழகத் தத்துவ உலகில் அவர்கள் பெருஞ் செல்வாக்கு வாய்ந்தவர்களாய்த் திகழ்ந்தனர் என்பதனையே இது காட்டு கிறது. **சிவஞானபாலய சுவாமி** என்னும் சித்தர் பாண்டிச் சேரிக்கு அருகே பொம்மபாளையத்தில் ஒரு மடத்தை நிறு வினார். இவரே சிவப்பிரகாசரின் குருநாதர். வீரசைவத்தின் தீவிரத் தன்மையினைத் தமிழ் நாட்டினர் விரும்பாதுபோகவே பரந்த உள்ளம் கொண்டோராய் மாறுபட்ட தத்துவக் கொள்கைகளிடையே இயைபினை ஏற்படுத்த முனைந்தனர் வீரசைவர். அவ்வியைபினை எல்லா மதஞானியரிடையேயும் பொதுவாகக் காணப்பட்ட சித்தானுபவத்தின் அடிப்படை யில் ஏற்படுத்தினர். வீரசைவ மடமாகத் தோன்றிய திருப் பாப்புலியூர் மடத்தினைச் சேர்ந்த **ஆறுமுகசுவாமி**, **நிஷ்டானு பூதி** என்னும் அனுபவ நூலை எழுதினார். சிவப்பிரகாசரின் மைத்துனரான **சாந்தலிங்க சுவாமி** பெண்கள் விளையாட்டின் போது பாடும் பாடற்பண்ணில் **அவிரோத உந்தியார்** என்னும் நூலை எழுதினார். **அவிரோத** என்ற நூலின் தலைப்பிற்கேற்ற வகையில் அந்நூலில் எல்லாத் தத்துவக் கருத்துக்களிடையேயும் ஓர் இயைபினை ஏற்படுத்திக் காட்டுகின்றார். குறிப்பாகச் சைவத்தையும் அத்வைத வேதாந்தத்தையும் எடுத்துக்காட்டி இவற்றிற்கிடையே உண்மையில் முரண் எதுவும் இல்லை எனக் குறிப்பிடுகின்றார். சாந்தலிங்கரின் சீடரான **குமாரதேவர்**, **மகாராசா துறவு** என்னும் நூலின் ஆசிரியர். இவரின் சந்தான பரம்பரையில் வந்த **சிதம்பரசுவாமி** என்பார் சாந்தலிங்கரின் நூல்களுக்கு அவரின் தத்துவக் கருத்துக்களை எடுத்துக்காட்டி விளக்கும் வகையில் ஓர் உரை எழுதியுள்ளார். இவரும் ஒரு பக்திக் கவிஞரே. இவர் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள திருப்போரூரில் ஒரு மடத்தை நிறுவினார். இமடமும் இது போன்ற பிறவும் பெருந்தமிழ்க் கவிஞர்களும், அறிஞர்

களும் தோன்றக் காரணமாயிருந்தன. இதுபோன்ற மறைந்த நாடகாசிரியர் திரு **கைலாசம்**, இன்று நம்மிடையேயுள்ள திரு **குண்டப்பா**, திரு **மஸ்தி சீனிவாச ஐயங்கார்** போன்ற பல தமிழர்களும் கன்னட நாட்டிற்குச் சென்று தங்கி இன்றும் கன்னட இலக்கியத்தை வளப்படுத்தி வருகின்றார்கள்.

## (5) தென்னிந்திய வரலாறு இத்தொடர்பினை ஊக்கியது

தமிழ் நாடும் கன்னட நாடும் அருகருகே இருந்தமையால் இவ்வாறு இருவர்க்குமிடையே உறவும் செல்வாக்கும் தோன்றலாயின. மைசூர் மாநிலம் சங்க காலத்திலே குறிப்பிடப்பெறும் பழைய எருமை நாடாக இருக்கலாம். கங்கர்களும் சாளுக்கியர்களும் ஹொய்சளர்களும் தமிழரசர்களோடு மணஉறவுத் தொடர்புடையவர்கள். பல்லவர் காலத்தேயும் அதற்கு முன்பும் தமிழ், கன்னடச் சைனர்கள் ஒரு நாட்டிலிருந்து இன்னொன்றிற்கு எளிதாகப் போய் வந்தனர். **சிரவணபெல்கோளா** கல்வெட்டொன்று சைனர்கள் எழுதிய சிந்தாமணி, சூளாமணி ஆகிய நூல்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது; இவை அப்பெயரில் வழங்கி வந்த பழம் பெரும் தமிழ் இலக்கியங்களாகும். தமிழிலும் கன்னடத்திலும் **ஜீவசம்போதனை** என்ற நூல் உள்ளது. ஹொய்சளர் காலத்தே பாண்டிய சோழர்களின் மதிப்பிற்குரிய மாமனாராக ஹொய்சள மன்னன் "**மாமடி**" எனப் போற்றப் பெற்றான். ஹொய்சள ஆட்சிக்குட்பட்ட தமிழ்ப் பகுதிக்கு ஸ்ரீரங்கத்திற்கு அருகேயுள்ள கண்ணனூர் தலைநகராக ஆயிற்று. இரு நாடுகளும் விஜயநகரப் பேரரசின் கீழும் பின்னர்ப் பிரிட்டிஷ் பேரரசின் கீழும் வந்தன. இன்று தான் மக்கள் எல்லைக்கருகேயுள்ள சிற்றூர்களைக் குறித்துப் பூசலிடுகின்றனர். ஆனால் பல காலமாகப் பிரிட்டிஷ் பேரரசின்கீழ் மலையாளிகள், கன்னடியர், ஆந்திரர், தமிழர், மராத்தியர் ஆகிய அனைவரும் ஒன்றாகவே வாழ்ந்தனர். இன்று இவ்வைவரிடமும் இன்றைய எல்லைத் தாவாவில் அரசியலே அதிகம் காணப்படுகிறதேயன்றிப் பண்பாட்டினைக் காணோம்.

# 3. தெலுங்கும் தமிழும்

**(அ) ஆய்வுகள்:** ஆந்திரத்தில் தமிழின் செல்வாக்குப் பற்றிய நமது ஆய்விற்குச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெற்ற திருமதி **ஆதிலட்சுமி** அவர்களின் **''தென்னாட்டில் சைவம்''** என்ற ஆராய்ச்சிக் கட்டுரையும் **டாக்டர் சல்லா இராதாகிருஷ்ண சர்மா** அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரையும் மிக இன்றியமையாதன.

**(ஆ) காலப்போக்கில் தொடர்பு:** அறுபத்து மூன்று நாயன்மார்களின் கதைகள் கன்னட நாட்டிற் போலவே ஆந்திர நாட்டு வீரசைவர்களிடையேயும் புகழொடு விளங்கின. ஆந்திரத்தோடான தொடர்பு சங்க காலத்திலிருந்தே தொடங்குகிறது. **புல்லி** திருப்பதியை ஆண்டான் எனச் சங்கப்பாடல்கள் கூறுகின்றன. காஞ்சியை ஆளவந்த பல்லவர்கள் தங்கள் தலைமையகத்தை ஆந்திரத்திலேயே கொண்டார்கள். பொத்தப்பிச்சோழர்களென்றும்ரேணாண்டுச் சோழர்களென்றும் அந்நாட்டுக் குடியினர் போலவே சோழர்கள் தென் ஆந்திரப் பகுதியொன்றினை ஆளச் சென்றனர். **நன்னசோட** என்ற சோழன் **'குமார சம்பவ'** என்ற தெலுங்குக் காவியத்தை எழுதினான். சோழப் பேரரசர்களான **இராஜராஜன்**, **இராஜேந்திரன்** ஆகியோர் கீழைச் சாளுக்கியரோடு மணவுறவு கொண்டிருந்தார்கள். தெலுங்குப் பாரதம் எழுதிப் புகழ்பெற்ற **நன்னயாவின்** புரவலனை **இராஜநரேந்திரன்** சோழப் பேரரசன் **இராஜராஜனின்** மகள் வயிற்றிற் பிறந்த மகன். **இராஜராஜ நரேந்திரன்,** **இராஜேந்திர** சோழனின் மகளை மணந்தான். இவர்கட்குப் பிறந்த மகனே **குலோத்துங்கன்** எனச் சோழ சிம்மாசனம் ஏறினான். குலோத்துங்கனும் அவனுடைய மகனும் கலிங்கத்தின்மீது படையெடுத்தனர். எனவேதான் தெலுங்கு நாட்டில் நெல்லூரிலும் பிற பகுதிகளிலும் வடக்கே விஜயவாடா வரைகூடத் தமிழ்க் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

**(இ) இருவரிடையேயும் செல்வாக்கு:** பல்லவர் காலத்திலும், சோழப்பேரரசர் காலத்திலும், விஜயநகர அரசர்கள்

காலத்திலும், பிரிட்டிஷார் காலத்திலும் தமிழர்கட்கும் தெலுங்கர்கட்குமிடையே நன்கு இருந்த தொடர்பினுலே இருவரிடையேயும்—(தெலுங்கு மொழி நடுத்திராவிட மொழிகள் பிரிவினையும் தமிழ் தென் திராவிட மொழிகள் பிரிவினையும் சார்ந்தன என்ற போதும்கூட)—ஒருவர் மீது மற்ருருவரின்—செல்வாக்கு நிகழ்ந்திருக்கவேண்டும் என நாம் எதிர்பார்க்கலாம்.

(ஈ) **தமிழ்ச் செய்யுளியலும் தெலுங்கும்:** முன்னரே கூறியது போல இராஜராஜ நரேந்திரன் ஆட்சிக் காலத்திலே மகாபாரதத்தை எழுதத் துவங்கிய **நன்னய்யா** என்பாரே தெலுங்கில் முதல் இலக்கிய ஆசிரியர். இவர் வடமொழியிற் காணப்பெறும் விருத்தங்கள் எனப்பெறும் செய்யுள் வடிவினைத் தழுவினுர். ஆனுல் தமிழர்கள் வடமொழிச் செய்யுள் வடிவங்களான **தாண்டகம்** முதலானவற்றைத் தழுவி எழுதியபோது எவ்வாறு தமிழ்ப்பாடல் அமைப்பிற் கேற்பவும் சந்தத்திற்கேற்பவும் அமைத்துக்கொண்டார் களோ அதுபோலவே தமிழிற் காணப்பெறும் மோனையை யும் (இதனை வடமொழியில் **வதி** என்பர்.) எதுகையையும் (இதனை வடமொழியில் **ப்ராசா** என்பர்.) புதியனவாகத் தெலுங்கில் சேர்த்தார் இவ்வாசிரியர். தமிழ் நாட்டைச் சேர்ந்த **முகபஞ்சாதசி** போன்ற **வடமொழி** எழுத்தாளர்களும் **கூட வதி, ப்ராசா** ஆகியவற்றை அமைத்துப் பாடினுர்கள். டாக்டர்சர்மா தெலுங்கில் **அக்கலப்பாட** எனப்பெறுவது தமிழ் **அகவலே** எனச் சுட்டிக் காட்டியுள்ளார். தமிழில் நேரசையும் நிரையசையும் பலவாருக இணைந்து சீர்களாகின்றன. தெலுங்கில் காணப்பெறும் **சீசபத்யா, த்விபத்யா, உத்சாகா** போன்றவை, **ஏலா, ஜோலி, லாலி, மேல்கொதுபு, மங்கலம்** போன்ற நாட்டுப் பாடல்கள் ஆகியவை இச்சீர் அமைப் பினைப் பின்பற்றுவன என்றும் அவற்றை **அகவலின்** பல்வேறு அமைப்புக் கோலங்களே என விளக்கமுடியும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ) **நால்வகைக் கவிகள் பற்றிய மரபு:** பாட்டியல் களில் கவிகளை **ஆசுகவி, மதுரகவி, வித்தாரகவி, சித்திரகவி** என

நால்வகையாகப் பகுக்கும் தமிழ் மரபினையும் டாக்டர் சர்மா தம் கட்டுரையில் சுட்டிக் காட்டியுள்ளார். கவிதைகள் தொடர்நிலைச் செய்யுள்களாகவோ அவ்வப்போது பாடப் பெறுவனவாகவோ அமைந்துள்ளன. தொடர்நிலைச் செய் யுள்களே **வித்தாரகவி** எனப்பெறுவன. நினைத்த மாத்தி ரத்தில் விதிக்கப்பெறும் வரையறைகட்கு உட்பட்டு அவ்வப் போது பாடப்பெறுவன **ஆசுகவியாம்**. இவ்வாறன்றி ஓய்வாக கவிதையின் முடிமணியாகக் கருதத்தக்க பாக்களையும் படைக்கலாம். இவை பலவகைப்பட்ட ஒலிக்கோலங்களைக் கொண்டனவாகவும், எழுத்துக்களையும் அசைகளையும் ஓர் அழகான அமைப்பிலே கொண்டு அமைவனவாகவும் அமையும். இவை **சித்திரக்கவியாம்.** ஓசை நயமும் பண் அமைப்பும் பிற செய்யுளழகுகளும் உடையனவாய் வரு மாயின் அவை **மதுரகவி** எனப்பெறும். நம்மாழ்வாரை வழி படும் ஆழ்வார்களுள் ஒருவர் **மதுரகவி** என அழைக்கப்படு கிறாராதலின் பாட்டியல்களின் காலத்திற்கு முன்பே இக் கவிகள் பற்றிய பாகுபாட்டு மரபு இருந்தது எனக்கொள்ள லாம். டாக்டர் சர்மா அவர்கள் கூறுவதுபோல இப்பாகு பாட்டு மரபு வேறெங்கும் காணப்படாததாலும் தெலுங்கர் இப்பாகுபாடு பற்றிக் கூறுதலாலும் இதனைத் தமிழர்களிட மிருந்தே அவர்கள் பெற்றிருக்கவேண்டும்.

**(ஊ) ஆந்திராவில் தமிழ் வைணவம்**

**(1) தெலுங்கில் ஆழ்வார்கள்:** ஆழ்வார்களின் செல்வாக்கு இராமானுஜராலும் அவரைப் பின்பற்றியவர்கள் வாயிலா கவும்— குறிப்பாகப் பின்வந்த கந்தாடை, திருமலை, **நல்லன்** போன்ற ஆச்சாரியர்களாலும் கன்னட ஆந்திர நாடுகளில் பரவியது. கன்னடத்தில் உள்ள **தாசா** இலக்கியம் தமிழ்ச் செல்வாக்கினாலாயது எனக் கருதுதல் கூடும். பக்தி நெறி பரப்பிய தமிழ்ப் பெரியார்கள் பாடல்களில் இசையின் இன்றி யமையாமையையும் நாட்டுமொழிகளில் அவைப் பாடப் பெறுவதன் இன்றியமையாமையையும் வலியுறுத்தி உள் ளனர். தமிழில் இசைப்பாடல்கள், தேவாரப் பாடல்கள், பலதாளங்களில் பாடப் பெறும் திருப்புகழ், சிந்துகள், கீர்த்

தனைகள் வாயிலாக நன்கு வளர்ச்சியுற்றன. **முத்துத் தாண்டவர், மாரியப்பப் பிள்ளை, அருணசலக்கவி, இராமலிங்கர்** ஆகியோர் அத்தகு கவிஞர் பெருமக்கள். ஆந்திர நாட்டில் திருப்பதியும் பிற தலங்களும் வைணவர்களின் மத வளர்ச்சி மையங்களாகத் திகழ்ந்தன. இன்று தெலுங்கில் **தாள்ளபாக அன்னமாசார்யாவின்** கீர்த்தனைகள் பெரும்புகழ் பெற்றுள்ளன. ஆனல் தெலுங்கில் உள்ள **தியாகராஜரின்** கீர்த்தனைகளில் **புரந்தாசர்** போன்ரேரின் செல்வாக்கினைக் காணலாம். **தியாகராஜர்** தமிழ்நாட்டிலுள்ள திருவாரூரைச் சேர்ந்தவராயினும் தம் தாய்மொழியான தெலுங்கில் கீர்த் தனைகளை எழுதினர். இவரின் சீடர்களோ தமிழர்கள். இவ் வாறே சௌராஷ்டிரரும் தியாகராஜரின் இம்மரபினை இன்று வரை தொடர்ந்துள்ளனர்.

*(2)* **கிருஷ்ணதேவராயர்:** தமிழ் ஆழ்வார்களின் செல் வாக்கு தெலுங்கு இலக்கியத்தில் இருந்தமைக்குச் சான்றினை விஜயநகர அரசர்களுள் பெரும்புகழ் வாய்ந்த **கிருஷ்ண தேவராயர்** இயற்றிய **ஆமுக்த மால்யதா** என்ற நூலில் காண லாம். ஆண்டாளின் வரலாற்றைக் கூறும் நூல் இது. இந் நூலின் தலைப்பே ஆண்டாளின் இன்னொரு தமிழ்ப் பெய ராகிய ''**சூடிக் கொடுத்த நாச்சியார்**'' என்பதன் மொழி பெயர்ப்பாகும்.

(3) **பிற:** ஆழ்வார்களின் கதைகள் ஆந்திர நாட்டின் புகழொடு விளங்கின. ஆந்திரநாட்டில் பொதுமக்களுக்காகத் **தொண்டரடிப்பொடி** ஆழ்வாரின் கதை நாடகமாக ஆக்கப் பெற்றது. **பரமயோகி, விலாச, விப்ரநாராயண, சரிதா, பக்தாங்கிரி ரேணுசரித்ரம் தொண்டரடிப்பொடி** என ஏறத்தாழப் பன்னிரண்டு நாடகங்கள் அவ்வாறு கிடைக்கின்றன. கணிகையொருத்தியிடம் தொண்டர் அடியார் ஆழ்வார் காதல் கொள்வது என்ற செய்தி பொதுமக்களைக் கவரும் வகையில் நாடகமாக அமைக்கப்பட வாய்ப்பாக அமை கின்றன. அடுத்து அன்றைய ஆந்திர நாடகங்களுள் புகழ் பெற்றிருந்தது குலசேகர ஆழ்வார் பற்றியதே. **பரமயோகி**

விலாச, குலசேகர மஹிபால சரிதம் முதலியனவற்றைக் காண்க.

**(4) தமிழ்ப் பாடல்களும் ஆழ்வார்கள் பாடல்களும்:** தமிழ்ப் பாடல்களையும் தமிழ் உரைகளையும் மணிப்பிரவாள நடையில் எழுதிப் பின்னர்த் தெலுங்கு எழுத்துக்களில் அச்சிட்டவையல்லாமல் காலப் போக்கிலே அவ்வப்போது ஆழ்வாரின் பாடல்களையும் தெலுங்கில் மொழிபெயர்த்தனர்.

**(எ) தெலுங்கில் சைவம்**

**(1) கன்னடமும் தெலுங்கும்:** முற்காலக் கன்னட எழுத்தாளர்களுள் சிலர் ஆந்திர நாட்டினின்றும் வந்தவர்; சில தெலுங்கு எழுத்தாளர்களுக்குக் கன்னடமும் தெரியும். **பால்குரிகி சோமநாதர்** போன்ற சில எழுத்தாளர்கள் தங்கள் தெலுங்குப் படைப்புக்களில் தமிழ்ப் பாடல்களையும், தமிழ்ப் பாடல் வரிகளையும் எழுதி இணைத்தார்கள். **பாண்டிதராத்ய சரித** என்ற நூலையும் **வ்ரிஸதீப சதக** என்ற நூலையும் பார்க்க; இவையிரண்டும் **பால்குரிக சோமநாதர்** நூல்களே. தமிழ், கன்னட, தெலுங்குப் பண்பாடுகள் பொதுவாக ஓங்கிப் புகழ் பெற்றமையையே இது காட்டுகிறது.

**(2) அறுபத்து மூன்று அடியார்கள்: இவர்கள் எல்லோரையும் பற்றிய நூல்கள்:** அறுபத்துமூன்று நாயன்மார்கள் கதை பற்றியது **பால்குரிக சோமநாதருக்கு** நாற்பது ஆண்டுகட்கு முன் வாழ்ந்த **மல்லிகார்ஜுன பண்டித** என்பார் எழுதிய **சிவதத்வ சாரமு** என்ற நூல். **சோமநாதர், பாண்டிதராத்ய** என்னும் வீரசைவப் பிராம்மணர் ஒருவர் கதையைத் தெலுங்கில் எழுதியுள்ளார். இவருடைய **பாண்டிதராத்ய சரித்ரம்** என்ற நூலில் **மஹிமப்ரகரணம்** என்ற இயலில் **பிராதம கணங்கள், ருத்ர கணங்கள், யோகாசார்யர்கள், தர்மாசார்யர்கள்** ஆகியோர் பற்றிக் கூறும்போதே அறுபத்துமூவர் பற்றியும் குறிப்பாகத் **திருநாளைப் போவார், சம்பந்தர், சுந்தரர், திருலோசன பல்லவ,** செலதி *(சிலந்தி)* ஆகியோர் பற்றியும் குறிப்பிடுவர். **பால்குரிக சோமநாதர், பஸவபுராணம்** என்ற ஒன்றையும் எழுதியுள்ளார்.

**பீமகவி** எழுதிய பசவ புராணத்தின் மொழி பெயர்ப்பு ஒன்று தமிழில் உள்ளது. ஆனல் அது **பால் குரிக சோமநாத** ரைப் பற்றியும் குறிப்பிடுகிறது. **பிடுபர்தி சோமநாதர்** *(1500)* என்பாரின் மொழிபெயர்ப்பொன்றும் தெலுங்கில் உண்டு. **ஸ்ரீநாதர்** என்னும் புகழ்பெற்ற தெலுங்குக் கவிஞர் தம் **ஹரவிலாச** என்னும் நூலின் முதல் இருகாண்டங்களில் இவ்வடியார்களின் கதைகளைத் தருகின்றார். *1708*இல் **மஹாதேவகவி** என்பார் எழுதிய மற்றொரு **பஸவபுராணமும்** உண்டு.

*(3)* **அடியார்கள்:** **தனியாக:** **சிறுத்தொண்டர்:** அடியார்கள் சிலரின் கதைகள் பெரும்புகழ் பெற்றிருந்தமையின் அவர்களைப் பற்றித் தனி நூல்கள் எழுதப் பெற்றன. தெலுங்கு எழுத்தாளர்களிடையே **தப்ர பக்த** என்னும் **சிறுத்தொண்டர்** கதையே பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தது. **சிறியாள சரிதத்தைக் கரெக்கபடி தம்மய்யா** என்பார் *1600* இல் பாடினார். இது போன்றே **சிரியாள சரித்ரத்தை வனவில்ல கங்கதரர்** என்பாரும் **சிறுத் தொண்ட பக்த கதா** என்ற யக்ஷகானமாக—நாடகமாக **வலெ கோட்டயா** என்பாரும் எழுதினர்.

**சுந்தரர்:** முன்னரே கூறியபடி, **சுந்தரர்**, **நம்பி** என்று வழங்கப்பட்டார். **உடையவர்** என்றால் **சுவாமி** என்று பொருள். **உடைய** என்ற பெயரெச்சம் **நம்பி** என்னும் பெயர்ச் சொல்லுக்கு முன்வரின் **"இறையாகிய நம்பி"** என்ற பொருள்படும். தமிழில் சுந்தரரை **ஆளுடைய நம்பி** என்பர். உடைய நம்பி என்பது தெலுங்கில் ஒடயநம்பி என்று குறுகிய சொல் வடிவம் பெற்று வருகிறது. எல்லா அடியார்களின் கதைகள் பற்றிக் கூறும் நூல்கள் தவிர இவர்களைப் பற்றி **அப்பரவு பெரியலிங்க கவி** என்பார் எழுதிய காவியம் ஒன்றும் உண்டு. **இராஜலிங்க நிம்மநாதர்** என்பார் எழுதிய **யக்ஷகானமும்** உள்ளது.

**திருநீலகண்டர்** : மிகப் பழங்காலந்தொட்டே திருநீலகண்டர் கதையைத் தெலுங்கர் அறிந்திருந்தனர். **நன்னய்யா சோடா** என்பார் தம்முடைய **குமார சம்பவம்** என்னும்

தெலுங்கு நூலில் இவ்வடியாரை ஒரு கிழவனுக ஒப்புமை கூறுவர். கவிஞர் கருத்துப்படிச் சிவனுர் பார்வதியைத் துன்புறுத்தத் தாம் எரித்த மன்மதனே மீண்டும் உயிர்ப் பித்தார் எனவும், அது ஒரு கிழவனுக்கு விரகவேதனையைத் தரவே அவனைக் குளத்தில் அமிழ்த்திஞர் எனவும் கூறுவர் (இக் கிழவனே திருநீலகண்டராம்). பதினெட்டாம் நூற் ருண்டில் **அமரபுரபு சன்யாசி கவி** என்பார் இவ்வடியார் மேல் ஒரு காவியம் பாடிஞர்.

**கண்ணப்பர் :** கண்ணப்பர் கதையும் மிகவும் புகழ் பெற்றிருந்தது. **துர்ஜதி** எழுதிய **காளஹஸ்தி மகாத்மியம்** இவர் கதையைக் கூறும். பெரிய புராணம் கண்ணப்பர் உடுப்பூர் என்னும் ஊரினர் எனக் கூறும். இது தெலுங்கில் **உடும்மூரு** என ''உடும்பினது ஊர்'' என்ற பொருளில் வழங்கும். இதனையறியாத தெலுங்கர் பலருக்கும் **பஸவ புராணத்துள்** வரும் **உடும்மூரு கண்ணப்ப** என்ற தொடர் பெரும் புதிராகவே இருந்தது. இவ்வடியார்களின் கதைகள் தெலுங்கில் புராணங்களிற்போல இவ்வடியார்களது முற் பிறப்புகள் பற்றிய செய்திகளையும் குறிக்கின்றன. எடுத்துக் காட்டு: ''சிவன் எவ்வாறு புலால் உண்ணலாம்'' என்ற கேள்வி கேட்கப்படுகிறது. இதற்கு விடையாக, முற் பிறப்பில் சிபிச் சக்கரவர்த்தி சதையை அளித்த கதை சொல்லப்படுகிறது. சிவன் சதையளித்த சிபியை விலங்கு களாகப் பிறக்கும்படி ஆணையிட இவ்விலங்குகளையே கண்ணப்பர் கொன்று சிவனுர்க்கு ஊட்டிஞராம். கண்ணப் பரின் இக்கதையே **காஞ்சி ராஜு சுரயாவின் கண்ணப்ப சரித்ர** என்னும் நூலிற்கும் கருவாக அமைந்துள்ளது.

**பிள்ளைநாயஞர்:** திருஞானசம்பந்தரே பிள்ளையார் (இளைய அடியார்) எனப்படுகிருர். பிள்ளையார் என்பதற்கு மகன் எனப் பொருள். **பஸவபுராணம்** இவ்வடியாரைப் **பிள்ளைநாயஞர்** என்றே குறிக்கிறது. மேலும் இவரை குமார **ஸ்வாமியின்** (முருகனின்) **அம்சம்** என்றும் கூறுகிறது. இக் கதை வழக்கையே பதினைன்காம் நூற்ருண்டைச் சேர்ந்த **அருணகிரிநாதர்** பாடல்களிலும், பதிஞென்று—பன்னிரண்

டாம் நூற்றுண்டுகளில் வாழ்ந்த ஒட்டக்கூத்தர் பாடல்களிலும் காண்கிறோம். புதிய செய்தி ஒன்றையும் பஸவபுராணத்தால் அறிகிறோம். அச்செய்தி இவ்வடியார் குலோத்துங்கனையும் அவரோடு இரண்டாயிரம் புத்தமதத்தினரையும் மீண்டும் சைவத்திற்கு மாற்றினுர் என்பதே. இது கூன்பாண்டியனை மதமாற்றம் செய்ததற்கு மேலும் நிகழ்ந்த செய்தி. பண்டிதராத்ய என்னும் நூலில் கணவனுல் வெட்டப்பட்ட ஒரு பெண்ணின் கைகளை மீட்டும் வரச் செய்தார் என்று இவரைப் பற்றி மேலும் ஒரு புதிய கதையைக் காண்கிறோம். பிடுபாதி பஸவண்ணு என்பவர் இவரைப் பற்றித் தனியாக ஒரு நூல் செய்தார் என அறிகிறோம்.

நந்தனுர்: மாற்றங்கள்: சோமநாதரின் பாண்டிதராத்ய சரிதத்தில் திருநாளைப்போவார் என்னும் நந்தனுர் கதை பெண் பக்தை ஒருத்தியால் சாதிகளால் யாதொரு பயனுமில்லை என்பதை நிறுவ விளக்கப்படுகிறது. கீழ்க்காணும் நூல்கள் இவ்வடியார் பற்றியன: கடந்த நூற்றுண்டில் திரு செலகமூர்த்திலக்ஷ்மி நரசிம்ஹ என்பார் உரைநடையில் இவர் கதையை எழுதியுள்ளார். தேவகுப்த சன்யாசி ராஜா என்பார் செய்யுளில் எழுதியுள்ளார். வேதம் வேங்கடா சார்யலு என்பாரும் மற்றெருருவரும் இரண்டு செய்யுள் நாடகங்கள் எழுதியுள்ளனர். இவர் பற்றிய கன்னடக் கதை வழக்கினையும் பின் இவ்வழக்காறு கோபாலகிருஷ்ண பாரதியாரால் மேலும் விரிவு பெற்றமையும் முன்னரே குறித்துள்ளோம். இப்பின்னைய கதையையே தெலுங்கிலும் நாடகமாக ஆக்கியுள்ளனர்.

(4) மாபுராணப் போக்கு: சிறுத்தொண்டர், பால்குரிகி, சோமநாதரும், ஸ்ரீநாதரும் இவர்களைப் பின்பற்றிய பிறரும் இவ்வடியார்களின் கதைகளைப் புராணம் போலவே காணுமாறு பாடியுள்ளனர். பெரிய புராணத்திலேயே சுந்தரரின் பூர்வ இடம் கைலாசம் என்றும், இரு அழகிய பெண்கள் மீது காதல் கொண்டமையினுலேயே அவர் பூமிக்கு அனுப்பப்பட்டார் என்றும் குறிப்புக்களைப் பார்க்கிறோம். சிறுத்தொண்டர் கதையிலும் இவ்வகைப் புராணக்

கதைப் போக்கினைத் தெலுங்கு வழக்காறுகளில் காண்கிறோம். துர்வாசர் தம் மானுக்கு உணவளித்துக் கொண்டிருந்தபோது தேவலோகத்து இசைவாணனான தும்புரு இதனையறியாது விரல்களைச் சொடுக்க, அதனால் மான் உணவுண்ணாது திரும்பியதாம். துர்வாசர் தும்புருவைச் சிறுத்தொண்டன் ஆகச் சபித்தாராம். இன்னும் இது போன்ற நிகழ்ச்சிகள் நாடகப் பாங்கிலேயே அமைக்கப்பெற்றுள்ளன. இவ்வடியார் ஒரு சமயம் பெரிய கரும்புக்கட்டு ஒன்றினைச் சுமக்க நேரிட்டபோது சிவனார் உதவிக்கு வந்தாராம். அதனால் கைலாசத்தில் சிவனார்க்கு உடலெல்லாம் வியர்க்கக் கண்டாராம் பார்வதி. ஆனால் உண்மையில் அப்போது சிவனார் ஒரு நடனத்தையே பார்த்துக் கொண்டிருந்தாராம். பார்வதி சிவனாரின் கருத்தைப் பிறழ உணர்ந்தாராம். ஆனால் சிவனார் பின் உண்மைக் காரணத்தை விளக்கினாராம். சிவன் ஒரு கிழவனாகவும் பார்வதி அவரின் இளம் மனைவியாகவும் வந்தனர். சிவன் கிழவனாக வந்து சிறுத்தொண்டர் மகனிடம் பார்வதியின் தீய எண்ணத்தினைச் சொன்னாராம். இது போன்றே பார்வதியாரும் சிறுத்தொண்டர் மனைவியாரது மனத்தைக் குழப்ப விரும்பினார். ஆனால் இரண்டிடங்களிலும் அவர்கட்குத் தோல்வியே கதையில் ஓர் இறுக்கத்தினை உண்டாக்க இந்நூலில் வேறு சில நிகழ்ச்சிகளும் காணப் பெறுகின்றன.

**பிட்டவ்வா :** பஸவபுராணத்துள் சிவனார் அடியவர்களின் பெருமையை மட்டம் தட்டியதாகக்கூடச் சில கதைகள் குறிக்கப் பெறுகின்றன. சுந்தரருக்கும் மிரள்மிண்டருக்கும் இடையே ஆன பூசல்பற்றிய கதை உள்ளது. பிட்டவ்வாவுக்காக எவ்வளவு கடுமையாகத் தாம் உழைத்ததாகச் சிவனார் மிரள்மிண்டரிடம் கூறுகின்றார். திருவிளையாடற் புராணமும் பிறதமிழ் மரபுகளும் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகரைப் பாண்டிய அரசன் தண்டித்தான் எனக்கூறும். சிவனாரின் கட்டளைப்படி வையைநதி பெருக்கெடுத்தோடப் பாண்டிய அரசன் நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் அவரவர்கட்கு ஒதுக்கப்பட்ட அளவில் வெள்ளத்தைத் தடுக்க

அணை கட்ட வேண்டும் என கட்டளையிட்டான். ஒரு கிழவி, உறவினர் யாருமில்லை. பிட்டு விற்று வந்தாள். அரசரின் கட்டளைப்படி அணைக்கட்டிற்குத் தன் பங்கைச் செலுத்த முடியாது நின்ருள். இக்கிழவிக்கு உதவச் சிவபெருமானே வேலையாளாக—பிட்டுக்கு வேலை செய்ய—வந்தார். வேலைக் குக் கூலியாகப் பெற்ற பிட்டும் பிட்டுத் தூளானது. வேலை களைப்பினுலே உறங்கிப் போனுர் பெருமான். இது கண்ட அரசன் கடமையைச் செய்யாது போனமைக்காகப் பிரம்படி அளித்தான். அடித்த அடி சிவன்மீது மட்டுமின்றி எல்லோர் மேலும்—பாண்டியன் மீதும் கூட விழுந்தது. இச்சமயத்தே வேலையாளாக வந்த பெருமான் மறைந்தார். உடனே அவ் வேலையாள் வேறுயாருமில்லை சிவபெருமானே என யாவரும் உணர்ந்தனர். பஸவபுராணத்தில் மாணிக்கவாசகர் கதை சொக்க நாயனுர் கதை எனக் கூறப்பட்டுள்ளது. அணைக் கட்டுப் பற்றிய செய்தி வரும்போதெல்லாம் தெலுங்கர் கட்குக் கரிகாலன் கட்டிய காவிரி அணையே நினைவிற்கு வருகின்றது. காவிரி அணைகட்ட கரிகாலன் ''முக்கண்ணுடைய பல்லவன்'' என்ற பொருளில் **திரிலோசன பல்லவ** அல்லது **முக்கண்டி காடுவெட்டி** என்னும் அரசனை துணைபுரியுமாறு வேண்டினுன் என்னும் கதை ஆந்திரநாட்டில் வழங்குகிறது. இக்கதை பல்லவன் கரிகாலன் வேண்டுகோளைச் செவி மடுக்காது போயினுன் எனவும் உடனே கரிகாலன் பல்லவன் போலப் படம் ஒன்று வரைந்து அப்படத்தில் பல்லவனின் மூன்றுவது கண்ணை நீக்கினுன் எனவும் இதனுல் உண்மையிலேயே பல்லவன் தன் மூன்றுவது கண்ணையும் இழந்தான் எனவும் வளர்கிறது. ஆந்திரநாட்டில் காவிரி அணை கட்டப்பட்ட இச்செய்தியோடு பிட்டவ்வா கதையும் விளக்கப்படுகிறது. ஆனுல் பிட்டவ்வா பற்றிய இக்கதையோ கரிகாலன் பற்றிய கதையோ, திரிலோசன பல்லவன் பற்றிய கதையோ தமிழ்நாட்டில் வழக்கில் இல்லை.

**(5) பிறமாற்றங்கள்:** மேலும் சோழன் கோச்செங் கணுன் கதைக்குப் பதிலாகக் கரிகாலனின் கதையே இங்குத் தரப்பெற்றுள்ளது. இச்சோழன் **அநபாயன்** என வழங்குவர்

சேக்கிழாரின் புரவலனுயிருந்த சோழனின் பெயர் இது. தெலுங்கில் கனம்புல்லே என்ற பெயர் நீபாத கல் எனவும், இயற்பகை, எல்பகி எனவும், கலிக்காமர், கலியம்பி எனவும் இடங்கழி, இடிகுடி எனவும் காணப்படுகின்றன. கன்னடத்தில் காணப்படும் பெயர்த் திரிபுகளுக்கு என்ன கருத்தைச் சொன்னேமோ அதே கருத்தினை இத் திரிபுகளும் மேலும் வலியுறுத்தி நிற்கின்றன. சுந்தரர் காலத்தே ஆட்சியிலிருந்த அரசனின் பெயராகக் கரிகால என்ற பெயர் தரப்பட்டுள்ளது. சிவபெருமான் சுந்தரரைத் தம் மகன் என உரிமை கொண்டாடியதாகவும் இவ்வழக்கு கரிகாலன் முன் கொண்டுவரப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. சுந்தரர் தம் மனைவியாரான பரவைநாச்சியாரின் திருமுலைகளில் சிவலிங்கத்தையே உணர்ந்தார் என்றும் கூறப்பட்டுள்ளது. தெலுங்குக் கவிஞரொருவர் கூற்றுப்படி இச்செயல் நிகழ்ந்த இடம் அச்சந்தவாம். கரிகாலனின் சோழராணி இறந்த பிறகு சோழகுல குருவானவர் சுமத்தினை கயாவிற்குக் கொண்டு செல்லாது பரவைநாச்சியார் வீட்டிற்கே கொண்டு செல்ல வேண்டுமென அறிவுரை கூறினுராம். அவ்வாறே அதனைக் கொண்டு செல்லவும் பித்துருக்கள் வந்து படையலைப் பெற்றுக் கொண்டனராம். இவ்வாருகச் சுந்தரர் பரவை நாச்சியாரிடம் கொண்டிருந்த காதலைப் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

**அலுவலர்களாக அடியார்கள்:** பிற்காலத்தே வைணவ ஆழ்வார்களை ஆண்டவனின் படைக்கலம், அணி முதலானவற்றின் அவதாரங்களே என விளக்கக் காண்கிறோம். இம்முறையில் வேதாந்த தேசிகனை வைகுந்தத்துத் திருமணியின் அவதாரம் என்பர். இப்புராணங்களைப் போன்றதொரு விளக்கத்தை அறுபத்துமூன்று நாயன்மார்களின் கதையை உருவாக்கிய மக்களும் தருகின்ற ஒரு போக்கினையும் காண்கிறோம். பால்குரிகி சோமநாதர் சிவபெருமானை அரசனுகவும் அடியார்களைச் சிவபெருமானது ஆணைக்குட்பட்ட முதலமைச்சர், படைத்தலைவர், கவிஞர், மருத்துவர் போன்ற பல்வேறு அதிகாரிகளாகவும் விளக்கிக் கூறுகிருர்.

**(6) வீரசைவத்தால் மாற்றங்கள்:** கவிஞர்கள் வீர சைவத்தில் கொண்டிருந்த பற்றின் காரணமாகச் செய்யப் பட்டவை எனக் கருதத்தக்க வேறு பல மாற்றங்களும் உள்ளன. **யக்ஞம்** அல்லது வேள்வியில் வீரசைவர்கட்கு நம்பிக்கை இல்லை. எனவே **பால்குரிகி சோமநாதர்** எழுதிய திருநாளைப் போவார் கதையில் வேள்வித் தீயில் நந்தனார் புகுந்து தூயராய் எழுந்த காட்சி இல்லை. இது போன்றே **ருத்ரபசுபதி** பற்றிய கதையில் வேதம் ஓதுகின்ற காட்சி நீக்கப்பட்டுள்ளது. ஏனெனில் வீரசைவர்கட்கு வேதம் ஓதுதலில் நம்பிக்கையில்லை. மேலும் இக்கதையில் குலசேகர ஆழ்வார் செய்தது போன்ற ஒரு நிகழ்ச்சியும் புதிதாக விளக்கப்பட்டுள்ளது. இஃது இக்கதையில் காணப்படும் ஒரு புதிய வளர்ச்சியாகும். இவ்வடியார் பாற்கடலைக் கடையும் கதையைக் கேட்டுக் கொண்டிருந்த போது சிவபெருமான் அப்போது தோன்றிய விடத்தினை விழுங்கினார் என்றதைக் கேள்வியுற்றதுமே உடனே ஒரு குளத்தில் குதித்து விட்டார் என்றும் இதனால் சிவபெருமானே நேரில் தோன்றித் தன் வாயைத் திறந்து விடம் தொண்டைக்குக் கீழே இறங்க வில்லை என்று காட்டினார் என்றும் கூறப்படுகிறது.

**(7) குசராத்திலிருந்து:** இயற்பகை நாயனார் புராணத் தில் நாயனார் தம் புத்திளம் மனைவியையே 'ஜங்கமன்' ஒருவ னுக்குக் கொடுத்து விடுகின்றார். இதனைத் தடுக்க வந்த உறவினரையும் வாள்முனையில் தடுத்து நிறுத்திவிடுகின்றார். இக்கதை கூறவந்த சில கன்னட ஆசிரியர்கள் இந்நாயனாரது பெயரைச் **சிந்து பல்லாள** எனக் குறிப்பிட்டுள்ளனர். **பண்டிதராத்ய சரித்திரமு** என்ற நூல் இந்நாயனார் கதையைக் கூறுகிறது. தெலுங்கு மொழியிலும் **பத்ய** காவியமாக, **த்வீபதமாக, யக்ஷகானமாகத்** தண்டகமாக இக்கதை கூறப்பட் டுள்ளதிலிருந்து இக்கதை மக்களிடையே பெருவழக்கா யிருந்தமை புலப்படும். **பல்லண்ணர்** குசராத்திலுள்ள **சிந்து கடக** என்னும் பகுதியின் அரசராவர். இக்கதையில் சிவபெருமான் ஜங்கமனுக்குரிய அடையாளச் சின்னங் களோடு ஒரு விடனாக வந்ததாகக் கூறப்படுகிறார். வந்த

விடன் அரசனிடம் சென்று தான் விரும்பியதைப் பெற வாக்குறுதி பெற்றதாவும், பெற்ற பின் அரசனது மனைவியையே தனக்கு வேண்டும்படிக் கேட்டதாகவும் அரசன் **பல்லண்ணனும்** அவ்வாறே தன் மனைவியை ஜங்கமனுடன் செல்லுமாறு ஆணையிட்டான் எனவும் உடனே விடனாக வந்த சிவபெருமான் குழந்தையாக மாறினார் எனவும் கூறப்பட்டுள்ளது. இக்கதையின் முற்பகுதி இயற்பகை நாயனார் கதை போன்றே இருத்தலின் இயற்பகையைச் **சிந்துபல்லாள** எனக் குறித்தனர் போலும்.

**தமிழில்** திருவண்ணாமலைக் கோவில் பற்றிக் கூறும் போது அருணாசல புராணம் இக்கதையை **வல்லாளர் கதை** எனக் கூறும். ஹொய்சளர் திருவண்ணாமலைப் பகுதியைச் சிறிது காலம் ஆண்டனர். திருவண்ணாமலைக் கோவிலில் மிக்க ஈடுபாடு கொண்டோர் வல்லாளர் எனப்பெறும் ஹொய்சள மன்னர்கள். **பல்லண்ணர்** என்ற பெயரையும் **வல்லாளர்** என்ற பெயரையும் ஒன்றெனமயங்கினர் போலும். வல்லாளர்களுள் ஒருவனை மூன்றும் வல்லாளன் தாய்வழித் தாய முறையைப் பின்பற்றும் அலூபர்களைச் சேர்ந்த **சிக்காயி** என்பாளை மணந்தான். இதனையும் மனத்தில் வைத்து இந்த மயக்கம் வளர்ந்ததுபோலும். திருவண்ணாமலைக் கோவிலில் மிக்க ஈடுபாடு கொண்டு அழகுபடுத்தி மகிழ்ந்த இந்த ஹொய்சளர் பின்னர் மறைந்தபோது நன்றியுணர்ச்சி மிக்க மக்கள் ஹொய்சளரைப் பற்றி ஒரு கதை வழங்கத் தலைப்பட்டனர். ஹொய்சளர் சிரார்த்தம் முதலியன செய்ய வாரிசுகள் இன்றி மறைந்தனரென்று தவறாகக் கருதி ஆண்டு விழா ஒன்று நடத்த அவ்விழாவில் **பல்லண்ணர்** முன் குழந்தையாக வந்த அந்த ஆண்டவனே சிரார்த்தம் முதலாயின செய்தான் என்றும் வழங்கத் தலைப்பட்டனர். நல்ல அல்லது தவறான நோக்கத்தின் தூண்டுதலினால் எவ்வாறு கதைகள் ஒன்றோடொன்று மயங்கி, மாற்றி வழங்கப்படுகின்றன என்பதற்கு இக்கதையே நல்ல சான்றாகும்.

(8) **பிற மரபுகள்:** தமிழ், வடமொழி மரபுகளைப்

பின்பற்றித் தெலுங்கர்களும் அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றி நூல்கள் எழுதியுள்ளனர். கந்தபுராணத்தைத் தழுவி **அட்டலூரி பாப்பகவி** *(1750)*என்பார் **ஹரபக்தவிலாசமு** என்ற நூலை எழுதியுள்ளார். நஞ்சராஜா *(1800)* என்பார் எழுதிய **சிவபக்த விலாசமு** என்ற நூல் **அகஸ்திய சம்ஹித** என்ற நூலின் மொழி பெயர்ப்பாகும். **ஜே. ஓ. வி.** தொர **சாமையா** என்பார் தமிழ்ப் பெரிய புராணத்தைப் **பக்த லீலாம்ருதம்** என்ற பெயரில் தெலுங்கில் உரைநடையாக *(1900)* மொழி பெயர்த்துள்ளார்.

(9) **மக்கள் தெலுங்கு: பால்குரிகி சோமநாதர்** போன்ற வீர சைவத்தைப் பின்பற்றிய தெலுங்குக் கவிஞர்கள் பயன்படுத்தும் ஜன தெலுகு பற்றிக் குறிப்பிடவேண்டும். ஜன தெலுகு என்பது வடமொழிச் செல்வாக்கு மிகுந்த இலக்கியத் தெலுங்கு அன்று. பாமரர் பேசும் தெலுங்காகும். தமிழிலும் இத்தகையதொரு வடமொழிச் செல்வாக்கு மிகுந்த கலப்பு நடை உருவானது. ஆனால் இவ்வகைத் தமிழ் வெறுக்கப்பட்டது என்றும் சிறந்தோங்கி வந்த தமிழின் தூய தன்மைக்கு இழுக்கென வந்தது இந்நடை. திருஞான சம்பந்தர் காலத்தே இவ்வழக்கு இருந்தது. சைனர் பின்பற்றிய இக்கலப்பு மொழியைத் திருஞான சம்பந்தர் வெறுத்தார். இது நல்ல தமிழுமன்று, நல்ல வடமொழியுமன்று என்று ஒதுக்கினர். **சங்கடம் பங்கம்** என்று வடமொழிச் சொற்களைக் கலந்து எழுதியதைக் கண்டனம் செய்தார். ஒட்டக்கூத்தர் காலத்தே வடசொற்களை மிகுதியாகக் கலந்த, ஒவ்வாத ஆரவார நடை ஒன்று வழக்கிலிருந்தது. இத்தீங்கிலிருந்து பொதுமக்களும் உணர்ந்து போற்றும் வகையிலும் வாழும் இலக்கியங்கள் வளரும் வகையிலும் தமிழைக் காத்த பெருமை பெரிய புராணம் பாடிய சேக்கிழார் பெருமானையே சாரும்.

### (ஏ) அறுபத்து மூவரல்லாத பிற அடியார்கள்

**(1) நக்கீரர்:** சங்கப்புலவராம் நக்கீரர் பற்றிய கதையை ஆந்திரர் நன்கு அறிந்திருந்தனர். தெலுங்கு மரபில்

நக்கீரர் முதன் முதலில் தெலுங்கையும் வடமொழியையுமே கற்ருர் என்றும் பின்னரே அகத்தியரிடமிருந்து தமிழ்கற்ருர் என்றும் கூறுவது வியப்பாகவுள்ளது. இக்கதை தூர்ஜதி என்பார் எழுதிய காளஹஸ்தி மஹாத்மியம் என்னும் நூலில் உள்ளது.

## (ஐ) தெலுங்கு நூல்களில் தமிழ்

வைணவரின் தொண்டினுலே தமிழ்ச் சொற்கள் தெலுங்கு இலக்கியங்களிலும் தெலுங்கர் இல்லங்களிலும் புகலாயின. குறிப்பாகத் தெற்கில் வழங்கும் தெலுங்கு யக்ஷகானங்களில் தமிழ் உரையாடல்கள் இணைக்கப்பெற்றன.

## (ஒ) தமிழ்நாட்டில் தெலுங்கு இலக்கியம்

ஆந்திரச் சிற்றரசர் பலர் தென்னுடு போந்து ஆண்டமையினுலே தமிழ்நாட்டிலும் பல தெலுங்கு நூல்கள் இயற்றப் படலாயின. கி. பி. 1600-க்கு முன் அச்சுதத் தேவராயர் காலத்தே பத்ரகவி என்பார் தேவாங்கபுரத்தில் படைவீடு என்னும் பகுதியின் அரசனுக்குத் தம் நூலைக் காணிக்கையாக்கியுள்ளார். சிவபெருமான் மதுரையில் நிகழ்த்திய திருவிளையாடல்களை விளக்கும் ஹாலாஸ்ய மகாத்மியம் என்னும் நூல் தெலுங்கில் எழுதப்பெற்றது. பச்சக் கருப்ப திருவெங்கலக்கவி (இது தமிழ்ப் பெயர் என்பதை நோக்குக) என்பார் பிரௌடதேவராஜர் காலத்தே சொக்க நாத சரித்ர என்ற நூலை எழுதி அதனை இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூர்ப் பெத்த ராமண்ணு என்பார்க்குக் காணிக்கையாக்கியுள்ளார். கூந்துர்த்தி வெங் கடாசல கவி என்பார் மதுரை விசயரங்க சொக்கநாத நாயக்கன் ஆட்சிக் காலத்திலே கந்த பூராணத்தைத் தழுவிக் கார்த்திகா மகாத்மியம் என்ற நூலை எழுதி அதனைத் துறையூரைச் சேர்ந்த வெங்கடாசல ரெட்டி (1706-1732) என்பார்க்குக் காணிக்கையாக்கியுள்ளார். திருமலகவி என்பார் சிதம்பரக் கதையைச் சித்ரகூட மகாத்மியம் என்ற பெயரில் எழுதி யுள்ளார். புதுக்கோட்டையை ஆண்ட இரகுநாதத்

தொண்டைமான் (*1769–1789*) பார்வதி பரிணயமு என்ற தெலுங்கு நூலின் ஆசிரியர். இத் தொண்டைமானின் அரசவைக் கவிஞராகிய, வெங்கண்ணு, பார்வதி பரிணயமு என்ற பெயரில் இன்னொரு நூல் எழுதி அதனை மதுரை மீனுட்சி சுந்தரேச்வரருக்குப் படையலாக்கியுள்ளார்.

ஹாலாஸ்ய மகாத்மியம்: சிவசமுத்திரத்தைச் சேர்ந்த சத்குரி தம்ம பூபா (*1513–1569*) என்பார் தெலுங்கில் இராஜேந்திர சோழ சரித்ர என்ற நூலை எழுதியுள்ளார். இவ்வாறுகத் தமிழ்க் கதைகள் தெலுங்கு இலக்கியத்துள் புகுந்துள்ளன. மேலும் தமிழ் மக்கள் எவ்வாறு தெலுக்கு இலக்கியங்களையும் போற்றினுர்கள் என்பதனையும் இது காட்டுகிறது. ஹாலாஸ்ய மகாத்மியம் உரைநடையில் ஆனது. இதனை மல்லன்பள்ளிபுச்சிகவி என்பார் செய்யுளில் எழுதினுர். மற்றுமொரு ஹாலாஸ்ய மகாத்மியம் என்னும் நூல் திருமல செட்டி ஜகன்னுத கவி என்பாரால் எழுதப்பட்டுள்ளது. கரிகபட் தம்மய்யகவி என்பார் தம்முடைய ஸ்ரீவாள சரித்ர என்ற நூலைக் காஞ்சீபுரத்தைச் சேர்ந்த தம் புரவலருக்குக் காணிக்கையாக்கியுள்ளார். அமலாபுரம் சன்னியாசிகவி (*1800-1860*) என்பார் எழுதிய கும்மரி குண்டய்யா என்ற திருநீலகண்ட நாயனுர் பற்றிய நூல் தென்னுட்டில் உருவானதே. தொண்டரடிப் பொடியாழ்வார் பற்றிய பல யக்ஷகானங்கள் தஞ்சை அரண்மனையில் ஆக்கப்பெற்றவை. தற்போது திருக்குறளையும் கம்பராமாயணத்தையும் தெலுங்கில் மொழி பெயர்த்துள்ளார்கள்.

### (ஓ) தமிழில் சதக இலக்கியங்கள்

தெலுங்குச் சதகங்களின் செல்வாக்கு தமிழிலும் பரவிக் கோயில்களின் பெயரால் அறக்கருத்துக்களைக் கூறும் பல சதக நூல்கள் தமிழில் வெளிவரலாயின. எடுத்துக்காட்டாக அறப்பளீசுர சதகம், தண்டலையார் சதகம், அருணுசல சதகம் ஆகியனவற்றைக் கூறலாம். சுமதி சதகம் என்னும் தெலுங்கு நூலையே தமிழில் மொழி பெயர்த்துள்ளார்கள்.

## (ஔ) மொழி பெயர்ப்புகள்

வேறு பல முக்கியமான தெலுங்கு நூல்களும் தமிழில் மொழி பெயர்க்கப்பெற்றுள்ளன. ராமானுஜ புஸ நாடு என்பார் எழுதிய வஸு சரிதம் என்ற நூல் அம்பலத்தாடும் ஐயன் என்பாரால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சென்னை அரசினர் கையெழுத்து, நூல் காப்பு நூலகத்தில் உள்ள இந்நூல் இன்னும் அச்சிடப்படவில்லை. வேமன்னாவின பாடல்கள் பலமுறை மொழி பெயர்க்கப்பெற்றுள்ளன. இன்று தெலுங்குக் கதைகள், நாவல்கள், நாடகங்கள் ஆகியன தமிழில் மொழி பெயர்க்கப்படுகின்றன.

## (ஃ) மராத்தியர்

முடிவில் தமிழ், கன்னட, ஆந்திரச் செல்வாக்கு மராத்திய நாட்டிலும் சென்று பரவியமையைக் குறிப்பிடவேண்டும். முன்னமேயே தமிழ்ப் பக்தி நெறி இந்நாட்டில் சென்று அங்கிருந்த பக்திநெறியில் மாற்றங்களை விளைவித்தது எனக் கண்டோம். பால்குரிகி சோமநாதர் அவர் காலத்திய மராத்திய மொழி நடையை ஒட்டி ஓர் ஆரியகவிதை எழுதியுள்ளார். புனவைச் சேர்ந்த பீஷ்வாக்கள் சிறுத்தொண்ட நாயனாரைச் சிறுவாக மகாராஜா என அழைத்தனர். இவ்வடியார் நினைவாக ஆண்டுவிழா—அன்னதான நிகழ்ச்சிகளும் நிகழ்ந்தன. பல்லவர்கள் வாதாபியோடு கொண்டிருந்த தொடர்பினாலே இவை ஏற்பட்டிருக்க வேண்டும். மராத்தியர் பின்னே தஞ்சையை ஆண்டபோது தமிழ்ச் செல்வாக்கு மேலும் மேலும் பரவத் துவங்கியது. மன்னர் ஷாஜியின் (1684—1717) காலத்தில் வள்ளி கல்யாணமு என்னும் யக்ஷகானம் தெலுங்கில் எழுதப்பெற்றது.

**முடிவு:** இதுகாறும் இந்தியாவிற்குள் பல பகுதிகளில் தமிழ் இலக்கியச் செல்வாக்கினைக் குறித்துக் கண்டோம். தமிழ்க் கதைகள் சென்று வழங்கத் தலைப்பட்ட இடங்களி லெல்லாம் புதிய மாற்றங்கள் நிகழ்ந்ததனைக் கண்டோம். மேலும் இதுபோன்றே தமிழில் பிறமொழிகளின் செல்வாக்கையும் கண்டோம்.

# தமிழ்ச் செல்வாக்கு

## 2. இந்தியாவுக்கு வெளியே

## 2. 1. இலங்கையிலும் தொலைகிழக்கு நாடுகளிலும்

### (i) இலங்கை

**இ**னி இந்தியாவுக்குப் புறத்தே அமைந்த நாடுகளைப் பற்றிக் காணலாம். இலங்கையில் தொன்மைக் காலத்திலிருந்தே தமிழ், சிறுபான்மையான செல்வாக்கு மிகுந்த கூட்டத்தினரின் தாய்மொழியாக இருந்து வந்துள்ளது. அங்கே தமிழர்களும் சிங்களவர்களும் 2000 ஆண்டுகளுக்கு மேலாக இணைந்து வாழ்ந்து வந்துள்ளனர். இவ்விரு கூட்டத்தினரின் உறவை அரசியல் முறித்தது என்றாலும் இவர்களுக்கிடையேயான பண்பாட்டுத் தொடர்பு அதைவிட அடிப்படையானது. தென்னிந்தியாவில் வாழ்ந்த பௌத்தர்கள் இலங்கையில் வாழ்ந்த பௌத்தர்களோடு எப்பொழுதும் தொடர்பு கொண்டு வாழ்ந்திருக்கிறார்கள். ஈழத்துப் பூதனார் என்னும் பெயர் கொண்ட ஈழத்துத் தமிழ்ப்புலவர் தமிழ்ச் சங்கத்துள் ஒருவர். இடைக்காலத்தில் இலங்கைத் தமிழர்கள் இரகுவம்சம், தட்சிண கைலாச புராணம் முதலியவற்றைப் படைத்தனர். இக்காலத்தில் தமிழ் உரை நடை, தமிழ்க்கல்வி இரண்டிலும் ஆறுமுக நாவலர், விபுலாநந்தர் முதலானோர் ஆற்றிய திறமைமிக்க தொண்டு நன்றியுடன் ஏற்றுப்போற்ற வேண்டிய ஒன்று. பல தமிழ்ச்சொற்கள் சிங்கள மொழியில் புகுந்து அதன் ஒரு பகுதியாகவே மாறியுள்ளன. கண்ணகியின்

கதை சிங்களவர்களின் பத்னி தெய்யோவின் கதையாக மாறி யிருக்கிறது. இந்த தெய்யோவைப் பற்றிய சிங்கள, தமிழ் நாட்டுப் பாடல் வகைகள் இலங்கையில் உள்ளன. சிங்கள மொழியில் உள்ள செய்யுள் அடிமுறைகள் தமிழ்ச்செய்யுளில் உள்ள அளவைகளை நினைவூட்டுகின்றன. இச்செய்திகளை அறிந்த நிலையில் பின்னும் தொலைகிழக்குப் பகுதியிலான நாடுகளை இனி நோக்கலாம்.

## (ii) தொலைகிழக்கு நாடுகள்

1. **ஆட்சியாளர்கள்:** இக்கருத்தைக்கொண்டு நோக்குங் கால் தொலைகிழக்கு நாடுகளோடு கொண்ட தொடர்பு மிகச்சுவை வாய்ந்ததாக உள்ளது. யல்நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டைப் பரப்பிய கருவி கலமாக (கப்பலாக) இருக்கக் காண்கிறோம். தொலைகிழக்குத் தீவுகளில் வாழ்ந்த மக்க ளோடு தமிழர்கள் வாணிகம் நடத்தி வந்தனர். இங்கிருந்து இலங்கை தொலைவிலுள்ள சம்பா (Champa) முதலிய இடங் களுக்கு ஆட்சியை நிலைநிறுத்துவதற்காக மக்கள் சென்றிருக் கிறார்கள். ஆனால் முன்னரே கூறியபடி இவை அத்துணைச் சிறப்பு வாய்ந்தன அல்ல.

2. **கடாரம்:** சங்க இலக்கியம், இலங்கையிலிருந்தும் மலேசியாவிலுள்ள காழகத்திலிருந்தும் (the Keda) பல பொருட்களை இறக்குமதி செய்த செய்தியைப் பற்றிக் கூறுகிறது. காழகம் கடாரம் என்ற பெயரோடு காணப் படுகிறது. இது டாக்டர் தனிநாயகம் கருதுவதுபோல இருப்பு பாண்டங்கள் முதலியவற்றோடு தொடர்பு கொண்டதாக இருக்கலாம். **கடாரம் கண்டான்** என்பது கடா வரைத் தனது கடற்படையைச் செலுத்திய **இராஜேந்திரனின்** சிறப்புப் பெயராகும். மேலும் பாண்டிய நாட்டிலுள்ள ஓர் ஊரின் பெயருக்குரியவனாகிய **சுந்தரபாண்டியனின்** சிறப்புப் பெயருமாகும். அடியார்க்கு நல்லார் போன்ற நமது பழைய உரையாசிரியர்கள் விளக்கந் தருவதுபோலக் கடற்படைச் செலவின் வழியில் குறிப்பிடப்பெறும் இடங்களின் பெயர்கள் தமிழ் நாட்டிலுள்ள பல ஊர்களின் பெயர்களை ஒத்துக்

காணப்படுகின்றன. நமது இப்போதைய ஆய்விற்கு இது சற்று இன்றியமையாதது.

3. **தமிழ் அரசர்களும் தொலை கிழக்குநாடுகளும்:** சுந்தர மூர்த்தி நாயனர் தமிழ் நாட்டு அடியவர்களைக் காட்டும் பட்டியலில் கடலால் சூழப்பெற்ற நாடுகளைக் காத்துக் கொண்டிருந்த (ஆட்சி செய்துகொண்டிருந்த) **சிங்கன்** என்ற ஒருவனை நிகழ்காலத்தில் குறிப்பிடுகிருர். பல்லவர்களிடையே **சிங்கன்** என்ற பெயரமைந்தவர் இருவர் இருந்தனர். ஒருவன் நரசிம்மன் (மாமல்லன்); மற்ருெருவன் இராஜசிம்மன். கீழைக் கடலில் உள்ள தீவுகளில் ஓரளவு உரிமை பூண்டிருந்தவன் என்று நாம் அறிகிருேம். தமிழ் மன்னர் களின் பெயர்களை சிலர் பெற்றிருந்தனர் என்ற செய்தி (நரசிம்மனுக்கு முன்பு வாழ்ந்த மகேந்திரன், பின்னர் வந்த சுந்தரன்) பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி குறிப்பிட்டது போல ஓரளவிற்குத் தமிழ் மன்னர்களின் வலிமையை நம்பி யிருந்த தன்மையைக் காட்டுகிறது. பர்மாவில் தமிழ்க் கல்வெட்டுக்களைக் காண்கிருேம். மேலும் தொலைவிலுள்ள பகுதிகளோடு வாணிகம் நடத்திய வணிகச் சங்கங்கள் பல அன்புக் கொடைகளை வழங்கிய செய்தியினையும் நாம் அறிகிருேம். காட்டாக, அரசன் மூன்ரும் நந்திவர்மனின் சிறப்புப் பெயரான **அவனி நாராயணன்** என்ற பெயரில் அவர்கள் வழங்கியுள்ளதைக் கூறலாம்.

4. **மணிமேகலை:** பௌத்த மரபினருக்கு **மணிமேகலை** கிழக்குக் கடற் பகுதிகளில் வாழ்ந்த மக்களின் காவல் தெய்வம். எனவே கிழக்குக் கடற்பகுதிகளில் வாணிகம் செய்து வந்த வணிகர்கள்—சிலப்பதிகாரக் கதைத் தலைவனை கோவலனின் முன்ேனேர் போன்றவர்களின்—குலதெய்வமாக மாறியது. கோவலன் தன் மகளுக்கு **மணிமேகலை** எனப் பெயரிட்டான் என அறிகிருேம்.இவளைப் பற்றிய கதையைக் கூறுகின்ற புகழ்பெற்ற தமிழ்ப் பௌத்த காப்பியத்தின் பெயரும் இதுவே.

5. **கருப்பு:** டாக்டர் பர்ரோ அவர்கள் அசோக்னின், ஆணைக் கல்வெட்டுக்களில் தமிழ்நாட்டின் சோழ, பாண்டிய

கேரள புத்திரர்களோடு குறிக்கப்பெறுகின்ற **சத்திய புத்திரர்** என்ற பெயர் **அதிகமானையே** குறிக்கும் என்று குறிப்பிடுகின்றார். புறநானூற்றின் உரையாசிரியர் இவ்வதிகமானின் முன்னோர் கீழைக் கடற் பகுதியிலிருந்து தமிழகத்துக்குக் கரும்பினைக் கொண்டு வந்த புகழ்ச் செய்தியைப் பற்றிக் கூறும் மரபொன்றினைப் பற்றிப் பேசுகிறார். இவ்வாறாகப் பொருளாதாரப் பண்பாட்டுப் பிணைப்புப் பற்றிய செய்திகளை நாம் அறிகிறோம்.

**6. மதமாற்றம்:** மணிமேகலைக் காப்பியத்தில் கலமுடைந்து வருந்திய வணிகன் சாதுவன் நாகர்களின் காட்டுமிராண்டித் தலைவன் முன்னிலையில் கொண்டு வரப்பெற்றுப் பின்னர் அத்தலைவனையும் அவனது இனத்தாரையும் பௌத்த மதத்திற்கு மாற்றினான் என்ற சுவையான கதையைக் காண்கிறோம்.

**7. தத்துவத்தின் செல்வாக்கு:** இத்தகைய தத்துவ மதச் செல்வாக்கு நிரம்பிய செய்திகள் இன்னும் பல இருக்கலாம் என இது நம்மை எண்ண வைக்கின்றது. இந்துமதமும், பௌத்த மதமும் கீழைக் கடலின்கண் அமைந்த நாடுகளில் பரவியிருந்திருக்கின்றன. இது வங்காளம், ஆந்திரம், கலிங்கம், தமிழ்நாடு ஆகிய இடங்களினின்று சென்ற இந்தியர்களாலேயேயாகும். கலை நுணுக்கம் அமைந்த எஞ்சிய பகுதிகள் இப்பொழுதும்கூட **மகாபலிபுரத்தை** நினைவூட்டுகின்றன. அங்குள்ள கல்வெட்டுக்கள் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த சங்கராச்சாரியாரைப் பற்றிக் கூறுகின்றன. இவ்வாறு அந்நாடுகள் தமிழகத்தோடு சமய, தத்துவத் துறைகளில் கொண்ட தொடர்பு தெளிவாகின்றது.

**8. பாண்டரங்கமும் டாக்டர் ஃபிலியோசாவும்:** டாக்டர் **ஃபிலியோசா** தென்கிழக்குப் பகுதி நாடுகளில் தமிழின் செல்வாக்குப் பற்றிய இன்னொரு செய்தியைக் கவனத்திற்குக் கொணர்ந்துள்ளார். சங்கத் தொகை நூற்களுள் ஒன்றான கலித்தொகை சிவனது பாண்டரங்கக் கூத்தைப் பற்றிக் கூறுகிறது. இது பகைவரின் கோட்டைகளை எடுத்துச் சாம்பலாக்கிய பின்னர்ப் போர்க்களத்தில் ஆடிய வெற்றிக்

கூத்தாகும். தமது துணைவியாம் இறைவியின் பாணிக்கேற்பவே சிவபெருமான் கூத்தாடினர் எனினும், தம்மேனி முழுவதும் சாம்பல் மூடும் வண்ணம் அக்கூத்து வெறியுடன் கூடிய வலிய ஆனந்தக் கூத்தாக இருந்தது. அதனாலேயே அது **வெள்ளைக்கூத்து** என்ற பெயரும் பெற்றது. எனவே தொலைகிழக்கு நாடுகளில் பரவியுள்ள **பாண்டரங்கன்** என்ற பெயர் சிவனது பெயர்களுள் ஒன்றாக அறியப்படலாயிற்று. அங்குச் சிவனைப் போன்று உடலின் மேற்பகுதியமைந்த **விஷ்ணு, பாண்டுரங்கன்** என்று அழைக்கப்படலானார். மராத்திய நாட்டில் **விஷ்ணு** அல்லது **விட்டல், பாண்டுரங்க விட்டல்** என்றபெயரோடு திகழ்கிறார். இப்பெயர் தொலை கிழக்குந டுகளில் அடைந்துள்ள மாற்றங்களைத் துணையாகக் கொண்டு பார்க்கவேண்டிய நிலையிலும் அடிப்படையில் தமிழகத்தைச் சேர்ந்ததே (அல்லது தமிழகத்திலிருந்து சென்றபெயரே இது) என்று முடிவு கூறலாம். தமிழகத்திற்கும் மேற்கு கிழக்குப் பகுதிகளுக்கும் ஏற்பட்ட தொடர்பின்ஒவ்வொரு படியையும் வலியுறுத்தி நிறுவும்வகையில் இம்முழுக் கதையும் எதிர்கால ஆராய்ச்சியாளர்களால் விரித்துக் கூறப்படும்போது அது உண்மையாகவே தமிழ்ப் பண்பாட்டின் வரலாற்றில் ஒரு பரபரப்புமிக்க கதையாகவே விளங்கும்.

9. **விசேடங்களும் தேசிய விழாக்களும்:** சயாம் அல்லது தாய்லாந்து போன்ற நாடுகளின் அரசாங்க விசேடங்களும் தேசியவிழாக்களும் குவாரிச (Quaritch) போன்றவர்களால் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. தாய் நாட்டு மக்களின் தேசிய விழா ஓர் **ஊசல்விழா** (Swing Festival) வாகும். வங்காள ஆசிரியர்கள் இதனை வங்காளத்தில் **கிருஷ்ணனுக்காகக்** கொண்டாடப்பெறும்ஊஞ்சல்விழா என்று உரிமை பாராட்டியிருக்கின்றனர்கள். அங்கிருந்து சைதன்யரின் சீடர்களுடைய செல்வாக்கால் அண்மையில் இந்தியாவின் தென்கோடிவரையிலும்கூட இது பரவியுள்ளது. பல ஆண்டுகளுக்கு முன் நான் கூறியுள்ளபடி (1950—60 ஆண்டுகளில்) இந்த விழாவுக்கு இரண்டு பெயர்களுண்டு. ஒன்று தாய்லாந்து மொழியிலும் மற்றொன்று வேறேதோ ஒரு மொழியிலும் உள்ளன.

இந்தப் பின்னைய பெயர்(எளிதாகப்புரிந்துகொள்ள முடியாத வொன்றெனினும்)திருவெம்பாவை திருப்பாவைஎன்பதேயாம். இதனை எந்தத் தமிழனும் அந்த நாட்டில் வழங்கப்பெறும் 'திருவெம்பாவை திருப்பாவை' என்பதன் கொச்சைத் திரிபு வடிவம் என்று எளிதாகக் கண்டுகொள்ள முடியும். திருவெம்பாவை சைவசமயக் குரவர் மாணிக்கவாசகரால் பாடப்பெற்ற சைவ சமயத் துதிப் பாடல். திருப்பாவை தென்னகத்தின் மீராபாயாக விளங்கும் வைணவப் பெண் துறவியாகிய ஆண்டாளால் பாடப்பெற்ற துதிப் பாடல். இவ்விரு பெயர்களின் இந்த இணைவுகாஞ்சி காமகோடிபீடத் தலைவராகிய ஸ்ரீசங்கராச்சாரியாரால் தோற்றுவிக்கப்பெற்ற ஒரு பொது இயக்கத்தை நினைவூட்டுகிறது. அவ்வியக்கத்தின் விளைவாக ஒவ்வொரு இந்துக்கோவிலும் திருப்பாவை திருவைம்பாவை மாநாடுகளை நடத்துகின்றது. இது, முன் காலத்தே தாய்லாந்து போன்ற பல இடங்களுக்குச் சென்று அந்நாட்டு மக்களோடு தங்கிச் சேர்ந்து வாழத் தலைப்பட்ட வைணவர்களும் சைவர்களும் இதுபோன்ற முயற்சியை மேற் கொண்டிருக்கலாம் என்ற குறிப்பினை நமக்கு அளிக் கின்றது.

## (அ) தாய்லாந்தில் பாவை

இவ்விரு துதிப்பாடல்களும் முன்பே உள்ள நாட்டுப் பாடல் வகையாகிய **பாவையை** அடியொற்றி எழுந்தவை. மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் நீராடி மண்ணுற் பாவை செய்து ஆற்றங்கரை, பொய்கைக் கரைகளில் அப்பாவையினை வைத்துத் தம் நாட்டில் நல்ல மழை வளம் பெருக வேண்டும் என்றும் தங்கட்கு நல்ல கணவர் வாய்க்கவேண்டும் என்றும் நோற்கும் நோன்பே **பாவைநோன்பு.** தாய்லாந்தில் கொண்டாடப்பெறும் திரு விழாவும் '**மழை**'த் திருவிழாவே; (மழை குறித்து எடுக்கப் பெறும் திருவிழா:) தாய்லாந்தின் இந்த அடிப்படைத் திருவிழாவோடு தமிழகச் சமயச் சடங்குகளும் இணைந்து கொண்டன. நான் (என்னுடைய மற்றொரு நூலில்) குறிப்

பிட்டுள்ளவாறு இந்தத் தொலை நாடுகளில் ஒரு விந்தையான முறையில் இப்பாடல்கள் விளக்கப்பெற்றுள்ளன. அதன் மூலம் தமிழகம், தாய்லாந்து ஆகிய இரண்டின் தெளிவான பண்பாடுகளை ஒன்ருக அறிந்து கொள்ளலாம்.

## (ஆ) தாய்லாந்தின் பண்பாட்டில் புதிய கருத்து

இப்பொழுது காஞ்சி காமகோடிப்பீடத் தலைவராக விளங்கும் ஸ்ரீ சங்கராச்சாரியாரின் வேண்டுகோளின் பேரில் இந்தப் பொருள்பற்றி ஒரு நூல் எழுதினேன். அதன் பின்னர்ப் பாங்காக்கிற்குச் செல்லும் வாய்ப்பும் அங்குவிழாக் கொண்டாடப்பெறும்வெளியிடம், சிவன், கணேசன், விஷ்ணு ஆகியோருக்காகக் கட்டப்பெற்றிருக்கும் மூன்று கோயில் களைக் காணும் வாய்ப்பும் கிட்டின. அங்குள்ள வழிபாட்டு முறைகள் பற்றியும் அங்கு ஓதப்படும் மந்திரங்கள் பற்றியும் கூறுகின்ற கையெழுத்துப் படிகளைப் பற்றி மிகுதியும் அறியும் பொருட்டு நான் அந்நாட்டுத் தேசீய நூலகத்திற்குச் செல்லு முன்னர் அங்குப் பயன்படுத்தப் பெறும் தமிழ் மந்திரங்களைக் கற்பதற்காக டாக்டர் தனிநாயகம் பாங்காக்கிற்கு வந்திருந் தார். அவர் திருவெம்பாவையின் முதலிரு பாடல்களும் அங்கு மந்திரங்களாக ஓதப்பெற்றமையைக் கண்டறிந்தார். பின்னர் நான் சென்ற பொழுது அங்கே நூலகத்திற்குப் பொறுப்பாளராயிருந்தவர் (இவர் அங்கு சமஸ்கிருதமும் கற்பித்து வருகிருர்.) திருவாசகத்திலிருந்து சில பாடல்கள் மட்டுமன்றித் தேவாரத்திலிருந்தும் சில துதிப் பாடல்கள் மந்திரங்களாக ஓதப் பெற்றவையை விளக்கிஞர் (இது பற்றித் திரு. ஜான்மார் லண்டன் ஆராய்ச்சி இதழில் விரிவான கட்டுரையொன்றினை அண்மையில் எழுதிவெளியிட்டுள்ளார்). அப்பர் அடிகளின் முதல் பதிகத்தின் தொடக்கச் சொற்க ளான '**கூற்ருயினவாறு**' என்பனவற்றை அவர் தம் நினைவில் கொண்டிருந்தார். இது **கயிலாயத்தின் வாயில்களது திறப்பு** என அழைக்கப் பெற்றது. வாயில்களின் திறப்பு தமிழில் **கடை திறப்பு** ஆகும். வாயில்களை அடைத்தல் **கடைகாப்பு** எனப்படும். தமிழ்நாட்டில் வழங்கப்பெறும் வழக்காற்றின்

படித் **திருமறைக்காடு** என்னும் பகுதியில் அமைந்த கோயிலின் கண் வெகுகாலமாக அடைத்தே இருந்த கதவுகளை அப்பர் அடிகள் திறந்தார் என்றறிகிறேம். அதே வழக்காறு திருஞானசம்பந்தர் முன்பு போலவே கதவுகள் மூடிக் கொள்ளும் வண்ணம் ஒரு பதிகம் பாடினர் என்று நமக்குக் கூறுகிறது. தமிழ்நாட்டில் திருஞானசம்பந்தரின் பதிகங்கள் **திருக்கடைக்காப்பு** என்று வழங்கப்படுகின்றன. இதனை அடிப் படையாகக் கொண்டு நோக்குங்கால் அப்பர் அடிகளின் பதிகங்கள் **திருக்கடைத் திறப்பு** என்று வழங்கியிருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. ஆனால் இந்தப் பின்னைய பெயர் (திருக்கடைத் திறப்பு) முன்னர் வழங்கியபோதிலும் இக்காலத்தே தமிழ்நாட்டில் வழக்கிலில்லை. தாய்லாந்தில் அது **கயிலாயக் கதவுகளின் திறப்பு** என்று மொழியாக்கம் செய்யப்பட்ட நிலையில் காணப்பெறுகிறது.

## (இ) மேலும் சில கருத்துக்கள்

பாங்காக் தேசிய நூலகத்தார் அவர்களுடைய கையெழுத்துப் படியின் நுண்பட நகலை(micro-film copy) எனக்கு அன்புடன் அனுப்பியுதவினர். அஃது இப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உள்ளது. பாங்காக்கில் உள்ள பிராமணர்கள்ஓதுகின்றதுதிப்பாடல்களை மலேயாப்பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு சிங்காரவேலு ஒலிப்பதிவு செய்திருந்தார். 1966இல் கோலாலம்பூரில் முதல் உலகத் தமிழ் மாநாடு—கருத்தரங்கு நடந்த போது அப்பாடல்களைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. தமிழகத்தில் அன்றாட வழிபாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள தேவாரப் பாடல்கள் (சிலமட்டும்) முறை வைப்பில் முறையே திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரால் பாடப்பெற்ற முதல் பதிகங்கள் முதலிடம் பெறுகின்றன. இவ்வழக்கினை உறுதி செய்ததுபோல இம்மூன்று பாடல்களும் பாங்காக்கில்பாடப் பெற்றன. ஆனால் வைணவ சமய நூலாகிய திருப்பாவையி லிருந்து ஏன் ஒரு பாடலுமே அங்கில்லை என்பது தெளிவாக வில்லை. அங்கே விஷ்ணு சுகோதயப் பெருமான் என்று

வழங்கப் பெற்றாலும் பாங்காக்கில் தீவிர வைணவர்கள் யாரும் இல்லை. சுகோதயா என்பது தாய்லாந்தின் ஒரு பெயர். பெருமாள் என்பது தமிழில் விஷ்ணுவின் பெயர். இத்திருமாலே அங்கு இவ்வாறு நாட்டுத் தெய்வமாக மாறியுள்ளார். அங்குள்ள பிராம்மணர்கள் கலப்பு மணம் செய்து கொண்டதன் விளைவாக மலேயமக்களோடு ஒன்றிவிட்டனர். ஆனால் இன்னமும்கூட அவர்கள் இராஜகுருக்கள் என மரியாதை செலுத்தப்படுகிறார்கள். **வாமதேவன்** என்பது போன்ற அவர்களின் பெயர்கள் சைவ ஆகமங்களின் செல்வாக்கை நமக்கு நினைவூட்டுகின்றன. கீழை நாடுகள், ஆப்பிரிக்கா முதலியவற்றில் வழங்கும் மொழிகளைக் கற்பிக்கும் லண்டன் பள்ளியைச் சேர்ந்த டாக்டர் ஜான்மார், கையெழுத்துப் படிகளில் உள்ள செய்திகளைப் படித்து வெளியிட முற்பட்டபொழுது "**நாராயணனே நமக்கே பறை தருவான்**" என்ற திருப்பாவை அடி ஒன்றினைக் கண்டறிந்தார். சென்ற ஆண்டு மதுரைக்கு அவர் வந்த பொழுது என்னிடம் இதைக் குறிப்பிட்டார். இக்கண்டுபிடிப்பு திருப்பாவையும் பண்டை நாட்களில் அவர்களது தேசீயத் திருவிழாவில் பாடப் பெற்றது என்ற செய்தியை மெய்ப்பிப்பதற்கு இன்றியமையாச் சான்றாக இலங்குகின்றது.

## (ஈ) பிராமணர்கள்

சயாமிலிருந்து தமிழ் நாட்டுக்கு வரும் சில தமிழர்கள் சயாமில் தமிழ்ப் பாடல்கள் மந்திரங்களைப்போல் ஓதப் பெற்றன என்று கூறியது உண்டு. ஆனால் இப்போது இது பற்றி நமக்கு விரிவான செய்தி கிடைத்துள்ளது. சிறப்பாகத் தாய்லாந்தின் தேசீயத் திருவிழாவின் மற்றொரு பெயரான திருப்பாவை, திருவெம்பாவை வழங்கப்பெற்ற செய்தியைக் குறிப்பிடலாம். தாய்லாந்தில் உள்ள பிராம்மணர்கள் தாங்கள் இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பாங்காக்கிற்கு வந்தவர்கள் என்று கூறிக்கொள்கின்றனர். மேலும் அவர்களிடமுள்ள எழுத்துச் சான்றுகள் கி. பி. 12ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவை அல்ல என மதிப்பிடப் பெற்

றுள்ளன. இத் தமிழ்ப் பாடல்கள் தேசீயத் திருவிழாவின் போது மட்டுமின்றி அரசர்களின் முடிசூட்டு விழாவின் போதும் பிற அரசவை நிகழ்ச்சிகளின் போதும் பாடப் பெற்றன. இந்நாடுகளில் தமிழின் செல்வாக்கு எந்த அள விற்குச் சமுதாயத்தில் மேற்குடி மக்களிடையேயும் பொது மக்களிடையேயும் பரவியிருந்தது என்பதனை இது நன்கு எடுத்துக் காட்டுகிறது. இத் திருவிழா கீழக்கடல் பகுதிகள் பலவற்றிலும் கொண்டாடப் பெற்றது எனவும் அறிகிறோம்.

## (உ) முடிவு

இவ்வாறாகத் தமிழ் நாட்டுப் பக்திநெறி—சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சைவ நாயன்மார் களும் பாவை பாடிய ஆண்டாள்போன்ற வைணவ ஆழ்வார் களும் கண்ட பக்திநெறி—இந்தியா முழுவதும் மட்டுமன்றிக் கீழைக்கடல் நாடுகள் பலவற்றிலும் சென்று பரவியது. ஒவ்வோரிடத்தும் ஒவ்வொருவிதமாகப் பின்பற்றப்பட்ட இப்பாடல்கள் கீழைக்கடல் நாடுகளில் மந்திரங்களாக இசைக்கப்படும் நிலைபெற்றுப் புத்த மதத்தினரையும் இந்துக் களையும் அவ்வந் நாட்டுப் பழங்குடி மக்களையும் ஒரே பண்பாட்டுச் சமுதாயமாக இணைக்கும் ஆற்றலையும் பெற்றன. இம்மாற்றங்களைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி நடத்தப் பெறல் வேண்டும்.

## (iii) பிற பண்பாடுகளோடு தொடர்பு

பிற பண்பாடுகளோடு கொண்ட தொடர்பினை—ஏதோ வெளிநாட்டு மக்கள் இங்கு வந்து தங்கினார்கள்—பின் தமிழர் களாகவே மாறிவிட்டார்கள்—சிலர் ஏற்றுமதி இறக்குமதி வாணிபத்தில் ஈடுபட்டார்கள்—சிலர் பெரும் அறநூலான திருக்குறள் போன்ற நூல்களை மொழி பெயர்த்தார்கள், பிறநாடுகளில் தமிழ் ஆராய்ச்சி—என்ற அளவிலன்றி வேறு ஆழமான நிலையில் விளக்குதற்கில்லை. இறுதியில் குறிப்பிடப் பெற்ற 'பிற நாடுகளில் தமிழ் ஆராய்ச்சி' என்பது பற்றி நான் தனியாக ஒரு கட்டுரை எழுதியுள்ளேன். எதிர் காலத்தில் ஆழ்ந்த ஆராய்ச்சிகள் பிற பண்பாடுகளில் தமிழ்ச் செல்வாக்கின் ஆழத்தைப் புலப்படுத்தும் என எதிர்பார்ப் போமாக.

# தமிழில் பிறமொழிச் சொற்கள்

## கொடுக்கல் வாங்கல்

உயிருள்ள மொழிகள் வழக்கில் இருக்கும்போது கொடுக்கல் வாங்கல் இருக்கவே செய்யும். பல பொருள்கள் ஒரு மொழி பேசுபவரிடையே சிறந்திருக்கும். அவற்றை மற்றொரு மொழி பேசுவோர் பயன்படுத்த வருவது உலக இயற்கை. நம்முடைய மாம்பழமும் மாங்காயும் ஆங்கிலேயர்க்குச் சுவை மிகத் தந்தன. ஆகையால் மாங்காய் என்பது 'mango' என்று பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஆங்கிலேயர் தமிழ் நாட்டிற்கு வந்ததிலிருந்து ஆங்கில மொழியில் புகுந்துள்ளது. இப்படி எத்தனை எத்தனையோ சொற்கள். அப்படியே ஆங்கிலேயர் வழியாக ''மோட்டார் கார்'' நம் நாட்டிற்கு வந்தது; அதனோடு 'கார்' என்ற சொல்லும் தமிழுக்குள் நுழைந்தது. எனவே கொடுத்தும் வாங்கியும் வாழ்வது மக்கள் பண்பாட்டு வளர்ச்சியையே காட்டுகிறது.

## வடமொழி

மயில் இந்திய நாட்டுப் பொருள். திராவிட மொழியைச் சேர்ந்த சொல். இது தெய்வீகம் என்று கருதப்படுகிற வடமொழியிலும் மயூரம் எனப் போய்ப் புகுந்ததும் இயல்பு தானே. இந்திய-ஐரோப்பிய மொழியில் இதற்கு ஒரு பெயர் அப்போது இருந்ததில்லை. மயிலின் அழகில் சொக்கியவர்கள் இதன் பெயரையும் கேட்டு மகிழ்ந்து அதனையே தம் மொழியிலும் வழங்கினார்கள், இப்படியே இன்னும் எத்தனை

எத்தனேயோ மொழிகள் வடமொழியில் போயுள்ளன. அப்போது வடமொழியில் இருந்தும் உயிருள்ளவையாய் வழக்கில் இருந்த சொற்கள் தமிழில் வந்துதானே வழங்கும், இந்திய மத ஒருமைப்பாடு எழுந்தபோது இவ்வாறு பல சொற்கள் பொதுச் சொற்களாக ஆகிவிட்டன. புத்தர், அருகர் முதலியோர் கொள்கைகள் தமிழ் நாட்டில் பரவிய போது இந்தக் கொள்கையில் பழகி வந்த சொற்கள் தமிழ் மொழியில் எத்தனேயோ வந்துவிட்டன. புத்தர் என்ற பெயர் தமிழல்ல என்று தள்ள முடியுமா? சங்கம் என்பதை அப்படியே தள்ளிவிட முடியுமா? இவையெல்லாம் சங்க காலத்திலேயே தமிழில் புகுந்துள்ளன. போதியார், இளம் போதியார் என்பவற்றுள் 'போதி' என்பது புத்த மதச் சொல்லல்லவா? உலோச்சனுர்-சைன மதத்தில் லோச்சு என்ற ''மயிர் கழிக்கும் நோன்பில்'' எழுந்த பெயரல்லவா? பிற நாட்டுப் பொருளே நீக்க முடியாததுபோல இவற்றையும் தள்ளிவைக்க முடியாது. தமிழிற் புகுந்த வட சொற்களே எண்ணி முடியாது. இரண்டாயிரத்துக்கு மேல் இருக்கும். தொடர்களே இங்கே கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லே.

## முண்டா

வடமொழி இந்த நாட்டிற்கு வருவதற்கு முன்னரும் 'முண்டா' இனத்து மொழிகள் இந்தியாவில் வழங்கியிருத்தல் வேண்டும். அம்மொழிகளேப் பேசுவாரோடு தொடர்புகொள்ள வந்தபோதெல்லாம் ஒருசில சொற்களேனும் அவர்களிடமிருந்து தமிழில் நுழையாதிருக்கமுடியுமா? வழுதுணங்காய், தவளேக் காய், மீசை முதலியன அத்தகையன என்று கருதுகிருர்கள். இளநீர் என்று சொல்லுகிருேமே அந்தப் பெயரை எண்ணிப் பார்த்தோமோ? இளந்தேங்காய் என்பதுதானே அதன் பொருள். அப்படியானுல் 'நீர்' என்பது தேங்காயையல்லவா குறிக்கவேண்டும். அப்படி, தேங்காய் என்ற பொருளிலேயே 'நீர்' என்ற சொல் ''முண்டா'' மொழியில் வழங்கு கிறது.

## கீழை நாடுகள்

பிற நாட்டினரோடும் நம்முடைய தமிழ்நாடு பழங் காலத்திலிருந்து உறவு கொண்டாடியது. கீழைத் தீவு களிலிருந்து பல நறுமணப் பொருள்கள் நம் நாட்டில் வந்து நம் மக்கள் மனத்தையும், மூக்கையும் கவர்ந்தன. தக்கோலி, அருமணவன் முதலியவை அந்நறுமணப் பொருள்களில் ஒரு சில. இவை, தாம் விளையும் இடத்தின் பெயரையே தம் பெயராகக் கொண்டவை என்று அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டுகிறார். இவற்றை எப்படி ஒழித்துத்தள்ளுவது? நாம் நம்முடைய பண்பாட்டை அங்கெல்லாம் பரப்பினோம் என்பதற்கு நிலையான சின்னங்களாக அங்கிருந்து வந்த சொற்கள் இன்றும் விளங்குகின்றன. நாம் மிகமிக இன்று விரும்பிச் சுவைக்கும் முருங்கைக்காய்ச் சாம்பாரில் விளங்கும் ''முருங்கை'' சிங்களவர்கள் நமக்குக் கொடுத்த அன்பின் காணிக்கை. இப்படி வாங்கிக் கொள்வதற்கு ஈடாக எவ்வளவோ மொழிகளை அவரவர்கட்குக் கொடுத் திருக்கிறோம். சீனர்களோடும் நமக்குத் தொடர்பு உண்டு. படகு வகையைச் சேர்ந்த 'சம்பான்' என்ற சொல்லும், பெரியமண்கலத்தைக் குறிக்கும்''காங்கு''என்ற சொல்லும், ''பீங்கான்'' என்ற சொல்லும் நம் விரும்பும் சீனப்பட்டைப் போலச் சீன நாட்டிலிருந்து வந்தவையே ஆகும்.

## கிரேக்கர்

நம்முடைய தந்தமும் முத்தும் மேனாட்டிற்குப் போனது போலக் கிரேக்க மொழிச் சொற்களும் தமிழில் வந்துள்ளன. சாட்டையைக் குறிக்கும்'மத்திகை' என்பதும்,தரைக்குள்ளே செல்லும் வழியைக் குறிக்கும்''சுருங்கை''என்ற சொல்லும், 'கன்னல்' என்ற நாழிவட்டிலின் பெயரும், இரண்டரை நாழி கையைக் குறிக்கும் ''ஓரை'' என்பதும் கிரேக்கச் சொற் களேயாம். யூதர்கள் பழந்தமிழ்நாட்டில் இப்போது கேரளம் என்ற பகுதியில் பிறருடைய கையினின்றும் தப்பிச் சரண் புகுந்தார்கள். 'யூதர்' என்ற பெயர் ''யஹுதி'' என்று வழங்கும் ஹீப்ரு சொல்லாகும். அரபு: அரபியர்களும்

இங்கே வந்து தங்கினார்கள். முகமது தோன்றுவதற்கு முன்னிருந்தே தமிழரோடு சேர்ந்து அரபியரும் கப்பலோட்டியவர்கள். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதியில் 891 அரபிச் சொற்கள் வந்துள்ளன. இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த சொற்களும் இவற்றில் நிறைய வருகின்றன. வசூல், தபா (முறை), ரஜா, இமாம், இலாகா, பிஸ்மில்லா, உருசு, காயம் (உறுதி), ஜேப்பி, சைத்தான்,தகவல், தாக்கீது,தவாலி, நகரா, மக்கர், மால் (மகால்) முதலிய பல சொற்கள் அன்றாடப் பேச்சில் புகுந்து தமிழோடு தமிழாய் வழங்குகின்றன.

## பாரசீகம்

முகமதிய அரசு தமிழ் நாட்டிலும் பரவியபோது ஏறக்குறைய 65 சொற்கள் பாரசீகத்திலிருந்து தமிழிற் புகுந்துள்ளன. இவற்றில் சில—சுபாதார், முலாம் முதலியவை அரபியிலிருந்து வந்தவை. 'துப்பாக்கி' என்பது துருக்கிய மொழியிலிருந்து பாரசீக மொழி வழியாகத் தமிழ்நாட்டில் புகுந்தது, சிப்பந்தி, தாவாலி, தம் பிடித்தல், தர்கா, நாஸ்தா, மஜா, மாலீசு, மோரா, லங்கர், லுங்கி, ஜமுக்காளம், ஜன், சால் (வை), ஜோக்கு, சர்க்கார் முதலியவை தமிழாகவே ஆகிவிட்டன. 'சுமார்' என்ற சொல்லைத் தமிழென்றே பலர் கருதுகிறார்கள். ஆனால் அது பாரசீகச் சொல்.

## உருது

தென்னிந்தியாவில் முஸ்லீம்கள் ஆண்டபோது தெக்காணி உருது அவர்களால் ஓங்கியது. இதன் பயனாக 961 உருதுச் சொற்கள் தமிழில் வந்துள்ளன. இங்கே நாம் உருது மொழியை இந்தியிலும் வேறாகக் கொள்ளவில்லை. அக்கப் போர், அக்கரகாரம், அக்கு, அசல், ஆசாமி, ஆசார வாசல், அண்டா, அணா, அபினி, அம்பர், அம்பாரம், அம்பாரி, அமுல், அலக்கலக்காக, அலாதி, அமீன், இந்துஸ்தான், ராஜீ, ராஜினாமா, ராட்டினம், ராத்தல், லங்கோடு, இனாம், ருஜூ, ஊதா, ஊதுவத்தி, ஐவேஜ், அவுட்டு, கச்சா, கச்சேரி, கஜானா, கசகசா, கசாப்பு, கெடுபிடி, கப்பி, கம்மி,

கைலி, கிராக்கி, கஜூர், கலாய், காப்பிரி, காய்லா, காலி, கீல் (தார்), குடுத்துணி, குத்தகை, குலாம், சந்தா, சப்பரம், சர்க்கா, சராசரி, சாமான் போன்ற எத்தனையோ சொற்களை ஒவ்வொரு நாளும் பேசி வருகிறோம்.

## போர்த்துக்கீசியம்

மேல் நாட்டார் 15ஆம் நூற்றாண்டிலிருந்தே தமிழ் நாட்டில் தலைகாட்டத் தொடங்கினார்கள். முதலில் வந்தவர்கள் போர்த்துக்கீசியர்கள். அவர்கள் கொண்டு வந்த பொருள்களில் பலவற்றின் பெயர் இன்று 'பறங்கி' என்ற முந்து நிலையோடு வழங்குகின்றன. பறங்கிக்காய், பறங்கிச் சக்கை, பறங்கிப்பட்டை, பறங்கிமா முதலியவற்றில் காண்க. ஊர்களின் பெயரிலும் போர்த்துக்கீசியத் தொடர்பைப் பறங்கிமலை, பறங்கிப்பேட்டை முதலியவற்றில் காணலாம். அலமாரி, கோப்பை, ஜன்னல், அன்னாசி, கடுதாசி, அல்பணுத்தி, கிராதி, கொரடா, த்ராவி, பாதிரி, பீப்பாய், மேசை, மேஸ்திரி, வராந்தா முதலிய சொற்கள் போர்த்துக்கீசிய மொழியிலிருந்து வந்தவையே. ஆங்கிலத்திலிருந்து வந்ததாகச் சென்னைப் பல்கலைக்கழக அகராதி கூறும். சொற்களில் பிஸ்கோத்து, புனல், பொத்தான் முதலியன போர்த்துக்கீசிய மொழியின் உச்சரிப்போடு ஒத்துள்ளன

## டச்சும் பிரெஞ்சும்

அவர்களுக்குப்பின் டச்சுக்காரர்கள் வந்தார்கள். இவர்கள் வழியாகத்தான் கக்கூஸ், சாக்கு, துட்டு, பம்பிளிமாஸ் முதலிய சொற்கள் தமிழுக்குள் புகுந்தன. பின்னே ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் வந்தார்கள். புதுச்சேரி பிரெஞ்சு மக்களின் நிலைக்களனாகி விட்டது. அவர்கள் பண்பாடு இன்னும் அங்கே வளர்கிறது. 23 சொற்கள் பிரெஞ்சிலிருந்து தமிழில் வந்த கதையைப் பல்கலைக்கழக அகராதி வெளியிடுகிறது. ஆசு (Ace), குசினி, டாக்குத்துரை (Doctor), பீரோ, லாந்தர் முதலியவை பிரெஞ்சு மொழியிலிருந்து நாம் பெற்ற பேறுகள். ஆங்கிலத்

திலிருந்து வந்தவையாகப் பல்கலைக்கழக அகராதி காட்டியவற்றில் பல—பத்தாந்து (Patent) போத்தல் (Bottle) முதலியவை பிரெஞ்சு உச்சரிப்போடு ஒத்து வருபவை.

## ஆங்கிலம்

ஆங்கிலேயர் 300 ஆண்டுகளாக நம்மை ஆண்டு பின் வெளியேறினார்கள். வெளியேறினாலும் மூன்று மொழித் திட்டத்தில் நம்முடைய மாணவர்கள் கற்க வேண்டிய மொழியாக ஆங்கிலம் இன்னமும் உதவுகிறது. பல்கலைக்கழக அகராதி 219 சொற்களை ஆங்கிலத்திலிருந்து தமிழில் வந்தனவாகக் குறிக்கிறது. ஆனால் இன்று மாணவர்கள், பேசும் பேச்சில் இவற்றைவிட எத்தனையோ மடங்கு ஆங்கிலச் சொற்கள் வழங்கி வருகின்றன. கல்லூரி மாணவர்கள் பேசும் மணிப்பிரவாளப் பேச்சில் நூற்றுக்கு ஐம்பது வரையிலும் கூட ஆங்கிலம் வரக் காண்கிறோம். நம்முடைய பஞ்சாயத்துக் களும் மீடிங்கு, கம்பரம் (Confirm) முதலியவற்றைத் தமிழாகவே கொண்டு வழங்குகின்றன. ஆடுதன், ஆர்மோனியம், இஞ்சினீயர், உயில், ஊக்கு, ஏக்கர், ஓட்டல், ஒயின், கலம் (Column), காப்பி, காரட்டு, கிறிஸ்துமசு, கிளாவர், கெஜட்டு, கேசு, கொக்கோ, கோச்சு, கோட்டு, கோபாலவார்னீசு, சம்மன், சவரன், சாப்பு, சிமிட்டி, சினிமா, சீக்கு, சீல், மோதிரம், ''டக்கு''ப் பிடித்தல், டாலர், டிக்கெட், டை, தார், நம்பர், பண்டு (Fund), பவுண்டு, அமவுண்டு(amount, பாங்க், பிஞ்சின் (Pension), பிடில், பிராமிசரி, நேக்கு, பிராந்தி, பேப்பர், போலீஸ், மைல், மைனர், மோட்டார், ராங்கி (Rank), வெல்வெட்டு, லீவு, சுபீனா முதலிய பல சொற்கள் இன்றியமையாத தமிழ்ச் சொற்கள் ஆகிவிட்டன.

## மராத்தியர்

மராத்தியர்கள் தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் சிலகாலம் ஆண்டார்கள். அவர்கள் விரும்பிய உணவு வகைகள், உடை வகைகள் முதலியன இன்றும் நமக்கு இனிக்கின்ற சொற்களாக வழங்குகின்றன. அட்டவணை, கைலாகு, கச்சாயம்,

அபாண்டம், காமாட்டி, கில்லாடி, குண்டான், கேசரிபாத், கோசும்பரி, சாம்பார், சவுக்கார், சாவடி, சேமியா, பட்டாணி, பேட்டை, லாவணி, ரசவாங்கி, வில்லங்கம், ஸொஜ்ஜி முதலிய பல சொற்கள் மராட்டியர் வளர்த்த பண்பாட்டை இன்னும் பேசி வருகின்றன. இந்த வகையில் 60—க்கு மேற்பட்ட சொற்கள் வழங்குவதாகப் பல்கலைக் கழக அகராதி கணக்குக் கொடுக்கிறது.

### கன்னடம்

விஜயநகர அரசாட்சியின்கீழ் சில அரசர்கள் கன்னட நாட்டைச் சேர்ந்தவர்களாகவும், சில அரசர்கள் தெலுங்கு நாட்டைச் சேர்ந்தவர்களாகவும் விளங்கினார்கள். அதோடு பழங்காலத்திலிருந்தே கன்னட நாட்டோடு தமிழ் நாட்டுக்குத் தொடர்பு உண்டு. யாப்பருங்கலக் காரிகையின் உரை குணகாங்கேயம் என்கின்ற கன்னட யாப்பு நூலைக் குறிப்பிடுகிறது. ஹொய்சளர் தமிழ் நாட்டரசருடன் மண உறவுகொண்டு சோழப் பேரரசின் வீழ்ச்சிக்காலத்தில் தமிழ் நாட்டில் அரசாளவும் முன் வந்தார்கள். இதன் பயனாகக் கன்னட மொழியிலிருந்து 38 சொற்கள் தமிழில் வந்த கதையைப் பல்கலைக்கழக அகராதி பாடுகிறது. அட்டிகை, இதா, எகத்தாளம், எட்டன், சமாளித்தல், ஒரு ''சிறை'', அரிசி, சொத்து, பட்டாக்கத்தி, பம்பு (மூங்கில்), பீக்கலாட்டம் முதலானவை கன்னடச் சொற்களேயாம்.

### தெலுங்கு

விஜயநகர அரசியலுக்கு முன்னரும் தெலுங்கு நாட்டோடு தமிழரசர்க்குத் தொடர்பு இருந்தது. இராஜராஜனது மகள் வயிற்றுப் பேரன்தான் வேங்கிநாட்டு இராஜராஜனாகி, தெலுங்கு இலக்கியத்தை நன்னய்யபட்டர் வழியே வளர்த்தான். முதலாவது குலோத்துங்கன் வேங்கி நாட்டு அரசனான பின்னரே சோழ நாட்டு அரசனானான். அக்கடா முதலிய சொற்கள் கம்ப இராமாயணத்திலும் வருவது இத்தகைய தொடர்பினாலேயே என்று கூறுவர். பல்கலைக்கழக அகராதி

யின்படி 335 சொற்கள் தெலுங்கிலிருந்து தமிழில் வந்துள்ளன. அக்கடா, அந்தரங்க வைபவம், அட்டி, அண்ணு, டாப்பு (அட்டவணை), இண்டிமாமா, ரெட்டி, ரவிக்கை, ராயசம், ராவடம், ரேக்கு, லஞ்சம், லாகிரி, உத்தி, உப்பசம், உம்மச்சு, ஒட்டாரம், ஒயில், கட்டடம், கட்டப்பாறை, கந்தை, கண்ணராவி, கபோதி, கம்பத்தம், கம்பல், கரிசை, கலப்படம், கவுனி, காட்டம் (காரம்), குப்பம், கும்பு, கெடுவு, கொப்பி (கும்பி), கொலுசு, சந்தடி, சலவை, ஜளிப்பு (ஜலதோஷம்), சிட்டிகை, சிமிளி, உருண்டை, சுங்கு, ஜண்டை (ஜதை), சொக்கா, சொட்டு, சவுத்தி, த்ராபை, தடவை, திப்பி, திமிசு, தும்பு, தெப்பல் (அடி), தெலுங்கு, தொட்ட (பெரிய), தோவத்தி (வேட்டி), நீச்சு (மீன் நாற்றம்), பட்டறை, பண்டைப் பேச்சு, பலப்பம், பவிசு, வாணலி, பால்மாறுதல், பிருடை, பூஞ்சைக் காளான், போல் (Hollow), வெல்தி, ஜப்பை, ஜாஸ்தி, சந்து, சுளுவு முதலியன எல்லாம் தமிழ் நாட்டிற்கு வந்த ரெட்டிமாரோடும், நாயக்கர்மாரோடும், தெலுங்கு நாட்டுப் பார்ப்பனரோடும் தமிழ்நாட்டில் குடியேறிய சொற்கள்.

## மலையாளம்

மலையாள மொழி திராவிடமொழி இனத்தைச் சேர்ந்தது. பழஞ்சேர நாடே கேரள நாடாகும். நாஞ்சில் நாடு கேரள அரசர் ஆளுகையில் இருந்து வந்தது. அதனால் பல மலையாளச்சொற்கள் நாஞ்சில் நாடு முதலிய வட்டாரங்கள் வழக்கில் இருக்கின்றன. கச்சவடம், காலன், கொச்சி, சொக்கன் (குரங்கு), தளவாடம், நெரியல், பிரதமன் (பாயாசம்), வஞ்சி முதலியன மலையாளத்திலிருந்து வந்த சொற்கள். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதி 26 சொற்கள் மலையாளத்திலிருந்து தமிழில் வந்திருக்கின்றன என்று காட்டுகிறது.

## பிறநாட்டுப் பொருள்கள்

தமிழர்கள் பல நாட்டாரோடும், உலகத்தோடும் உறவு கொண்டதால் 'ஸ்புட்னிக்' போன்ற சொற்கள் பிறநாட்டி

லிருந்து வந்து தமிழ்க் குழந்தைகளின் வாயிலெல்லாம் உருளு கின்றன. நம்முடைய நாவுக்குத் தமிழ்ப் பெயருள்ள உணவு வகைகள் இனிக்கவில்லை. இனிக்க வேண்டுமானால் அவை பிறமொழிச் சொற்களாக இருக்கவேண்டும்; அல்லது அவற்றில் பிற ஊரின் பெயரேனும் இருக்கவேண்டும். மைசூர்ப்பாக்கு முதலியனவற்றில் இதைப் பார்க்கலாம். சூரத்காரி, டெல்லி தர்பார் என்று ஒவ்வொரு நாளும். ஒவ்வொரு புதுப் பெயரோடு பழைய சர்க்கரையையும், கோதுமையையும், பருப்புக்களையும் நெய்யோடு கலந்து தருவதுதான் பணம் சம்பாதிக்கும் வழியென உணவு விடுதிக்காரர்கள் நன்றாக அறிந்து கொண்டிருக்கின்றார்கள். அறிந்ததைவிட அறியாததில்தான் கவர்ச்சி இருக்கின்றது போலும். ஆனால் இது அறிவாளியின் செயலாகாது. ஏமாந்து போகும் இளிச்சவாயர்களின் செயலாகும்.

## வீண் ஆரவாரம்

தமிழில் இல்லாத சொற்கள் மேலே கண்டபடி எல்லாம் வருவதைத் தடுக்க முடியாது. ஆனால் நல்ல தமிழ்ச்சொற்கள் இருக்கும்போது அதை விட்டுவிட்டு ஆங்கில அறிவையோ வடமொழி அறிவையோ காட்டுவதற்காக மட்டும் பிற மொழிச் சொற்களைப் பயன்படுத்துவது கேலிக்கூத்தாகும். செத்தார் என்று சொல்வதற்குப்பதிலாக "died ஆயிட்டார்" என்று சொல்வதைக் கேட்டு எவன்தான் பொறுமையோடு இருக்க முடியும்? தண்ணீர் இருக்கும்போது ஜலம் என்று சொல்வானேன்? ஆனால் தெய்வீக நீர் என்று உணர்த்தத் 'தீர்த்தம்' என்று சொல்வதில் பொருளுண்டு. இடத்திற்கு ஏற்றபடி சில சொற்களை எந்த மொழியிலிருந்து வந்தன வென்று பாராமலே பயன்படுத்துவது ஓர் அழகாகலாம். 'பயம்' என்பது வடமொழிச் சொல்தான். ஆனால் ஆழ்ந்த நிலையைக் குறிக்காமல் குழந்தையின் பொருளற்ற பயத்தையும் குறிக்கலாம். ஆகவே ஆழ்ந்த நிலையைக் குறிக்கப் பாரதியார் "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்று பாடினார். அந்த ஆழ்ந்த நிலையைக் குறிக்காதபோது "ஐயமுண்டு பயமில்லை மனமே" என்றே

பாடினார். 'ஜயம்' என்பது தமிழில் கோலி ஜெயிப்பதற்கும் பயன்படுகிறது. ஆகையினாலே உயர்ந்த ஜெயத்தைக் குறிக்கும்போது "வெற்றி எட்டுத்திக்கும் எட்டக்கொட்டு முரசே" என்று பாடுகிறார். எனவே வடமொழிச் சொல்லாக இருந்தாலும், தூய தமிழ் சொல்லாக இருந்தாலும் இடமறிந்து பயன்படுத்தும் அழகை நாம் உணர வேண்டும். தமிழில் தமிழாக வருவது தமிழ்தான். வடமொழிச் சொற்களிற் சிலவற்றைப் பயன்படுத்தினாலும் நம்மைச் செந்தமிழ் ஞானசம்பந்தன் என்றே சம்பந்தர் பாராட்டிக் கொள்கிறார்.

## கலைச் சொற்கள்

எல்லாச் சொல்லையும் கல்லூரிப் படிப்பிலும் தமிழாக்கி விடவேண்டுமென்று கூறுவது தமிழில் கல்லூரிப் படிப்பைக் கற்றுக் கொடுக்கும்போது முடியுமா என்று பார்க்க வேண்டும். பல்கலைக் கழக உயர்நிலைக் கல்வியில் சிறப்பாக எது விளங்குகிறது? பொருளறிந்து பயன் படுத்தும் கலைச் சொற்களைத்தான் இந்த உயர்நிலைக் கல்வியின் சிறப்பாக விளக்கவேண்டும். நாளைக்கே அவற்றைத் தமிழில் கூற வேண்டுமென்றால் இன்றைய பேராசிரியர்களெல்லாம் வாயடைத்துச் சாகவேண்டும், அல்லது தட்சிணாமூர்த்தியைப் போல மவுனமாகப் பாடங் கற்பிக்க வேண்டும். கல்லூரிகளை மூடிவிடும் நிலையே இதனால் ஏற்படும்.

## பொதுமக்கள்

ஆனால் பொதுமக்களுக்கு என்று எழுதும் நூலில் நிறைய பிறமொழிச் சொற்களே இருக்குமானால் அவர்களுக்கு என்ன விளங்கும்? கல்லூரிப் பாட நூல்கள் வேறு; பொதுமக்கள் படிக்கும் நூல்கள்வேறு; பொதுமக்களுக்கு அவர்கள் அறிந்த சொற்களைக் கொண்டே தெளிவாகஎழுதி விளக்கவேண்டும். இங்கே மணிப்பிரவாளம் பயன்படாது. இதனாலேயே இந்த நாட்டுப் பழைய மணிப்பிரவாள நடை வேர் கொள்ளாது மறைந்து விட்டது. உலகம் போகின்ற போக்கில் பொது

மக்கள் குடி அரசில் சிறந்த இடம் பெறவேண்டுமானுல் உலக அறிவை எல்லாம் ஒரு வகையாகப் பெற்றே தீரவேண்டும். கலைச்சொற்கள் எல்லாம் தமிழ்ச் சொற்களாக அவர்கள் வாயிலும் காதிலும் இனிக்கின்ற காலம் வரும். முன் காலத்தில் மணிப்பிரவாள நடையில் எழுதினுலன்றிச் சில கருத்துக்களை விளக்கவே முடியாதென்று சில அறிஞர்கள் கருதினுர்கள். ஆனுல் நாளடைவில் அந்த அறிவெல்லாம் எளிய தமிழில் எழுதக் கூடும் என்ற நிலை ஏற்பட்டபோது மணிப்பிரவாள நடை தானுகவே மறைந்து போனது. இலத்தீனில்தான் கருத்துக்களைத் தெரிவிக்க முடியுமென்று நியூட்டனும் எழுதினுர். இப்போதோ அந்த நிலை மாறி ஆங்கிலத்தில் எழுதும் காலம் வந்துள்ளது. அந்த நிலை தமிழில் ஓராண்டு ஈராண்டில் வராது, கற்றவர்கள் பொது மக்களுக்காக எழுதும்போது இந்த நிலை படிப்படியாக வளரும். அது வரையிலும் ஆங்கிலத்-தமிழ் மணிப்பிரவாள நடை வழக்கத்தில் இருந்து கொண்டுதான் வரும்.

# அன்பும் என்பும்

அன்பையும் என்பையும் பலமுறை தொடர்புபடுத்திப் பேசுகிறார் வள்ளுவர். அன்புடைமையைப் பற்றிப் பேசும் அதிகாரத்தில் பத்துக் குறள்களில் நான்கு குறள்கள் இந்தத் தொடர்பை வெளிப்படையாக வற்புறுத்துகின்றன. பிற குறள்களும் இந்த இயைபினையே குறிப்பாகச் சுட்டுகின்றன என்று கூறலாம். அன்பு என்பது இன்னதென எடுத்துக் காட்ட முடியாதது என்று பலர் கூறுவார்கள். பிழம்பு காட்டலாகாப் பொருள் எனப் பழந்தமிழ் நூல்கள் கூறும். ஆனால் எல்லாச் சொற்களுமே அவ்வச் சொற்களைப் பயன் படுத்தும் நிலையில் பெரும்பான்மையும் அவ்வவற்றிற்கு உரிய சூழ்நிலையையே பொதுவாகச் சுட்டி விளக்கம் பெறுகின்றன. வணக்கம் என்றால் ஒருவரை ஒருவர் காணும்போது முதலில் பரிமாறிக் கொள்வதனை விளக்கும் வகையில் பயன்படுவதே பொருளாம். எனவே அன்பு என்பதும் அதனைப் பயன் படுத்தும் நிலையில் நன்றாக விளங்கும் சொல்லே என்று கருது கிறார் வள்ளுவர். அன்பைப் பிறர் அறியாது யார் தடுக்க முடியும்? கதவடைத்துப் பூட்டி வைக்க முடியும்? குழந்தை யின் வருத்தத்தைக் கண்ட தாய் கண்கலங்கி வருந்தி நிற்கவில்லையா? அங்கேயெல்லாம் அன்பு கண்ணீரும் கம்பலையுமாய்ப் பொங்கி வழிந்து ஒரு சிலபோது பெரிய ஆரவாரத்தையும் விளைவித்து விடவில்லையா? இப்படிக் கேட்கின்றார் வள்ளுவர்.

ஆனால் பேசக் கற்றுக்கொண்ட மனிதன் தான் பேசும் சொல்லைத் தவறான வழியில் பயன்படுத்தவும் கற்றுக் கொள்கிறான். வயிற்றுநோய் என்றால் பள்ளிக்கூடத்திற்குப்

போகாமல் வீட்டிலேயே இருந்துவிடலாம் என்று சிறுவன் அறிந்துகொள்கிறன். பள்ளிக்குப் போவதற்கு மனம் இல்லாதபோதெல்லாம் தனக்கு வயிற்றுநோய் இல்லாமற் போனாலும் ''வயிற்றுநோய்'' என்று கூறிப் பள்ளிக்குப் போகாமல் நின்று விடுகின்றான். சொல்லுக்குரிய பொருள் இல்லாதபோதும் சொல்லைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றலால் எழுகின்ற இடர்ப்பாடு இது. இதனால் அன்பில்லாதபோதும் அன்பிருப்பதுபோலப் பேசலாம்; நடிக்கலாம். அதனால் அவ்வாறு ஏமாற்றக்கூடிய நிலையில் என்ன செய்வது என்ற கேள்வி எழுகிறது. அவா, பற்று, ஆசை முதலிய சொற்களைப் பயன்படுத்தும் நிலைக்கும், அன்பு என்ற சொல்லைப் பயன் படுத்தும் நிலைக்கும், சிலபோது வேற்றுமை தெரிவதில்லை. இவற்றை எல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு வள்ளுவர் ஒரு விளக்கம் தருகின்றார். ஓர் ஆட்டுக் குட்டியைக் கண்ணும் கருத்துமாகப் பாராட்டிச் சீராட்டிக் கசாப்புக்காரன் வளர்க் கின்றான். ஒரு தாய் தன் குழந்தையைப் பாரட்டிச் சீராட்டி வளர்க்கின்றாள். ஆனால் கசாப்புக்காரனோ ஆட்டைக் கொழுக்க வைத்துத் தான் நா இனிக்க உண்டு வயிற்றை வளர்க்கவே விரும்புகிறான். தனக்கெனவே அந்த ஆட்டுக் குட்டியினிடத்தில் ஈடுபடுகின்றான். ஆனால் தாயோ தன் னலத்திற்காக ஈடுபடுகின்றாள் என்று சொல்வதற்கில்லை. வீடு தீப்பற்றிக் கொள்ளுமானால் தன்னுயிர் போகும் என்று தான் அறிந்தபோதும் அவள் அந்தக் குழந்தையைக் காப்பாற்ற முற்படுகின்றாள். இங்கே தன்னலம் என்பது இல்லை. அம்மட்டுமா! குழந்தைக்காகவே வாழ்கின்ற நிலையும் உண்டு. பழந்தமிழ் நூல்கள், இப்படி வாழ்வாரைத் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்று பேசும். இந்தச் சொற்றொடர் புத்தபெருமானைக் குறித்தாலும் தாயிடத்திலே யும் நாம் நாள்தோறும் காண்கின்ற நிலையே என்பது வள்ளுவர் கருத்து. அன்புடையார் தங்கள் எலும்பையும் கொடுப்பார்கள். இங்கே எலும்பு என்பது முதுகெலும்பைக் குறிக்கும். அது போனால் வாழ்வது எங்கே? ததீசி முனிவர் அப்படி கொடுத்து உதவினார் என்ற கதையும் உண்டு. மக்கள் முதுகெலும்பு உடைய முதுகெலும்பிகள் (Verte-

brates) என்ற இனத்தைச் சேர்ந்தவர். முதுகெலும்போடு வளரும் வளர்ச்சி எல்லாம் இந்த அன்பு வாழ்வு வாழவேதான் என்பது போலப் பேசுகிருர் வள்ளுவர்.

உயிர்கள் ஓருயிர் என்ற நிலையில் இருந்து மெல்ல மெல்ல வளர்ந்து உயிரினத்தின் கொடுமுடியாக விளங்கும் மக்கள் நிலையை அடைந்துள்ளன. வள்ளுவர் கருத்தின்படி இவ் வளர்ச்சியின் முடிவான நோக்கம் அருளை வளர்க்கும் அன்பை வளர்ப்பதேயாம். இந்த அன்பே, குழந்தை மேலுள்ள ஈடு பாடாகத் தோன்றி வளர்கிறது. முதுகெலும்பியாக உயிர் பரிணமித்ததின் நோக்கமே என்ன? இந்த அன்பு இவ்வாறு விளக்கம் பெறவே ஆம். அன்பு என்பதும் முதுகெலும்பு என்பதும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாது நியதமாய் உள்ள உடனிகழ்ச்சிகளாம். அப்படியாளுல் அன்புக்காக எலும்பைத் தருதல் அந்தப் பரிணும வளர்ச்சியின் நோக்கத்தை நிறைவு செய்வதாகும்.

உயிர் இருக்கிறதா இல்லையா என்று கண்டறிவது எப்படி? தூண்டத் துலங்குவது, நஞ்சூட்டப் பெற்ருல் கெடுவது முதலிய சோதனைகள் உலோகங்கள், செடிகொடிகள் முதலியவற்றிற்கு உயிரிருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க உதவலாம். நாடி துடிக்கிறதா, மூச்சு விடுகிறதா என்று பார்த்தே, மருத்துவர்கள் உயிர் இருக்கிறதா என்று முடிவு செய்கிருர்கள். ஆளுல் இந்த ஆராய்ச்சியை வள்ளுவர் ஒப்புக் கொள்ளவில்லை. இவையெல்லாம் முதுகெலும்பு உயிர் வாழ்கிறதா என்பதை மட்டுந்தான் காட்டும். எந்த நோக்கத்திற்காக ஒரு பொருள் எழுகிறதோ அந்த நோக்கத்தை நிறைவேற்ருதபோது அந்தப் பொருள் இருக் கிறது என்று கூறி என்ன பயன்? மின்விளக்கு என்று பேசு கிரும். ஆளுல் அது எரியாமற்போளுல் அது மின்விளக்கு ஆகுமா? அது ஒரு பொம்மை என்றுதான் சொல்ல வேண்டும். எனவே நோக்கம் அல்லது லட்சியமே உயிர்நிலையாகும். அன்பு லட்சியமாளுல் அதை ஒட்டித்தான் அன்பு இருக்கின் றதா உயிர் இருக்கின்றதா என்ற முடிவைக் கூறமுடியும். அது இல்லாதபோது வெறும் பொம்மைதான் இருக்கின்றது.

உயிரற்ற பிணந்தான் இருக்கிறது. ஆனால் அன்பு இல்லாதவர்கள் நடக்கின்றார்களே என்றால் நடைப்பிணம் என்றே கருதவேண்டும் என்றார் வள்ளுவர். எலும்பின்மீது தோலைப் போர்த்தி அதற்கு விசையும் கொடுத்துவிட்டால் அந்தப் பொம்மையும் இயங்கும் அல்லவா?

இயற்கையின் நோக்கம் இன்னது என்பது இந்தப் பரிணாம வளர்ச்சியால் நன்கு விளங்குகிறது. ஓர் ஆன்மா உயர்ந்து வரும்போது இந்த அன்புருவாக முடிவில் விளங்குவதற்கு ஏற்ற வாய்ப்பினையே அது அவாவி நிற்கின்றது. அதற்கேற்ற உடம்பினைப் பெறுகின்றது. ஆனால் அந்தக் குறிக்கோளை நிறைவேற்றாதபோது இந்தப் பொன்னான வாய்ப்பைச் சிதைத்துத் தள்ளுவதாக முடிகிறது. ''நந்தவனத்தில் ஓர் ஆண்டி, அவன் நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக் கொண்டு வந்தான் ஒரு தோண்டி-அதைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி'' என்று பாடுகின்றார் சித்தர். எனவே கூர்தல் அறம் என்று திரு. வி. க. கூறுவது இவ்வாறு அன்பு சிதைந்து நிற்கும்போது, ஆன்ம வளர்ச்சி எல்லாம் கெட்டு ஒழிகின்றது. ஆன்மா பயனற்றுப் பசையற்று ஈரமற்று வெம்பிக் கல்லாய் இறுகிக் கீழ்நிலையை அடைகிறது. எனவே எந்த அண்டத்தின் தர்மநெறி அல்லது கடவுள், ஆன்மா விரும்பியபடி அன்புக்கு வாய்ப்பான என்பு நிலையைத் தந்ததோ அதே தர்மநெறி (அப்போது கடவுள்) அந்தக் குறிக்கோள் நிறைவேறாத நிலையில் அதனைக் கெடுத்து ஒழிக்கின்றது. அன்பின் விளக்கத்திற்காக வந்த என்பு பயனற்றபோது எலும்பிலாத உடம்பு என்றே பேசலாம் அல்லவா! மனித உரம் இல்லாதவனை முதுகெலும்பு இல்லாதவன் என்று பேசவில்லையா! இவ்வாறு எலும்பற்ற உடல்கொண்ட ஆன்மாவை இயற்கை அன்னையே பசையறக் காயவைத்துவாட்டுவதற்கு ஓர் உவமை கூறுகிறார் வள்ளுவர். எலும்பில்லாத உயிர்வகைகளை நாம் அறியோமா? அவற்றை நாம் புழுக்கள் என வழங்குகிறோம். அவை வெயிலில் வாடித் துடித்துச் சாகும். தருமம் (அல்லது கடவுளும்) ஒரு பெருஞ் சோதி. அண்டத்திற்கு எல்லாம் ஒரு பெருஞ் சூரியன். அந்த

வெயிலில் புதிய தாமரை மலரும். தேன் இன்றிக் கன்றிய பழந்தாமரை சாம்பும். அதுபோல் இந்த அண்டப் பெருங்கதிரவனின் வெயிலொளி அன்பு நிறைந்த உயிரை வளர்க்கும்; அன்பிலா நெஞ்சைக் காயவைத்து வாட்டும்.

அன்பில்லாதவர்கள் 'ஓ' என்று வாழவில்லையா என்று கேட்கலாம். ஆனால் இருப்பு நிலை என்பது வேறு. மண்ணாங் கட்டியும்தான் இருக்கிறது. வாழ்தல் என்பது வேறு. மண்ணாங்கட்டி வாழ்கிறது என்று யாரும் பேசுவதில்லை. வாழ்வு என்பது உள்ளத்தோடு இயைந்த புறக் கோலத்தின் பொலிவு. அகத்தே அன்பு இல்லாதபோது நடைப்பிணத் திற்குச் சுடுகாட்டிற்குப் போகும் முன்பு செய்யும் ஒப்பனையே இங்கே நினைவுக்கு வருகிறது. கல்லின்மேல் சிறிது ஈரமண் இருந்தாலும் சில விதைகள் முளைவிடும். ஆனால் அந்தச் செடி வளருமா? மரந்தான் வற்றிப் போய்விட்டதே. அதுவும் கல் நிலத்திலேயா மறுபடியும் தளிர்விடப் போகிறது?

புறக்கோலத்தைக் கண்டு மயங்க வேண்டுவதில்லை. இது எல்லாம் புறஞ்சுவர்க்கோலந்தான். உள்ளே அத்தனையும் பாழ். மன அமைதி என்பது அங்கே இல்லை. ஆடை அணியைக் கண்டு மயங்குவதா? அல்லது ஏதோ உலகுக்கு அஞ்சிக் கண்ணொளி காட்டுவது கண்டு மயங்குவதா? மூக்கழகைக் கண்டு மயங்குவதா? வாயின் புன்சிரிப்பழகைக் கண்டு மயங்குவதா? உண்மையில் அழகு அன்பின் அழகுதான். புத்த பெருமானி அழகும் ஏசுநாதரின் அழகும், குழந்தை முருகனின் அழகும் அன்பின் அழகன்றி வேறென்ன? தாயும் குழந்தையும் கொஞ்சி நிற்கும் அன்பைக் கண்டவர்கள்தாம் உண்மை அழகைக் கண்டவர்கள். எனவே உண்மையான உறுப்பு மனிதனுக்கு அன்பு ஒன்றுதான். பிற உறுப்புக்கள் எல்லாம் இருந்தென்ன? போயென்ன? என்பைப் பற்றிப் பேசிய வள்ளுவர் என்பு போர்த்த உடம்பைப் பற்றிப் பேசத் தொடங்கி அதில் உள்ள ஒவ்வொரு உறுப்பையும் பகுத்துப் பார்த்துப் பயனில்லை என்று உதறித்தள்ளி அன்பு ஒன்றையே பயனுள்ளது எனக் கொள்கிறார்.

வாழ்வின் நோக்கம் இன்பம் அல்லவா! அன்பு என்று

சொல்வது எப்படி? உண்மையா? ஆனால் உலகத்தில் உண்மை யான இன்பம் எங்கே இருக்கின்றது? அன்பு வாழ்க்கையில் தான் இன்பம் மலர்கிறது. மனிதன் மறையலாம். அவனு டைய புறக்கோலம் துன்பக் கோலமாகத் தோன்றலாம். அவனிடம் அன்பு என்பது உயிர்நிலையாக நிற்குமானால் அவனிடந்தான் இன்பம் பூத்துக் குலுங்கும். அவன் என்றென் றும் வாழ்கிறான். ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டார். இவ்வாறு அறைந்தவர்களுக்காக வேண்டிப் பரிந்து அவர்களை மன்னிக்கும்படி ஆண்டவனிடம் மன்றாடியது அவருடைய அன்பு உள்ளம். சிலுவை ஏறிய பெருமானது முகத்தில் இன்ப ஒளி ததும்பக் காண்கிறோம். இன்ப ஒளி ததும்பும் முகத்தோடேயே குண்டால் சுடப்பட்டு வீழும்போதும் பகைவரையும் நேசிக்க வேண்டும் என்று வாழ்ந்து காட்டிய காந்தியார் முகத்திலும் ஹரி ஹரி என்ற இன்ப அழகு பூத்திருக்கப் பார்த்தோம். எனவே அன்புடைய வரிடத்தில்தான் இன்பம் உண்டு. அந்த அன்புக்கே எல்லாப் பெருஞ் சிறப்பும்.

எப்படி இந்தப் பெருஞ் சிறப்பு எழுகிறது? அன்புடைய வர்கள் பிறர் துன்பங்கண்டு அதைத் தமதுடையதாகவே கொண்டு அதை நீக்கும் வகையில் மனதார ஈடுபடுகிறார்கள். அப்போது என்ன விளையும்? உலகம் முழுவதும் இவ்வாறு இவர்களிடம் பயன்பெற்று வரும்போது அவர்களை நண்பர் களாகக் கொள்ளும். ''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' என்று வாழும்போது ''யாதானும் ஊராம்; யாதானும் நாடாம்.'' அவர்கள் தேடாமலே அவர்களைப் புகழ் தேடி வரும். சென்ற இடத்தெல்லாம் சிறப்பே எதிர் கொள்ளும்.

உலகம் அன்பால் மட்டுமா வாழ்கிறது? போரும் நெருக் கடியும் எப்போதும் உலகை வாட்டிக் கொண்டு இருக்க வில்லையா? அவற்றைத் தடுக்கின்ற வீரர்களும் சிறந்த மனிதர்கள்தாமே? அன்பென்ற அறவழியால் மட்டும் உலகம் வாழுமா? போர் எழுந்தால் காக்கின்ற மறவர்களும் வேண்டாமா? வேண்டும். ஆனால் அந்த மறவர்களும் உயிரையும் பொருட்படுத்தாமல் போரில் குதிப்பது ஏன்?

தாம் அன்பு பாராட்டும் குடும்பத்தையோ ஊரையோ நாட்டையோ அழியாமல் காப்பாற்றுவதற்குத் தங்கள் உயிரையே கொடுக்க முன்வருகிருர்கள். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகிய இவர்களிடமில்லாமல் வேறெங்கே அன்பு வாழ்கிறது? ஆதலால் அகவாழ்வு, புறவாழ்வு என்று வாழ்க்கையில் இரு கூறுகளையும் ஒன்ருகவே கண்ட பழந் தமிழர் இரண்டும் அன்பின் விளக்கங்களே என்பதை அறிந் தார்கள். இதனை அறியாதவர்கள்தாம் அறவாழ்வுக்கும் மற வாழ்வுக்கும் அன்பே அடிப்படை என்பதை மறந்து அறவாழ் வுக்கு மட்டுமே அன்பு சார்பு என்ருர்கள். மனிதன் எலும் போடு வாழ்தலே அன்புக்காக என்ருல் மறவாழ்வு என்கிற வீரவாழ்வு எவ்வாறு அன்பின்றித் துளிர்க்க முடியும்? ஆண்டவனிடத்திலும் அறக் கருணை, மறக்கருணை என்று கருணை ஒன்றையே இரண்டாகப் பகுத்துப் பேசவில்லையா? (பரிமேலழகர் முதலானேர் கொண்ட பொருளினும் வேருன வகையில் பொருள் கொண்டு இங்கு விளக்கியுள்ளோம். இருபதாவது நூற்ருண்டில் வாழ்கின்றவன் திருக்குறளைப் படிக்கின்றபோது எழுகின்ற எண்ணத்தை கூறியுள்ளோம்).

# அவிரோதம

பண்பாடு என்பது மனித இனத்திற்குச் சிறப்பினைத் தரும் நிலைகள் அல்லது இயல்புகள் வளர்ந்து ஒன்றுதலே யாம். இந்த வகையில் நோக்கும்பொழுது பண்பாடு என்பது உலகத்திற்கு எல்லாம் பொதுவே ஆம். அந்த அந்த இனம் அந்த அந்த காலத்திற்குத் தக்கபடி பண்பட்டு வரும்போது இந்தப் பொதுமை சிறந்து ஒவ்வொரு பகுதியாக, ஒவ்வொரு வகையில் மேலோங்கி வெளிப்பட்டுத் தோன்றும். இவ்வாறு பண்பட்டு வரும் நிலையைப் பண்பாடு என்று சொல்வதில் ஒரு பொருத்தம் உண்டு.

ஆனால் தமிழ்ப் பண்பாடு, கிரேக்கப் பண்பாடு என்று எல்லாம் கூறுவது ஏன்? என்று ஒரு கேள்வி நம் மனத்தில் எழலாம். அப்படிக் கூறுவதன் பொருளும் மேலே கூறிய விளக்கத்திலேயே அடங்கிக் கிடக்கிறது. இந்தப் பொதுமை களில் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு நாட்டார் இடையே அவர் அவர்கள் வரலாற்றுச் சூழ்நிலைக்கு ஏற்ப முதலில் சிறந்த நிலையில் வெளிப்பட்டுத் தோன்றுவதனால் அந்த இனத்தின் பெயர் கொண்டு அப்படி முதலில் சிறந்து வெளிப்பட்ட பகுதியை வழங்குவது மரபாகி விட்டது. இருந் தாலும் அது உலகிற்கு எல்லாம் பொதுவான தன்மையே. பாட்டு, உண்மை, அன்பு முதலியவற்றின் நுட்பத்தை ஓரினம் முதலில் உணரலாம். இருந்தாலும் உலகத்திற்கு எல் லாம் பொதுவான பண்பாட்டு உண்மைகள் அல்லவா இவை? அதனாலேயே பண்பாட்டில் போராட்டத்திற்கு இடமில்லை.

தமிழ்மக்கள் வரலாற்றுக் காலத்தில் கடல் வழியாகவும், தரை வழியாகவும் வடநாட்டோடும், கீழை நாடுகளோடும் மேலைநாடுகளோடும் தொடர்புகொண்டு வாழும் வாய்ப்புப் பெற்றனர். 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்று அவ்வையார் கூறுவது இந்த வரலாற்றில் கண்ட உண்மை. இப்படிப் பல இனங்களோடு கூடிக் குலாவ நேர்ந்ததால் மனித இனத்தின் பொதுமை அறத்தைக் கையாள வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு ஏற்பட்டது. மனிதரை மனிதர் என்று காணும் கண்ணைப் பெற்றார்கள்.

தமிழர் வரலாறு முழுவதிலும் இதனைக் காணலாம். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற சங்ககாலப் புலவர் பாடுகின்றார். ''யாதானும் நாடாமால் ஊராமால்'' என்கிறார் வள்ளுவர். சமய உலகிலும் ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்று திருமூலர் அதற்குப் பின்வந்த காலத்தில் பாடுகிறார். பல்லவர் காலத்தில் ''அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்'' என்று சுந்தரர் பாடுகிறார். பிற்காலச் சோழர் காலத்தில் இதற்கு உரை எழுதவந்த சேக்கிழார் ''சுந்தரர், தம் காலத்தில் மட்டு மன்றி, தாம் வாழ்ந்த இடத்தில் பிறந்த அடியார்களை மட்டு மன்றி அவர்க்கு முன்னும் பின்னும் எக்காலத்திலும் எல்லா உலகங்களிலும் பிறந்து, அப்பாலுக்கு அப்பாலான பரம் பொருளை நம்பி வாழ்கின்றவர்களை எல்லாம் அடியார்கள் எனக் கூறிக் காலத்தையும் இடத்தையும் தாண்டிய அன்பர் கூட்டத்தைக் கண்டு வணங்குகிறார்'' என்று பொருள் கூறியுள்ளார். விஜய நகர அரசர்கள் காலத்தில் வாழ்ந்த அருணகிரியார் 'உலகு எங்கும் மேவிய தேவலாயம் தோறும் கோயில்கொண்ட பெருமாளே' என்று பாடுகிறார். பின்னர் எழுந்த நாயக்கர் அரசாட்சியில் வாழ்ந்த தாயு மானவர் 'அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமான' பொதுமை நிலையினையே பாடுகின்றார். சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்கரும் இந்தப் பொதுமை அறத்தினைச் 'சமரச சன்மார்க்கம்' என்று வற்புறுத்துகின்றார். இந்த நூற்றாண்டில் திரு.வி.க. இதனை ''பொதுமை அறம்''

என்ற பெயர் கொண்டே வற்புறுத்தியுள்ளார். பாரதியார் 'காக்கை குருவி எங்கள் சாதி' என்று குழந்தைகளுக்கும் பாடிப் பேரின்ப நிலையைப் பொதுமை அறமாகக் குழந்தைகளோடு பாடித் துள்ளிக் குதிக்கின்றார்.

வரலாற்றுக் காலப் பிரிவுகள்தோறும் தமிழ்நாட்டுப் பெரியோர்கள் இப்படிப் பொதுமை அறத்தினை வற்புறுத்தியுள்ளார்கள். இருந்தாலும் தமிழ்நாட்டில் சமயப்பூசல்களும், கொள்கைப் போராட்டங்களும் எழாமல் இருந்துவிடவில்லை. சமணர்கள் கழுவேறியது உண்மை என்று கொள்வதற்கு இல்லையானாலும் அதனைச் சமணர்களைக் கழுவு ஏற்றிய காட்சியாகக் கண்டு அதில் எவ்வளவு இன்பம்கொண்டு, தம் கவித்திறனை எல்லாம் காட்டிச் சில பல பாவாணர்கள் பாடியுள்ளார்கள்? எம்மதமும் கடவுள் இயற்றியதே என்று கொள்வோரும் தம்முடைய மதம் மேற்படியில் இருப்பதாகவும் பிற மதங்கள் கீழ்ப்படியில் இருப்பதாகவும் கூறி மகிழ்கின்றார்கள் இராம கிருஷ்ணரைப் போலப் பலர் எல்லா மதங்களும் அனுபவ நிலையில் ஒன்று என்ற உண்மையை வற்புறுத்துவது இல்லை. பெரும்பான்மையும் மதவாதிகளிடத்தே போராட்டமும் பெருஞ் செருக்குமே காண்கிறோம்.

தமிழ்நாடு உரிமையை இழந்து வறுமையில் சுருங்கிய போது ஆணவத்திற்கு இடம் இல்லாமல் போய்விட்டது. ஆனால் ஆணவம் சாகுமா? அறிவு நிலையில் புகுந்தவர்கள் தம்தம் மதமே சிறந்தது என்று கூறி மகிழும் நிலையையே இந்த ஆணவம் தன் புதிய அவதார வடிவமாகப் பெற்றது. இத்தகைய காலமே 17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் விளங்கிய காலம் ஆகும்.

அந்தக் காலங்களில் வீர சைவப் பெருமக்கள் கன்னட நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்தார்கள். பழைய மடங்கள் மறையும் நிலையில் இருந்தவற்றை இவர்கள் உயிர்ப்பித்தார்கள். புதிய மடங்களையும் தோற்றுவித்தார்கள். ஆனால் பழைய மடங்களை உயிர்ப்பிக்கும்போது தான் ஒரு சிறந்த உண்மை தோன்ற இடம் ஏற்பட்டது.

பழைய மடங்களின் கொள்கைகளோடு தங்கள் கொள்கையையும் உறவாடவிட்டு ஒற்றுமை காணும் கட்டாயம் ஏற்பட்டது. வீர சைவப் பெருமக்கள் இதன் காரணமாகக் கன்னட நாட்டில் போலன்றித் தமிழ்நாட்டில் பொதுமை நெறியை வளர்க்கும் வாய்ப்புப் பெற்றூர்கள்.

இந்தப் புதிய நிலையின் பயனுகச் சிறந்ததொரு நூல் தமிழ்நாட்டில் தோன்றியது. ''செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள செங்கீரை ஆடி அருளே'' என்று ஒரு பெரியார் பாடிய காலம் அது, ''விருந்தையின் எலும்பைச் சம்பந்தரிடம் கொடுத்துப் பழையபடி தான் விரும்பிய பெண்ணுக்கிக் கொள்ளத் திருமாலுக்குத் தெரியவில்லையே'' என்று எள்ளி நகையாடிப் பாடுகின்றூர் சிவப்பிரகாச சுவாமிகள். ஆனுல் அப்படிப்பட்டவரின் தங்கையை மணந்த சாந்தலிங்கர் இந்தப் போராட்ட விரோத நெறியை மறந்து புதிய அவிரோத நெறியில் செல்வதுதான் இங்குப் புதுமை. விரோத நிலையைக் கண்டு மனம் புழுங்கியவர் அவிரோத நெறியை உலகிற்குக் காட்டுகிறூர். தாம் அனுபவித்த நிலை அது என்பது அவர் பாடிய பாடல்களினின்றும் தமக்கு விளங்குகிறது. பெண் குழந்தைகள் குதித்து விளையாடிப் பாடும் உந்திப் பாடல் என்ற நாடோடிப் பாடலின் சந்தத்தில் இவர் பாடுகிறூர். தம்முடைய அனுபவம் இவ்வாறு கற்றவர்களுக்கு மட்டுமன்றிப் பெண் குழந்தைகளுக்கும்கூட விளங்கவேண்டும் என்ற எண்ணம் இப்படி வெளியாகிறது. மாணிக்கவாசகர் முதலான பெரியோர்களும் இப்படி உந்திப்பாடல்களை இதற்காகவே பாடி உள்ளார்கள். எனவே இதுவும் பழையதொரு தமிழ் நெறியே ஆகும்.

சாந்தலிங்கர் பாடிய நூலின் பெயர் 'அவிரோத உந்தியார்' என்பது ஆகும். விரோதம் வளர்ந்ததை எண்ணிய 'அவிரோதம்' என்ற தலைப்பை வற்புறுத்துகிறூர். அவிரோதம் என்பது ஒரு எதிர்மறை நெறி அல்ல. ஆன்மநேய ஒருமைப்பாடாக விளங்கும் சமரச சன்மார்க்கம் என்ற உடன்பாட்டு நிலைதான் அது. ஆனுல் விரோதம்

தலைவிரித்தாடிய நிலையில் அந்த உடன்பாட்டு நிலையை அவிரோதம் என்ற எதிர்மறைச் சொற்றொடராய்ச் சாந்த லிங்கர் விளக்க வேண்டியதாயிற்று.

நாடோடிப் பாடல்போல் அமைந்த இந்த அழகிய நூலின் ஆழத்தை எல்லாம் விளக்கியவர் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் ஆவார்கள். இவரும் ஒரு வீர சைவரே, ஆனால் பொதுமை நெறியில் தோய்ந்து பொதுமை அறத்தின் விளக்கமாக வாழ்ந்தார். பொதுமக்களிடத்தே இருக்கின்ற அன்பு காரணமாக மிக மிக எளிய நடையில் எழுதியும் பாடியும் தொண்டு ஆற்றிவந்தார். இவருடைய நூல்களில் எல்லாம் இந்தப் பொதுமை நெறி விளங்கக் காண்போம். பல மதவாதிகளின் கருத்தை எல்லாம் நுட்பமாக ஆராய்ந்து அறிந்தவர் இவர். அவற்றை எல்லாம் எடுத்துக் காட்டி அவற்றினிடையே வேற்றுமை யின்மையே அனுபவத்தால் அறிந்த இந்த அறிஞர் பெருமான், அவிரோத உத்தியார்க்குத் தம்முடைய மத அறிவும், அவிரோத அனுபவமும் கொண்டு சிறந்ததொரு தெளிவுரை விரிவாக எழுதியுள்ளார்கள்.

இந்த 'அவிரோத உந்தியாரின்' சிறப்பினை மேலும் எடுத்துக் கூறவேண்டுவதில்லை. இதனை உலகப் பொதுச் சொத்தாக ஆக்குதல் வேண்டும். சிதம்பர சுவாமிகளின் உரைக் குறிப்புக்களோடும், இந்நாளில் உலகு எங்கும் வழங்கும் பல மதங்களின் குறிப்புக்களோடும் அவிரோத உந்தியாருக்குப் புதிய விளக்கம் தருதல் வேண்டும். இப்போது விவேகானந்தரது நூற்றாண்டு விழாவை உலகம் கொண்டாடி வருகிறது. இராமகிருஷ்ணரின் பொதுமை நெறி இவ்வாறு உலகிற்கு விளங்கி வருகிறது. உலகம் ஒரு குடும்பம் என்று வாழ விரும்புகின்ற இந்தக் காலத்தில் தமிழ் நாட்டார் கண்டு வந்த பொதுமை நெறியை உலகத் திற்கு விளக்கும் கடமை தமிழனது தலையாய கடமை ஆகும். இந்தத் தொண்டில் சாந்தலிங்கர் வழிவந்து அவர் பெயரால் விளங்கும் சாந்தலிங்க மடத்திற்கும் பெரும் பங்கு உண்டு. அவிரோத உத்தியாரை நம் நாட்டில் பல

மொழிகளில் மொழி பெயர்த்தும் விளக்கியும் வருவதோடு, நாம் முன்கூறியபடி உலகப் பொதுச் சொத்தாகவும் உலகிற்கே தந்து வான்புகழ் கொள்ளுதல் வேண்டும்.

# தமிழர் திருநாள்

தமிழர்களுடைய பண்பாட்டின் அடையாளமாகத் தமிழர் திருநாள் விளங்குகிறது. ''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்பது பழமொழி. தமிழ்த் திருநாள் ஓர் உழவுத் திருநாள்; உழவன் திருநாள். மனிதனின் சிறப்பியல்பாகிய தொழிலின் திருநாள். பிறவுயிர்கள் உழைக்கலாம்; ஆனால் வருகிற ஆண்டிற்காக இந்த ஆண்டே வயிற்றைச் கட்டி வாயைக் கட்டி முன்கூட்டித் திட்டமிட்டுத் தன் கையால் மட்டுமின்றிக் கைகொண்டு செய்த கருவிகளையும் கொண்டு தொழில் செய்து முன்னேறுகின்ற பெருமை மனிதனுடையதே ஆம். பணம் இருக்கிறதென்று உழைக்காமல் வாழ்பவர்கள் மனிதப் பிறவியைச் சேர்ந்தவர்களல்லர். எனவே தொழிலின் வளத்தையெல்லாம் அனுபவிக்கின்ற இந்தத் திருநாள் ''மானுடம் வென்றதம்மா'' என்று பாடும் மனிதத் தன்மையின் திருநாளும் ஆகும்.

மனிதனுடைய மற்றொரு சிறப்பு இத்தகைய மனிதத் தன்மையைக் காட்டி, கூடி உழைத்து, கூடி வாழ்ந்து, கூடி அனுபவித்தலே ஆகும். கூட்டுறவு நிலைதான் மனிதனின் பெருமை. இந்தப் பொங்கல் திருநாளன்று மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் மனிதனோடு உழைத்த கன்று காலிகளுக்கும் இந்தக் கூட்டுறவு வாழ்வையொட்டித் திருவிழாக் கொண்டாடும் திருநாளும் ஆகும் இது. எனவே இது தலைசிறந்த கூட்டுறவுத் திருநாள் எனலாம்.

''எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் இனம்'' என்று பாடுகின்றார் பாரதி. இந்தத் திருவிழாவிலே ஆண்,

பெண்,குழந்தைகள், கிழவர்கள், முதலாளிகள்,தொழிலாளி கள், கற்றவர், கல்லாதவர் என்ற வேற்றுமை இல்லாமல் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து மதபேதம் ஒன்றும் இன்றி, தமிழின் பெயரால் தமிழர்கள் தங்கள் இலக்கியம் தோன்றிய நாளாக இந்தத் திருநாளைக் கொண்டாடி வருகின்றார்கள். ஒரு சமரச, சமதர்ம, சமநிலைத் திருவிழா இது. இங்கே சாதி பேதம் இல்லை; மதபேதம் இல்லை.

பல நாடுகளிலே வாழ்கின்ற தமிழர்கள் எல்லாம் தமிழ்ப் பண்பாட்டின் குறிக்கோளை மட்டும் எண்ணி, இலங்கையில் இருந்தாலும், பர்மாவில் இருந்தாலும், மலேயாவில் இருந்தாலும், தென்னாப்பிரிக்காவில் இருந் தாலும், பிஜித்தீவில் இருந்தாலும், தாங்கள் வாழும் நாட்டின் உரிமையையும், கடமையையும் ஒரு சிறிதும் நழுவ விடாமல் உலகம் எல்லாம் பரவி இருந்து கொண்டாடுகின்ற ஒரு லட்சியத் திருவிழா இது. அங்கங்கே வாழ்கின்ற தமிழர்கள் அடிப்படை மனிதத் தன்மையின் பெருமையை எல்லாம் வற்புறுத்தி, ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற தமிழ்க் கொள்கையை அந்தந்த நாட்டிலுள்ளவரும் ஒப்புக்கொண்டு ஒன்று சேர்ந்து உலகம் முன்னேற வேண்டித் தமிழர்களோடு தாமும் சேர்ந்து கொண்டாடி இன்புறு வதற்கு வழிவகை செய்யும் உலகப் பெருந் திருநாளும் ஆகும் இது.

இதனைப் பொங்கல் என்று சொல்லும்போது உள்ளம் பொங்குகின்ற மகிழ்ச்சித் திருநாள் என்ற குறிப்பிருந் தாலும், இந்து சமயச் சடங்கையும் பொங்கல் என்பது குறிக்கும். ஆதலால் அத்தகைய குறிப்பொன்றும் தோன்றாத படித் தமிழ்த் திருநாள் என்று இதனைப் பெயரிட்டழைத்துக் கொண்டாடும்போதுதான் இங்கே கூறிய அத்தனை நுட்ப மான கருத்துக்களும் தோன்றுகின்றன. தமிழ் என்றவுடன் மனிதனுக்கு வேறாக ஏதோவொன்றை நினைப் துபோல் ஓர் மயக்கம் உண்டாவதால் அதில் நாம் செய்ய வேண்டிய சிறந்ததொண்டு இன்னதென நினைக்காமலே போய்விடுகிறது தமிழர் திருநாள் என இதனைப் பெயரிட்டழைக்கும்போது

இதனைக் கொண்டாடுவதும் இந்தக் கொண்டாட்டத்தின் வழியே தமிழ்ப் பண்பாட்டின் உயரிய குறிக்கோள்களின் விளக்கமாக உலக ஒற்றுமைக்குப் பாடுபடுவதும் தமிழன் ஒவ்வொருவனுடைய கடமை என்பது தெளிவாக விளங்கும். தமிழர்கள் பிறரோடு கூடிக்குலாவி, பிறருடைய பண்பாட்டுக்கு இடையூறில்லாமல் தங்கள் குறிக்கோளை ஒட்டி வாழ்ந்து காட்டி அவர்களோடெல்லாம் இணைந்து நிற்கும் நாளாதலால் தமிழர் என்ற சொல் இங்கே தமிழர் தமிழரல்லாதார் என்ற வேற்றுமையை நினைப்பூட்டுவதற்கு வழியில்லை. இந்த நிலைமையில் தமிழர் திருநாள் சிங்கப்பூரிலேயும், மலேயாவிலும் பல ஆண்டுகளாக நடந்து வருவதைத் தமிழர்கள் எல்லோரும் அறிவார்கள். 'தமிழ் முரசு' தமிழர் முரசாகப் பறையறைந்து இதனைக் கீழைத் தீவுகளில் நிலைநாட்டியுள்ளது.

இந்தத் தமிழ் முரசின் ஆசிரியர் திரு கோ. சாரங்கபாணி அவர்களின் தலைமையில் நடைபெறும் தமிழர் பிரதிநிதித்துவ சபை பழமைபோல இந்தத் தமிழர் திருநாளைக் கொண்டாடுவதற்கு இரண்டு சொற்பொழிவாளர்களை அழைத்துள்ளது.

திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் இவ்விருவரில் ஒருவர். சென்னை உயர்நீதிபதி கைலாசம் அவர்களின் மனைவியாரான இவரைத் தமிழ்நாடு நன்கறியும். தேசீய கவி பாரதியாரைப்போலப் பாட்டுத்தான் பாடுகின்றாரோ என்று மயங்கும்படியாகத் தேனினும் இனிய செந்தமிழ் மொழியில் பேசி மகிழ்விக்கும் ஆற்றல் படைத்தவர்கள். இந்தத் தேன் மழையை அங்கும் பொழிவார்கள். குமாரி சோ. பாகீரதி அவர்கள் மற்றையவர். அவர்கள் தமிழில் எம்.ஏ. பட்டம் பெற்று மேலே தமிழ்க் கல்வெட்டுக்களில் விளங்கும் தமிழை ஆராய்ந்து ஆராய்ச்சிப் பட்டமும் பெற்றவர்கள். அஞ்சாது பேசும் சொல்லாற்றல் பெற்றவர்கள். திருக்குற்றாலத்தில் தமிழ்ப் பெண்களுக்கென்று நடைபெறும் பராசக்திக் கல்லூரியைத் தலைமை பூண்டு நடத்தும் பராசக்தியே இவர்கள் ஆவார்கள். இவர்கள் இருவர் வழியாக உலக ஒற்றுமையை நிலைநாட்டும் பழந்தமிழ்ப் பண்பாடு கீழைக் கடலில் எல்லாம் வெல்லமிட்டு மக்கள் மனத்தில் மகிழ்ச்சி பொங்கப் பெரு விருந்தளிக்கும் என்பதில் ஐயம் இல்லை.

# கோயில்

**கோ** என்பதற்கு அரசன் என்பது பொருள். கோயில் என்பது அரசனது இல்லம் அல்லது அரண்மனை என்ற பொருளைத்தரும். எனவே, முதலில் அரண்மனையைக் குறித்த இச்சொற்றொடர் பின்னர் உலகத்தார் அண்டத்திற்கே அரசன் எனக்கருதிய கடவுளின் ஆலயத்தைக் குறிக்கவந்தது. பிற் கால இலக்கண விதிப்படி ஓ என்ற உயிரெழுத்தின் பின் உயிரெழுத்து வருமானல் வகரமே உடம்படு மெய்யாகவரும். இதற்கேற்பக் கோவில் என்ற வடிவமும் எழுந்தது. ஆனல் முற்காலத்தில் முதல்வரும் உயிரின இயல்பை ஒட்டி உடம்படு மெய் வராது. இரண்டாவதாக வரும் உயிரெழுத்தின் இயல்பை ஒட்டி உடம்படுமெய் வந்தது. அப்போது சொல் லில் இரண்டாவது வந்த இ என்ற உயிரை ஒட்டி யகரமே உடன்படு மெய்யாக அமைந்தது. எனவே, கோயில் என்றது மிகப் பழைய சொல்லின் வடிவமாகும்.

கோயில் என்பது அரண்மனை என்ற பொருளில் சிலப்பதி கார காலத்திலும் வழங்கியது. பதிற்றுப்பத்தின் இறுதிப் பதிகமும் பட்டத்தரசியைக் கோயிலாள் என்றே வழங்கு கிறது. பரிபாடலின் இரண்டாவது செய்யுளில் வரும் கோயில் என்ற சொல்லுக்கு ஆலயம் என்று உரையாசிரியர் பொருள் கொண்டிருந்தாலும் அரண்மனை அகநகராக அமைவது வழக்கமா லின் அங்கேயும் கோயில் என்பதற்கு அரண்மனை என்றே பொருள் கொள்வது பொருந்தும். மதுரையின் நடு விடத்தில் நிழல் ஒருபுறமும் வீழாத நிலையில் நடுப்பகலில் கணக்கிட்டு அரண்மனை கட்டினர்கள் என்று நெடுநல் வாடையிலிருந்து அறிகிறோம். அங்கே அமைப்பு முறையை

விளக்குகிற வகையில் இருந்து இவ்வாறு பொருள் கொள்வது பொருத்தமாகிறது.

ஆனால் விரைவில் கோயில் என்பது ஆலயத்திற்குப் பெயராக வழங்க வந்தது. தேவார காலத்திற்குள் பெருங் கோயில், இளங்கோயில், முதலிய கோயில்வகைகளும், ஆலய வகைகளைக் குறிப்பனவாக வழங்கத் தொடங்கிவிட்டன. நம்மாழ்வார் ஆண்டவன் நமக்காக ஆலயங்களில் கோயில் கொள்வதைப் பாடுகிறார். கோயில் என்றாலே சைவர்க்குச் சிதம்பரம் என்பதும் வைணவர்க்குத் திருவரங்கம் என்பதும் நினைவுக்கு வரலாயின பெரியாழ்வார் ''கோயிற் பிள்ளாய் இங்கே போதராயே'' என்று பாடுகிறார். ஸ்ரீ கோயில் என்று ஆலயங்களையும், ஸ்ரீகோயில் வாரியம் என்பது அதைப்புறங் காத்து வரும் செயற்குழுவினையும் பல்லவர் காலத்தில் இருந்தே கல்வெட்டுக்கள் பேசலாயின.

அரசர்கள் பெரிய ஆலயங்களைத் தங்களுடைய கோயில் களைப் போலவே அகநகரும் புறநகரும் அகழியும் மதிலுமாக எழுப்பி வந்தார்கள். அரசனைக் கடவுளின் பரதிநிதியாகக் கொண்டு ''திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே'' என்று பேசுகின்ற நிலை பரவியபோது பிரதி நிதியின் அரண்மனைக்கு மேலாக அல்லவா உண்மைத் தலை வனின் கோயில் அமையவேண்டும்? கோச்செங்கணான் சிவ பெருமானுக்கு 70 பெருங்கோயில்கள் (மாடக்கோயில்) எழுப்பினான் என்று பாடுகிறார் திருமங்கை மன்னன்.

கோட்டை என்பதன் மற்றொரு வடிவமே கோட்டம் எனலாம். ஐ என்ற சொல்லுறுப்பும், அம் என்ற சொல் லுறுப்பும் ஈற்றில் மாறுடிவரும். அதனால் கோயில் என்ற வழக்குக்கு முன் ஆலயத்தைக் கோட்டம் என்று வழங்கும் வழக்கம் மிகப் பழையது எனலாம். ''கோழிச் சேவற்கொடி யோன் கோட்டம்'' முதலாகப் பாடுகின்றார் தம்முடைய சிலப்பதிகாரத்தில் இளங்கோ. அதற்கு முன்னெல்லாம் ஆலயத்திற்கு அம்பலம் என்பதே பெயர். இன்றும் கேரளத் தில் கோயில்களுக்கு அம்பலம் என்றே பெயர் வழங்குகிறது.

''தில்லைச் சிற்றம்பலம்'' என்ற பெயரில் அந்த அம்பலம் இன்றும் நிலைபெற்றிருக்கக் காண்கிறோம். அம்பலத்திற்குப் பொது இல் என்பது மற்றொரு பெயர். இதுவே பொதுயில் என்று முற்காலத்தில் வழங்கியிருத்தல் வேண்டும். பின்னர் பொதியில் என்ற வடிவத்தில் வழங்கி வந்தது. பொதியில் என்பதற்கு எல்லோரும் பொதுவாகக் கூடுமிடம் என்பது பொருளானாலும் அவ்வாறுகூடி வழிபடுகிற ஆலயத்தையே அது குறித்தது. தனியே வீட்டில் வழிபடுகிறமுறை ஒன்று; எல்லோருமாகக் கூடி வழிபடுகிற முறை இரண்டு.

இந்த வழிபாடு தீ வளர்த்துச் செய்கின்ற வேள்வி வழிபாட்டினும் வேறானது. பலி என்ற சொல் வந்தாலும், பூ முதலியன தூவி வழிபடுவதையே இங்கே காண்கிறோம். எனவே, பூப்பலி என்ற வழக்கும் உண்டு. மதுரைக் காஞ்சி,

''நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போ டைந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவனாக
மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபின் உயிர்பலி கொடுமார்
அந்தி விழவிற் றூரியங் கறங்க''

என்று பாடுகிறது. பூவினைக் கொண்டு செய்கின்ற வழிபாடுதான் (பூ+செய்)பூஜை என வடமொழியில் மாறி விட்டதெனக் கூறுவோரும் உண்டு. பூவினைச் சூடி அழகு செய்வதோடு நில்லாமல் மக்களுக்குச் செய்வது போலவே கடவுளையும் அன்போடு பாராட்டி வழிபடுகின்ற வழக்கம் அன்புநெறியாகத் தழைத்தோங்கியது. கடவுள் உலகப் பெருந் தலைவராதலின் நீராட்டல், உடையுடுத்தல், உண்டாடல் முதலியவற்றோடு நில்லாமல் குதிரையேற்றம், யானை ஏற்றம், கவரி வீசுதல் முதலிய அரச வழிபாடுகளை எல்லாம் செய்வதும் வழிபாட்டு முறையில் அடங்கிற்று. இவ்வாறு

அரச வழிபாடு செய்துவரும்போது ஆலயமும் அரண்மனே போல அமையவேண்டுமல்லவா? அதற்கேற்ப ஆலயங்கள் கோயில்கள் ஆயின. பல்லவர் காலத்தும், சோழர் காலத்தும் இவை படிப்படியாகச் சுற்றளவிலும் உயரத்திலும் வளர்ந்து அரண்மனேயைவிடச் சிறந்தன ஆயின. அரண்மனேகள் எல்லாம் செங்கல்லால் அமைய ஆலயங்கள் கற்றளிகளாக ஓங்கின. அதனுல் கடவுளுக்குக் "கல்வீட்டுக்காரன்" என்ற பெயர் பொதுமக்களிடத்தில் வழங்குகிறது. அண்டத்திற் குள்ளே ஆண்டவன் விளங்குகின்ற உண்மையைக் காட்டு வனவாகவும் கோயில்களின் அமைப்புக்களும் கோபுரங்களும் எழுந்தன. திருவிழாக்களும் அரசரது ஊர்வலத்தையும் மிஞ்சிப்போயின. இவற்றை எல்லாம் விளக்குவதே ஆகமங்க ளாம். இவ்வாறு வளர்த்த கோயில்களின் ஒப்பற்ற நிலேயைக் கீழைக்கடல் தீவுகளில் காணலாம். "அங்கோர்வாட்" "போராபூதூர்" முதலிய இடங்களில் விளங்கும் கோயில்கள் அணுயுகத்தில் வாழும் உள்ளத்தையும் கவர்ந்து ஓவென வாயைப் பிளந்து நிற்கச் செய்கின்றன.

இவ்வாறு வேத வழிபாட்டினின்றும், ஆகம வழிபாடு வேருகி வளர்ந்தாலும் இந்திய நாட்டின் பண்பாட்டிற்கேற்ப ஒருமைப்பாடு தோன்றியது. வேள்வி, ஆகம வழிபாட்டில் புகுந்தது. ஆனுல் உயிர்க்கொலே இல்லாத வேள்வி இது. வேதத்தைப் பாடுவதற்கும், ஆகமத்தில் இடம் ஏற்பட்டது. அதனே அறிந்து கொள்ளக்கூடியவர்கள் சிலரே ஆதலால் வேதம் தமிழ் செய்த மாறனும், மறைஞான முனிவராம் திருஞான சம்பந்தரும் தோன்றி மேலும் ஓர் ஒற்றுமையை நிலேநாட்டிக் கடவுளன்பை எல்லோரும் பேசும் தமிழில் வளர்த்தார்கள்.

# கோயிற்கலை

பலவகையான விஞ்ஞான முன்னேற்றத்தின் பயனாக அமையும் புறக்கோலமே நாகரிகம். இந்த நாகரிகத்தில் பழுத்துக் கனிந்து மக்களின் வாழ்க்கை அனுபவமாக விளங்குவதே பண்பாடு. இந்தப் பண்பாட்டின் இயல்பு அதற்கேற்ற கலைகளாக வளர்கின்றனன்றவற்றின் போக்கிலே தோன்றும்.

கலைகள் ஒரு சிலபோது உலகில் உள்ளவற்றை உள்ள படியே விளக்குவதையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. கிரேக்கர்கள் வடித்த அப்பாலோவின் ஆண் வடிவமும் வீனசின் பெண் வடிவமும் இந்த வகையில் மிகமிகச் சிறந்தன. உள்ளதன் சாயலாகவே கலைப்பொருளை அமைக்கும் இதனைச் சாயல் கலை என்று வழங்கலாம்.

ஜப்பானியருடைய கலைகளைப் பார்த்தால் அவற்றில் உள்ள கோடுகளிலும், வளைவுகளிலும், நிறங்களிலும்நம்மனம் தன்னை மறந்து தேங்கி நிற்கிறது. அங்கே ஒன்றன் சாயலைக் காண்பது என்பது இல்லை. ஏதோ ஓர் உட்பொருளைக் காட்டும் முயற்சியும் இல்லை. கோடுகளோ நிறங்களோ அமைந்த அமைப்பிலோ அல்லது கோலத்திலோ அழகு தோன்றுகிறது. எனவே இத்தகைய கலையைக் கோலக்கலை எனலாம்.

நம் தமிழ் நாட்டில் நடராஜரது திருமேனியைப் பார்க்கின்றோம். அது ஏதோ ஒன்றைப் பார்த்து அமைத்தது என்று சொல்வதற்கில்லை. அங்குள்ள அழகு அங்கே தோன்றும் கோடுகளுடைய அமைப்பில் உள்ளதாகத் தோன்றவில்லை. அந்தக் கோடுகளை மட்டும் பார்ப்பது என்றால் ''கைகளோ முறிபடும் கைகள்'' என்று சிவப்பிரகாசர் பாடுவது போலத்

தான் பாடவேண்டும். ஆனால் அதைப்பார்த்தவுடன் அந்தப் புறக்கோலத்தையும் ஊடுவிப் பாய்ந்து நமது உள்ளம் ஓர் அழகிய கருத்தைக் கண்டு ஈடுபடுகிறது. அதைப் பார்த்த வுடனே ஆண்டவனின் பேரின்ப வடிவம் நம் மனத்தில் பதிந்து விடுகிறது. இந்த உலகமும் நாமும் இயங்க அவன் உள்ளீடாக இயங்குகிற இன்பக்கூத்து நம்முடைய இருதயக் குகையிலும் நம்முடைய இரத்தத் துடிப்பிலும் விளங்குவது போலத் தோன்றுகிறது. தீமையும், பொய்யும், அலங்கோல மும் அழிந்து ஒழிய, அதனை வென்ற வெற்றியில் உண்மை யும், நன்மையும், அழகும் கூத்தாடுவது போலத் தோன்று கின்றன. அவன் கையிலிருக்கும் உடுக்கையில் இருந்து ஒலி அலைகள் சுற்றும் பரவ வளர்வதையும் உள்ளூர உணர்கிறோம். இப்படி ஆண்டவனது ஐந்து தொழில்களும் நம் மனக்கண் எதிரே தோன்றுகின்றன. இப்படி எத்தனை எத்தனையோ ஆழ்ந்த கருத்துக்கள் அங்கே ஆழ்ந்து ஆழ்ந்து அழகாகத் தோன்றுகின்றன. இதனைத் தொனி என்றும், இறைச்சி என்றும் வெளிப்படையாக அல்லது குறிப்பாகத்தோன்றுவது என்றும் இந்த அழகை விளக்குவார்கள். எனவே இதனைக் குறிப்புக்கலை என வழங்கலாம். இந்தியப் பண்பாட்டின் சிறப்பியல்பாக இந்தக் குறிப்புக்கலை விளங்குகிறது.

நம்முடைய இலக்கியங்களிலும் குறிப்புப்பொருள் உயிர் நிலையாக விளங்குவதை அறிவோம். ''இறைவனைச் சோர என் உள்ளங்கவர் கள்வன்'' என்று ஞானசம்பந்தர் பாடினால் காதலால் வாடுகின்ற பெண்ணின் வடிவம் முதலில் தோன்று கின்றது. ஆனால் அதனையும் தாண்டி நம் மனக்கண் சென்று ஆண்டவனை எண்ணி எண்ணி உருகுகின்ற ஆன்மாவின் இயல்பை உணர்கிறது. அதனையும் ஊடுருவிச்சென்று அன்பே சிவமான நிலையையும் அன்பே சிவம் என்ற உண்மையையும் கண்டுகளிக்கின்றது. நம்முடைய குறவஞ்சி நாடகங்களிலும் இவ்வாறு பலபல ஆழ்ந்த நிலைகளாகக் குறிப்புப் பொருள் விளங்கிக்கொண்டே வந்து முடிவில் பேரின்பப் பொருளாக ஒளிவிடக் காண்கின்றோம். நம்முடைய அகப்பாடல்கள் அத்தனையும் இப்படிப்பட்டன என்று சொல்லவேண்டுவ

தில்லை. வெளிப்படையான பொருள், அதனுள்ளே விளங்கும் உள்ளுறைப் பொருள், அதற்குள்ளே ஒன்றன்கீழ் ஒன்ருக அமைந்து விளங்கும் பலநிலை இறைச்சிப் பொருள்கள் இவை அத்தனையும் அன்பு என்ற ஓர் அடிப்படையில் முடிகின்ற சுவை நிறைந்த காட்சி—இப்படியாக உள்ளீடு பொருளாக விளங்குவதாலேதான் அகம் என்று பெயர் பெற்றன.

ஓவியக்கலை நம்முடைய விக்கிரகக் கலையையேபோன்றது. நம்முடைய சிற்பக்கலையும், குறிப்புக் கலையாகத்தான் விளங்குகிறது. நம்முடைய கட்டடங்களிற் சிறந்து விளங்கு வது கோயிலேயாம். கோயில்களைப் பார்க்கும்போது உயரத் தோன்றும் கோபுரமும், அதனைச் சுற்றி அமைந்த பல பிரகா ரங்களும் உயர்ந்து ஓங்கும். ஆண்டவனை நடுவிடமாகக் கொண்டு இயங்கி வருகிற அண்டத்தின் ஒருமைப்பாட்டையே விளக்குவதாகக் காண்கிருேம். அனைத்தும் முடிவில் (கலசத் தில்) பொன்னொளியாக ஒரு முனையில் ஒளிர்வதும் இந்தப் பொருளையே வற்புறுத்துகின்றது. அங்கே நடைபெறும் சடங்குகளும் இந்த ஆழ்ந்த பொருளை விளக்கும் மந்திர தந் திரக் கூத்துக்கள் எனலாம்.

எனவே நம்முடைய இந்தியப் பண்பாட்டை இந்தக் கண்கொண்டே ஆராயவேண்டும். அது ஒரு வகையில் கோயிற் பண்பாடே எனலாம்.

# சமய வாழ்வு

அநபாயன் போரில் வெற்றிகண்ட வீரசோழன் அல்லன்; வெற்றிகண்ட நாட்டில் பண்பாட்டை நிலைநிறுத்திய சோழர் களில் சிறந்தவன் இவன். சேக்கிழாரை மந்திரியாகப் பெற்ற நல்ல பேறு இவனுக்கு உண்டு. அந்தப் பண்பாடு சமய வாழ் வாகத் தமிழகத்தை வாழவைத்தது. கோயில்களை வளர்த் தான் என்பதல்ல இவன் புகழ். அது அல்ல சேக்கிழாரின் புகழுங்கூட. சேக்கிழார் தொண்டர் புராணத்தை எழுதினார். அந்தப் புராணந்தான் சமயவாழ்வு என்ன என்பதை விளக்கு கிறது. குழந்தைகளும்கூடத் தெரிந்துகொண்டு பின்பற்றும் படியாக விளங்குகிறது. காயில்தான் அந்தக் காலத்துச் சமுதாய உயிர்நிலை. பலவகை அறங்கள், மருத்துவ நிலையம், கல்வி நிலையம், ஊராட்சி, கொடைப் பத்திரம் முதலியவற் றைப் பதிவு செய்யும் ஆவணக் களரி, ஞாய மன்றம், கலை மன் றம், தேர்தல்கூடம் இப்படி எல்லாமாகக் கோயில்கள் அந்தக் காலத்தில் விளங்கின. எனவே சமய வாழ்வு அந்தக் காலத் தில் சமுதாய வாழ்வாக விளங்கியது. திருநீறு பூசினால் மட்டும் போதுமா? ஏனாதி நாயனாரையும் மெய்ப்பொருள் நாயனாரை யும் கொன்றவர்கள் திருநீறு பூசியவர்கள்தாமே? எனவே சமய வாழ்வு என்றால் மக்களிடத்தெல்லாம் கடவுளைக் காணும் சிறந்த மனம் படைத்த வாழ்வேயாகும். எங்கும் இருக்கிறான் இறைவன் என்பதைப் பேச்சிலே மட்டுமல்லாமல் வாழ்விலும் உணர்ந்து வாழ்கிறவர்களுக்கு மட்டுமே சமய வாழ்வு கிட்டும். இந்த வாழ்வுடையவர்கள் யாரானாலும் அவர்கட்குச் சமய வாழ்வு கிட்டும். அவர்கட்குக் கல்வியும் வேண்டாம்; செல்வமும் வேண்டாம். அந்த மனமிருந்தால் பட்டினி கிடந்தோ உயிரைக் கொடுத்தோ சமுதாயத்தை

வாழவைக்க முடியும். இப்படி மக்களைக் கண்டதும் கடவுளைக் கண்டதாக நெஞ்சு நிமிர்ந்து நிற்பவர்களையே கசிந்த தொண்டர்கள் என்று சித்தியார் பாடுகிறது. ''கூடும் அன்பினுல் கும்பிடுதலேயன்றி வீடும் வேண்டா விறலினர்'' என்று சேக்கிழார் பாடுவது இவர்களைத்தான். இந்தச் சமய வாழ்வு ஒரே வகையாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. உலகம் பலவிதம். அதுபோலச் சமய வாழ்வும் பலவிதம். இதனையே பல பெரியோர்களது பல திறப்பட்ட வாழ்வைக் கூறி விளக்குகிருர் சேக்கிழார். மக்களிடையே கடவுளைக் காணும் கண்ணில்லாதபோது சமயச் சின்னங்கள் நரகத்திற்கே வழியாகும். இந்த மனநிலையைத்தான் வள்ளுவர் ''மனத்தின் கண் மாசிலன் ஆதல்'' என்று விளக்குகிருர். மாசின்மை என்ன என்பதை மற்ருேர் இடத்தில் ''தூய்மை என்பது அவா வின்மை'' என்று அவரே பொருள் கூறியுள்ளார். அந்தத் தூய்மை வாய்மை வேண்டவரும் என்று அவரே வழியும் காட்டுகிருர். இங்கே வாய்மை என்பது எங்கும் நிறைந்த ஆண்டவன் மக்களிடத்தும் ஜீவலிங்கமாக விளங்குகிருன் என்ற உண்மையை அறிந்து உயிர் வாழ்தலே ஆகும். ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நாதன் நாமத்தை ஓதுவது'' அவனை இவ்வாறு மக்களிடையே கண்டு நெஞ்சுருகித் தொண்டு செய்யும் போதுதான். எனவே அந்தச் சமய வாழ்வு வாழ்க.

# அல்லியரசாணிக் காப்பியங்கள்

தமிழ்நாடு தன்னரசு இழந்து வாடியபோது பாவாணர்கள் சிற்றரசர்களைப் புகழ்ந்து வாழ்ந்தார்கள். அப்போது பொதுமக்கள் இலக்கிய அமுதை உண்டு வாழ்வது எப்படி? பழங்காலத்தில் இருந்தே பொதுமக்கள் பாடல்கள் வழங்கி வந்துள்ளன. ஒவ்வொரு தொழிலாளியும் இத்தகைய பாடல்களைப் பாடி மெய் வருத்தத்தையும் மனத் துயரத்தையும் மறப்பது உண்டு. ஆனால் காப்பியச் சுவையையும் இவர்கள் அனுபவிக்க வேண்டாமா? இதற்கும் இயற்கை அன்னை ஒரு வழி செய்தாள். இன்றும் பூசாரிகள், பிடாரிகோயில், மாரியம்மன் கோயில் முதலிய இடங்களில் பாடிவரக் கேட்கிறோம். திருவிழாவின்போது இரவெல்லாம் இவர்கள் பாடுவார்கள். பொதுமக்கள் கூடிக் கேட்பார்கள். வாய் வழியாகவும் செவி வழியாகவும் வந்த பாடல் வரிகள் பலவற்றை இவர்கள் பாடி வரும்போது தாமாகவும் பாடுவார்கள். சில வருணனைகள் மனப்பாடமாய் இருப்பதால் வேண்டியபோது சில மாற்றங்களோடு அவற்றையே திருப்பித் திருப்பிப் பாடுவார்கள். பொதுமக்கள் காதால் கேட்டுமட்டும் அறிய வேண்டி இருப்பதால் இதில் வரும் வாக்கியங்கள் எல்லாம் ஒரு வரி அளவில் அமைந்திருக்கக் காண்கிறோம். பல வாக்கியங்கள் ஒன்றுபோலவே ஒரே அமைப்பில் விளங்கக் காண்போம். இதனை ஆங்கிலத்தில் ஒரு போக்கு அமைப்பு (Parallelism) என்று வழங்குவார்கள். ஒரு வகையில் இந்தப் பூசாரிகள் எல்லாம் ஆசுகவிகளே என்று கூற வேண்டும். ருஷ்யா முதலிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறு ஆசுகவியாகக் காப்பியம் பாடும் பரம்பரை இருந்ததனைப்

பௌரா (Bowra) சேட்விக் (Chadwick) முதலியோர் ஆராய்ந்து விளக்கியுள்ளார்கள். அத்தகைய பரம்பரையின ரோடு நம்நாட்டுப் பூசாரிப் பாவலர்களையும் ஒருங்கு வைத்து ஆராயவேண்டும்.

இதற்குத் துணை செய்வன அல்லியரசாணி மாலை முத லியன ஆகும். இவை வாய் வழியாகவும், செவி வழியாக வும் வந்த ஆசுகவிக் காப்பியங்களே எனலாம். பதினேழா வது பதினெட்டாவது நூற்றாண்டுகளில் இவைபொதுமக்கள் உள்ளத்தைக் கவர்ந்திருத்தல் வேண்டும். இப்பாடல்களைப் பிச்சைக்கு வரும் குறத்திகளும் பாடிவரக் கேட்கிறோம். ஆனால் அவர்களையும் ஆசுகவிகளாகக் கூறமுடியுமா என்பதை ஆராய்தல் வேண்டும். தமிழ்நாட்டில் கோடை காலத்தில் மக்கள் ஓய்வாக இருக்குபோது திருவிழாக்களைக் கொண் டாடுவார்கள். அக்காலத்தில் இரவுகளில் மகாபாரதக் கதைகளைப் படிப்பதும், நாடகமாக நடிப்பதும் நாடெங்கும் பரவிய வழக்கம். பழங்கதையையே பாடியதோடு இந்தப் பொதுமக்களின் பாவாணர்கள் புதிய கதைகளையும் படைத்துப் பாடினார்கள். இவற்றில் பெரும்பாலானவை முதலில் பாரதத்தோடு தொடர்பு கொண்டே எழுந்தன. அருச்சுனன் பல மனைவியரை மணந்தான் என்பது பாரதம் கூறும் உண்மை. பாண்டி நாட்டுப் பெண்ணையும் மணந்தான் என்று ஒரு கதை உண்டு. தமிழர்கள் இதிலே ஈடுபடுவது இயல்பேயாம். பாண்டியரின் பெண்ணாக மீனாட்சி பிறந்து உலகத்தை வென்று சிவபெருமானை மணந்த கதை அவர்கள் எண்ணி மகிழும் கதை. அருச்சுனன் மணந்த பாண்டிய மகளுக்கு இவர்கள் அல்லி என்று பெயரிட்டார்கள். இவள் கதைகளையும் இவர்கள் எண்ணி மகிழ்ந்தார்கள். இவள் தெய்வத்தன்மை வாய்ந்தவள் ஆதலின் பெண் வயிற்றில் பிறவாது அல்லிப் பூவின்மேல் குழந்தையாக வந்து தோன்றினாள். அல்லி, அருச்சுனனை மணந்த கதையை **அல்லி அரசாணி மாலை** என இந்த ஆசுகவிக் காப்பிய வாணர்கள் பாடி மகிழ்ந்தார்கள்.

அவனுக்கும் புலந்திரன் என்றொரு பிள்ளை. அருச்சுனன்

இந்திரன் மகனுதலின் தமிழ்நாட்டின் வழக்கத்திற்கு ஏற்பப் பாட்டன் பெயரான புரந்திரன் என்பதே பேரனுக்கும் அமைந்தது. லகர ரகர மாறுட்டத்தால் புரந்திரன் என்பது தமிழில் புலந்திரன் என அமைந்தது. இவன் துரியனது தங்கையின் மகளை மணம் புரிந்து கொள்கிருன். இப்படி க்கதையில் ஒரு சிக்கல் எழுகிறது. அவனுடைய மனைவியோ துரியோதனன் ஊரில், கோட்டையில் காவலுக்குள் கிடக்கிருள். யாரும் அறியாதபடி புலந்திரன் அவளைப் போய்க் கூடுகிருன். அவள் கருவடைகிருள். இந்த உண்மை தெரியாத துரியோதனன் அவள் நெறி தவறி விட்டாள் என்று அவளைத் தீயில் குளிக்கச் செய்கிருன். கண்ணன் ஒரு சூழ்ச்சி செய்து உண்மையை விளக்குகிருன். பெருமழை பெய்து நெருப்பெல்லாம் அவிந்து போகிறது. இந்தக் கதையைப் **புலந்திரன் களவு மாலை** என்று தமிழர்கள் ஒரு வாய்வழிக் காப்பியமாகப் பாடி மகிழ்ந்தார்கள்.

புலந்திரன் சிறுவனுக இருக்கும் போது பவளத்தேர் வேண்டும் என்று மன்ருடுகிருன். பவளக்கொடி என்று ஒரு வழக்கு இருப்பதனுல் பவளம் காடாக வளர்கிறது என்று ஒரு எண்ணம் எழுவதும் இயல்பு. இது தமிழ்நாட்டில் வளராத பொருள். ஆகவே தொலை தூரத்தில் இருந்து வரவேண்டும். யாரும் பவளம் கொண்டுவர முற்படவில்லை. அருச்சுனனே வரவேண்டி இருக்கிறது. அவன் பவளக்காடு உள்ள தேம்பூர் நாட்டுக்குப் போகின்ருன். அங்கே பவளக்கொடியாள் என்கின்ற இளவரசியைக் கண்டு காதல் கொண்டு கண்ணனது உதவியால் மணக்கின்ருன். போனவன் வராத கோபத்தால் அல்லி படை எடுத்து வருகிருள். கண்ணனது சூழ்ச்சியால் எல்லாம் இன்பமாக முடிகிறது. இதனையே **பவளக்கொடி மாலை** என ஒரு வாய்மொழிக் காப்பியாக பொதுமக்கள் பாடி மகிழ்கின்ருர்கள்.

தமிழர் நெஞ்சில் துரியோதனன் மிகக் கொடியவனுகக் காட்சி அளிக்கிருன். கன்னன் அவர்கள் நெஞ்சை மிகமிகக் கவர்கிருன். வில்லிபுத்தூரார் கன்னனை இவ்வாறு உயர்த்தி வைத்திருக்கக் காண்கிருேம். சங்க காலத்தில் இருந்தே

வள்ளல்களைப் பாடி மகிழும் நாடு தமிழ்நாடு. தன்னுடைய கவச குண்டலங்களை இந்திரனுக்குத் தன் உயிர்போகும் தறுவாயிலும் தன்உயிரைக் காக்கவேண்டும் என்ற எண்ணம் இன்றி கன்னன் எடுத்து வழங்குகிறான். தன் உயிரைக் காத்து நின்ற அறத்தையே பார்ப்பனச் சிறுவனாக வந்த கண்ணனுக்கு இரத்தத்தாலேயே தாரை வார்த்துத் தருகிறான். கண்ணனே அவனை மெச்சி அவன் சாகும் தருவாயில் காட்சி தருகிறான். இந்த உருக்கமான கதையைக் **கர்ண மகாராஜன் சண்டை** எனப் பாடிப் பொது மக்கள் மகிழ்கிறார்கள்.

இவ்வாறு இவர்கள் கன்னனைப் பாராட்டித் துரியோதனனைப் பழிக்கின்ற நிலை வேறு ஒரு கதையிலும் புலன் ஆகின்றது. பாண்டவர்கள் காட்டில் வாழும்போது அருச்சுனருடைய மனைவியர் எல்லாம் வந்து அல்லியிடம் சேருகின்றார்கள். அந்தச் சமயம் பார்த்துத் துரியோதனன் சேர முயல்கிறான். கன்னன் எவ்வளவு கூறியும் அவன் காதில் விழவில்லை. அல்லி ஆளும் மதுரைக்குத் துரியோதனன் போனதும் அல்லி உடன்படுவதுபோலக் காட்டிக் கொண்டு ஒரு சூழ்ச்சி செய்கிறாள். பலவகை இரத்தினங்களால் ஒரு எந்திர ஏணி அமைக்கிறாள். ஒவ்வொரு ஏணிக்காலிலும் அருச்சுனன் மனைவியரின் பதுமை உயிருள்ளதுபோல விளங்கு கிறது. பத்தாம் படியில் சுபத்திரையின் பதுமை அமைந்து உள்ளது. அதனை அணையப்போகும் போது பல ஆணிகளும் ஈட்டிகளும் துரியோதனன் உடலுக்குள் மாட்டிக் கொள் கின்றன. அந்த ஏணியின் சூத்திரத்தை முடுக்கிவிட்டதும் வேண்டிய இடத்துக்குப் போகும். வேண்டிய இடத்திற்குப் போனதும் உதைத்தால் மதுரைக்குத் திரும்பி வந்துவிடும். இந்த ஏற்பாட்டின்படி சிக்கிய துரியோதனனிடம் ஏணி பல ஊருக்கும் சென்று எல்லோராலும் ஏசப்பட்டு மதுரைக்குத் திரும்பி வருகிறது. கன்னனும் கண்ணனும் மதுரைக்கு வந்து துரியனை விடும்படி அல்லியை வேண்டிக்கொள்கிறார்கள். புலந்திரனும் வேண்டிக் கொள்கிறான். அப்போதுதான் அல்லி சூத்திரத்தில் இருந்து துரியனை விடுவிக்கின்றாள்.

இப்படி அல்லியைச் சுற்றிப் பல காப்பியங்கள் புதியன புதியனவாக எழக் காண்கிறோம். பாரதத்தை ஒட்டியே திரௌபதி குறம், மின்னொளியாள் குறம், பொன்னுருவி மசக்கை, அபிமன்னன் சுந்தரிமாலை முதலிய பல கதைகள் இத்தகைய வாய்வழிக் காப்பியங்களாக எழவும் காண்கிறோம்.

# அம்மானைப் பாடல்கள்

## தமிழர் வீழ்ச்சி

தமிழ்நாடு ஓவென வாழ்ந்த காலமும் உண்டு. தமிழர் கடலில்சென்று பிற நாடுகளோடுவாணிகம் செய்து பொருள் குவித்த காலமும் உண்டு. அங்கே எல்லாம் பண்பாட்டை வளர்த்த காலமும் உண்டு. அரசை நிலைநாட்டிய காலமும் உண்டு. அந்தப் பொற்காலத்தில் எல்லோரும் கல்வியில் ஈடுபட்டார்கள். அதனால் உயர்ந்த நடையில் பல காப்பியங்கள் தோன்றின. இந்தக் காலம் பின்னே மாறிவிட்டது. தமிழரசர் ஆளும் காலம்போய், பிறர் ஆளும் காலம் வந்தது. அந்த ஆட்சியின் வண்மையும் குறைந்தது. கசக்கிப் பிழிந்து வரி வாங்குவது ஒன்றுதான் அரசாட்சி என்பதாயிற்று. பட்டினி, நோய்கள் இவற்றை நீக்க வழி இல்லாமல் பலர் அலைந்தார்கள்.

## புது இலக்கியம்

இந்தக்காலத்தில் கல்வியை யார் கற்பார்கள்? ஒருசிலரே கற்றார்கள். கடவுளையே நம்பிய ஒருசில கல்விமான்கள் கடவுள் செய்தியைப் பாடினார்கள். ''நம்ப முடியாததைக் கடவுள் நமக்காகச் செய்வார். கடவுள்தானே நமக்கு அப்பனும், அம்மையும்; கடவுளை நம்பினோர் கைவிடப் படார்'' என்றெல்லாம்மனத்தில்படும்படி இவர்கள் புராணம் பாடினார்கள். மற்றவர்களோ கடவுள் என்றால், எப்போதும் மக்கள் அதையே கேட்டுக்கொண்டிருக்க முடியாது என்று வேறு கதைகள் பாடினார்கள். படிக்கத் தெரியாதவர்களும் இதைக் கேட்க விரும்பினார்கள். பெண்களும் சிறந்த கதைகளைப் பிறர் பாடினால் கேட்க வந்தார்கள்.

## அம்மானை

கவிஞர்களை அரசர்கள் பாராட்டாத காலத்தில் இப்படி யாகப் பொதுமக்கள் பாராட்டும் வழியொன்று கிடைத்தது. ஆகவே இந்த வகையான கதைகளைப் பல புலவர்களும் பாடினார்கள். இவற்றை **அம்மானைப் பாடல்கள்** என்று வழங்குகிறார்கள். இது அம்மணி அல்லது அம்மனை என்று குறிக்கப்பெறும் பெண்களுக்கென்றே பாடிய பாடலாம். இதனைக் கற்றுக்கொண்டு பாடினால் குறத்திக்கும்கூட நெல்லும், அரிசியும், பழஞ்சீலையும், சிலகாசும் எளிதில் கிடைக்கும். அவ்வளவு விரும்பிப் பெண்களும் கேட்டார்கள். முன்காலத்தில் அம்மானைக் காயை வைத்துக் குழந்தைகள் பாடுகின்ற பாட்டுக்கு அம்மானைப் பாட்டு என்று பெயர். அதுவும் பெண்கள் பாட்டுத்தான். அந்த ஒற்றுமையினாலே இந்தப் புதிய கதைப் பாடல்களையும் அம்மானைப் பாட்டென்றே வழங்கினார்களாம்.

## புராணம்

இந்த அம்மானைப் பாட்டு மக்கள் உள்ளத்தை இப்படிக் கொள்ளை கொண்டதனால் புராணம் பாடியவர்களும்கூட அவற்றை அம்மானைப் பாடலில் பாடவந்தார்கள். **மாக புராண அம்மானை** என்பது போலப் பலநூல்கள் வெளி வந்தன.

## வீரகாவியம்

வீரகாவியம் பாடி அந்தக் காலத்து அரசர்களையோ படைத் தலைவர்களையோ பாடவந்தவர்களும் **இராமப் பையன் அம்மானை** முதலியபோலப் பாட வந்தார்கள். **கட்டபொம்மன் கதை, தேசிங்கு ராஜன் கதை, கான் சாகிபு சண்டை** முதலியவை அந்த வீரர்கள் மறைந்த பின்னர் பாடப்பட்டவை. ஆகவே இவை அரசர்களிடத்தி லிருந்து பணம் பெறுவதற்குப் பாடப்பட்டவை அல்ல. பொதுமக்கள் இந்த வீரர்களை எண்ணிப் புலம்பிப் போற்றி

வந்ததாலேயே சில புலவர்கள் இவற்றை மனம் குழைந்து பாடி வெற்றி பெற்றுர்கள்.

## சிறு தெய்வப் புராணம்

இந்துமதத்தில் பெருந்தெய்வ வழிபாடும் உண்டு; சிறு தெய்வ வழிபாடும் உண்டு. பெருந்தெய்வ வழிபாட்டில் பார்ப்பனர்களும், தீட்சை பெற்ற மற்றவர்களும் ஈடுபட்டு வந்தார்கள். சிறுதெய்வ வழிபாட்டில் பூசாரிகள், உவச்சர்கள் முதலியவர்கள் ஈடுபட்டு வந்தார்கள். எல்லேப் பிடாரி, மாரியம்மன் போன்ற பெண்தெய்வ வழிபாடு, காத்தவராயன், மதுரை வீரன் முதலிய ஆண்தெய்வ வழி பாடு—இவையெல்லாம் இதில் சேரும். இவை நடுகல் வழி பாட்டில் வளர்ந்தவை போலும். கொள்ளே நோய்க்கெல் லாம் தெய்வமாக மாரியம்மனே வணங்கிஞர்கள். கொள்ளே நோய்கள் வரும்போது மாரியம்மன் தாலாட்டைப் பாடுவது வழக்கம். இந்தச் சிறுதெய்வங்களின் வழிபாட்டில் அந்தத் தெய்வங்களேப் பற்றிய வரலாறுகளேயும், புராணக் கதைகள் போல் பூசாரிகள் பாடுவார்கள். இரவில் ஓய்வாக இருந்து ஆண்களும், பெண்களும் விழித்திருந்து கேட்டு மகிழ் வார்கள்.

## நாடோடிப் பாடல்

இந்தக்கதைப் பாடல்களே யார் பாடிஞர்கள் என்று கூடப் பல இடங்களில் நமக்குத் தெரிவதில்லே. பழமொழியை முதலில் சொன்னவர் யார்? விடுகதையை முதலில் புதிராகக் கேட்டவர் யார்? நாடோடிப் பாடல்களேப் பாடியவர் யார்? ஒருவருக்கும் தெரியாது. தனிப்புலவருடைய உடைமை இல்லே, எல்லாம் இங்கே பொதுவுடைமைதான். அதுபோலத் தான் இந்தக் கதைப்பாடல்களும் ஆனுல் காவியம் போல அமைந்திருப்பதால் இவற்றைப் பாடிய புலவர் ஒருவர் இருக்கவேண்டுமென்று பொதுமக்கள் கருதிஞர்கள். புகழேந்தி தலேமேல் இவற்றை ஏற்றிஞர்கள். புகழேந்தி சிறையிலிருந்தபோது இந்த அம்மானேப் பாடல்களேப் பாடிப்

பெண்களிடமிருந்து வேண்டியதெல்லாம் பெற்று வாழ்ந்தார் என்ற கதை வழங்குகிறது. இப்படி ஒருசில அவர் எழுதியுமிருக்கலாம்.

## செய்யுள் நடை

இந்தப் பாடல்களின் நடை நளவெண்பாவின் ஓசையைச் சிலபோது நினைவூட்டும். ஆனால் மூன்றேமுக்கால் அடியாக வாராமல் பல அடிகளாகத் தொடர்ந்து வரும். இதில் பல வித சந்த அமைப்புகளையும் அமைத்துப் பலவேறுபாடுகள் தோன்றக் கதைக்கு ஏற்பப் புலவர்கள் அமைத்து வந்தார்கள். **தேசிங்கு ராஜன் கதையில்** இதனை நன்றாகப் பார்க்கலாம்.

## பாரத இராமாயணக் கதைகள்

இந்த வகையான பாடல்களில் எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்தவை **பவளக்கொடிமாலை, அல்லியரசாணிமாலை** என்பனவாம். இவற்றைப் புகழேந்தி பாடியதாகக் கொள்வார்கள். அந்தக் காலத்தில் ஏன் இந்தக் காலம் வரை, மக்களிடத்தில் எப்படியோ இராமாயணக் கதையும், மகா பாரதக் கதையும் பரவி விட்டன. தங்கள், தங்கள் ஊர்க் கதைகளையெல்லாம், தலபுராணம் பாடிய புலவர்கள் சிவனோடும், பெருமாளோடும் சேர்த்து விட்டதுபோலப் பொதுமக்கள் தங்கள், தங்கள் ஊர்க்கதைகளையெல்லாம் மகாபாரதக் கதைகளோடு சேர்த்துவிட்டார்கள். இப்படி எழுந்தவைதான் **பவளக்கொடிமாலை, அல்லியரசாணிமாலை, மின்னொளியாள் கதை, புலந்திரன்மாலை, ஏணி ஏற்றம்** முதலியன எல்லாம் மகாபாரதக் கதையை வைத்துக் கொண்டு தாங்களாகவே புதிய கதைகளைப் படைத்து மகாபாரதக் கதைகளோடு இணைத்தும் புலவர்கள் பாடியிருக்கலாம். இராமாயணக் கதைகளும் இந்த அம்மானைப் பாடல்களாக வெளிவந்தன. கம்ப இராமாயணத்திலும், வால்மீகி இராமாயணத்திலும் வழங்காது நாட்டில் வழங்கும் கதைகளை இங்குபார்க்கலாம். **சதமுகராவணன்**

கதை, சஹஸ்ரமுக ராவணன் கதை, மயில் ராவணன் கதை இப்படிப்பட்டவை. இவற்றுள் எவ்லாம் எவ்வளவு பழஞ் சரக்கு, எவ்வளவு புதுச்சரக்கு என்று ஆராய்வது அந்தக் காலத்தைப்பற்றி அறிவதற்கு உதவலாம்.

## இலக்கியக் கதை

இலக்கியக் கதைகளும்கூட இந்தவழியில் வெளிவந்தன. கோவலன் கதையை இதற்கு எடுத்துக் காட்டலாம். அந்தக் கதையின் பெயரே கோவிலன் கதை என மாறிவிட்டது. இதிலிருந்து இதனை இலக்கண இலக்கிய அறிவில்லாதவர் ஒருவர் பாடினார் என்பது தெரிகிறது. அங்கே மாதவி பணம் பறிக்கும் தேவடியாள் ஆகிறாள். கண்ணகி காளியாக மாறுகிறாள். அந்தக் கால மக்கள் எதனை விரும்பினார்கள் என்பது இவற்றையெல்லாம் ஆராய்ந்தால் தெரியவரும்.

## நரகக் கதை

நம்முடைய நாட்டில் கீழ்நாட்டுத் தொடர்பால் சீனர்கள்போல நரகங்களை மனம் குழம்பும்படி வருணிப்பது வழக்கமாகிவிட்டது. **கருட புராணம்** அப்படிப்பட்டது, **அருணைப் புராணம்** முதலியவற்றிலும் இதனைக் காணலாம். இந்தக் கதைப் பாடல்களிலும் **சித்திராபுத்திரன் கதை, மார்க்கண்டேயன் கதை** முதலியன இந்தப் பாங்கிலும் செல்லும்.

## வாய்மொழிக் காப்பியம்

ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகளாக இந்தப் போக்கு தமிழ்நாட்டில் வளர்ந்து வந்திருக்கிறது. இன்னமும் ஊர்ப் புறங்களில் இவை மக்களுள்ளத்தைக் கவர்கின்றன. வாய்மொழிக் காப்பியங்கள் என்று ஒருவகைக் காப்பியம் ஐரோப்பிவிலும்கூட ரஷ்யா முதலிய நாடுகளில் வழங்கி வந்தது. இதைக் கவிஞர்கள் ஆசுகவியாகப் படுவார்கள். அப்படி விரைந்து பாடுவது முடியுமா என்று கேட்கலாம். பல சொற்றொடர்கள், பல வருணனை அமைப்புகள் மனப்

பாடமாக இருப்பதால் சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல அவற்றை அடிக்கடி பயன்படுத்திக் கொள்வார்கள். பழங் காலத்தில் கதை முழுவதும், வருணனை முழுவதும் புதிதாக இருக்கவேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கவில்லை. பழைய அடிகளைப் பொன்னே போலப் போற்றுவதைத்தான் அவர்கள் புகழ்ந்து வந்தார்கள். மாறாத உலகில் வாழ்ந்த அந்தக் காலத்து மக்கள் அந்த மாறாத நிலைமையையே தங்கள் காப்பியத்திலும் எதிர்பார்த்தார்கள். ஒரு கதை போல மற்றொரு கதை, ஒரு வருணனை போல மற்றொரு வருணனை, ஒருசொற்றொடர்போல மற்றொரு சொற்றொர் அமைவதை ''ஒருபோகு அமைப்பு'' (Parallelism) எனலாம். ஒரு செய்யுளின் சந்தம்போல மற்றொரு செய்யுளின் சந்தம் அமைவதைப் பாராட்டுவதுபோல இந்தக் கதைச் சந்தங் களையும் அவர்கள் பாராட்டினார்கள். எனவே வாய்வழிக் காப்பியத்தை ஆசுகவியாகத் தாமாகவே பாடுவது எளிதாயிற்று. நம்நாட்டில் பூசாரிகளும்கூடப் பழைய பாடல் வரிகளை மனப்பாடம் செய்துகொண்டு தாமாகவே பாடுவதை இன்னும் பார்க்கிறோம்.

## பல பாடங்கள்

இந்தக் கதைகளைப் பாடும்போது பலரும் தங்கள் தங்களுக்கு ஏற்றவகையில் பாடுவதால் பல வேறுபாடுகள் காணலாம். **மாகபுராண அம்மானை** என்பது இப்படி ஒரு பிரதிக்கும் மற்றொரு பிரதிக்கும் தொடர்பேயின்றியிருப் பதைப் பார்க்கிறோம். எனவே இந்த அம்மானைப் பாடல் களில் பெரும்பாலானவை இப்படி வாய்வழி காப்பியங் களாக வளர்ந்திருக்கலாம். எனவே இவற்றை ஆராய்வது வாய்வழிக் காப்பியத்தைப் பற்றி நாம் அறிவதற்கு உதவும்.

## நாவலின் முன்னோடிகள்

நம்முடைய நாட்டில் நாவல்கள் வெளிவருவதற்கு முன் இப்படிப்பட்ட கதைகளைத்தான் மக்கள் விரும்பிவந்தார்கள். அச்சுப் புத்தகங்கள் வெளிவரும் வரையில் உரைநடையில்

கதைகள் எழுதுவது அருமையாக இருந்தது. அதனாலேயே கதைகள் பாடல்களாக வழங்கின என்றுகூடக் கூறலாம். நாவலும் கதைகளும் வெவ்வேறு இலக்கிய இனத்தைச் சேர்ந்தவை ஆனாலும் நம்முடைய நாட்டில் நாவல்களுக்கு முன்னோடிகளாக இந்தக் கதைகள் அமைந்திருப்பதை ஆராய வேண்டும்.

## இலங்கையிலும்

இலங்கையிலும் கண்ணகியின் காவியம் இத்தகைய கதைப் பாடலாகவே வழங்கி வந்துள்ளது. இதனை அண்மையில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். இந்தக்கதை இன்னும் எத்தனையோ பலவகையில் வழங்கக் காண்கிறோம். கண்ணகி வழிபாட்டைக் கஜபாகு இலங்கைக்குக் கொண்டு போனதாகச் சிலப்பதிகாரமும், இராஜாவளியும் கூறுகின்றன. பத்தினித் தெய்யோ என்று சிங்களவர்களும் கண்ணகியை வணங்கி வருகிறார்கள். பத்தினித்தெய்யோ கதைப்பாடலும் சிங்களத்தில் வழங்குகிறதாம். எனவே தமிழிலங்கையில் வழங்கும் கதைப் பாடல்களையும் ஆராய்வது சுவையுடையதாகும்; பயனுடையதாகும்.

## எமது சிறந்த இலக்கியக் கட்டுரைகள்

| | ரூ. | பை. |
|---|---|---|
| **லெனின்** | | |
| கலை இலக்கியம் பற்றி | 6 | 00 |
| **ப. ஜீவானந்தம்** | | |
| இலக்கியச் சுவை | 4 | 00 |
| கலையும் இலக்கியமும் | 3 | 00 |
| பாரதி வழி | 3 | 50 |
| புதுமைப் பெண் | 4 | 00 |
| மொழியைப் பற்றி | 2 | 50 |
| **மாக்ஸிம் கார்க்கி** | | |
| கடிதங்கள் | 5 | 00 |
| நான் எவ்வாறு எழுதக் கற்றுக் கொண்டேன்? | 6 | 00 |
| **அலெக்ஸி டால்ஸ்டாய்** | | |
| எழுதும் கலை | 3 | 00 |
| **விளாதிமீர் மாயகோவ்ஸ்கி** | | |
| கலையும் மொழியும் | 3 | 00 |
| **நா. வானமாமலை** | | |
| தமிழ் நாவல்கள் ஒரு மதிப்பீடு | 7 | 50 |
| **ரகுநாதன்** | | |
| பாரதியும் ஷெல்லியும் | 10 | 00 |
| **க. கைலாசபதி** | | |
| இரு மகாகவிகள் | 3 | 50 |
| தமிழ் நாவல் இலக்கியம் | 8 | 00 |
| சமூகவியலும் இலக்கியமும் | 9 | 00 |
| **சி. கனகசபாபதி** | | |
| பாரதி-பாரதிதாசன் கவிதை மதிப்பீடு | 11 | 50 |

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.